யைத்தொழுமவர்தஞ்சித்தத்தானை, வம்பவிழுமலர்க்கணைவே
ளுலக்கநோக்கிமகிழ்ந்தானைமதிற்கச்சிமன்னுகின்ற, கம்பனை
யெங்கயிலாயமலையான்றன்னைக் காழகிலொடுகாதுதன்கருகி
யேத்து, நம்பனையெம்பெருமானைநாதன்றன்னைநாரையூர்ந
ன்னகரிற்கண்டேனுனே. ச

தக்கனதுவேள்விகெடச்சாடினானைத்தலைகளைப்பலி
யேற்றதலைவன்றன்னைக், கொக்கரைசச்சரிவீணாபாணியா
னைக் கோணகம்பூணைக் கொண்டான்றன்னை, யக்கினைடு
மென்பணிந்தவழகன்றன்னை யறுமுகனைடானைமுகற்கன்
பன்றன்னை, நக்கனைவக்கரையானைநள்ளாற்றானைநாரையூர்
நன்னகரிற்கண்டேனுனே. ஞ

திருச்சிற்றம்பலம்.

ஈ.சு. திருக்கடம்பூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானமர்திங்களுரிமருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமரும்பிணைபுல்கிக்கலைபயிலுங்கடம்பூரிற்
றுனமர்கொள்கையினானைத்தாடொழவீடெளிதாமே. க

அரவினைடாமையும்பூண்டுவந்துகில்வேங்கையதனும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாத
மிரவும்பகலும்பணியவின்பமுக்கதுவாமே, உ

விடைருவிலுங்கொடியாணெவண்கொடிசேர்நெடுமாடங்
கடைருவிலுங்கடம்பூரிற்காதலிணக்கடற்காழி
நடைருவின்ஞானசம்பந்தனன்மையாலேத்தியபத்தும்
படைருவில்பாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தளருங்கோளரவத்தொடுதண்மதி
வளருங்கோலவளர்சடையார்க்கிடங்
கிளரும்பேரிசைக்கின்னரம்பாட்டறக்
களருங்கார்க்கடம்பூர்க்கரக்கோயிலே. ஙி

ஙங்கடம்பணைப்பெற்றவள்பங்கினன்
றென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
தன்கடன்னடியேணையுந்தாங்குத
லென்கடன்பணிசெய்துகிடப்பதே. ஙூ

வரைக்கணலெஞ்சுதோளுடையான்றலை
யரைக்கலுன்றியருள்செய்தவீசனூர்
திரைக்குருந்தண்புனல்சூழ்கரக்கோயிலை
யுரைக்குமுள்ளத்தவர்வினையோயுமே. ஙெ

திருச்சிற்றம்பலம்.

ஙரு திருப்பந்தணைநல்லூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-புறநீர்மை. ஙு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இடறினர்கூற்றைப்பொடிசெய்தார்மதிலெயிலைவைசொல்
லியலெழுந்தேத்தத்தக்,கடறினராவர்காற்றுளராவர்காதலி
த்திறைதருகோயில், கொடிறனர்யாதுங்குறைவிலார்தாம்
போய்க்கோவணங்கொண்டுகூத்தாடும், படிறனர்போலும்ப
ந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. க

கழியுளாரெனவுங்கடலுளாரெனவுங்காட்டுளார்காட்டு ளாரெனவும், வழியுளாரெனவுமலையுளாரெனவுமண்ணுளார் விண்ணுளாரெனவுஞ், சுழியுளாரெனவுஞ்சுவடுதாமறியார் தொண்டர்வாய்வந்தனசொல்லும், பழியுளார்போலுமபந் தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. உ

கல்லிசையூணைக்கலியொலியோவாக்கழுமலமுது பதிதன்னி, னல்லிசையாளன்புல்லிசைகேளாநற்றமிழ்ஞானசம்பந்தன், பல்லிசைபகுவாய்ப்படுதலையேந்திமேவியபந்தணைநல் லூர், சொல்லியபாடல்பத்தும்வல்லவர்மேற்றொல்வினைசூழ் கிலாவே. சக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நோதங்கமில்லாதார்நாகம்பூண்டார்நூல்பூண்டார்நா ன்மேலோராமைபூண்டார், பேய்தங்குகீள்சாட்டினட்டபா டிப்பிறைசூடுஞ்சடைமேலோர்புனலுஞ்சூடி, யாதங்குபைங் குழலாள்பாகங்கொண்டாரனல்கொண்டாரந்திவாய்வண்ண ங்கொண்டார், பாதங்கணீரேற்றுபைங்கணேற்றூர்பலியேற் றூர்பந்தணைநல்லூராரே. க

திருச்சிற்றம்பலம்.

கூசு. திருக்கஞ்சனூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்சூலம்வலனேந்தினீமூன்றுசுடர்க்கண்ணு னீமூர்த்திதன்னீ,காவலனீநரையிடையொன்றேறுவானீநா ல்வேதமாறங்கமாயினீனீ, யானினிஞ்தாதுகந்தாயமரர்கோ வையன்றிருமாலானீயனலோன்போற்றுங், காவலனீக் கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக் கண்ணுக்கண்டுய்ந் தேனே. க

மடலாழித்தாமரையாயிரத் திலொன்றுமலர்க்கணிடங்
திதலுமேமலிவான்கோலச், சுடராழிதெடுமாலுக்கருள்செ
ய்தானேத்தும்பியுரிபோர்த்தானேத்தோழன்விட்ட, வடலா
ழித்தேருடையலிலங்கைக்கோனை யருவரைக்கிழடர்த்தானை
யாளார்கருணைக், கடலானேக்கஞ்சனூராண்டகோவைக்கற்
பகத்தைக்கண்ணுரக்கண்டுய்ந்தேனே. கo

திருச்சிற்றம்பலம்.

கூஎ. திருக்கோடிகா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திநவிராகம் பண் - நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றனிச்சையாற்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
பின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. க

அல்லன்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினாடுதங்கடப்மினே
வில்லையன்னவாணுதல்வெள்ளையோர்பாகமாக்
கொல்லவெஞ்சூலையேற்றினன்கோடிகாவுசேர்மினே. உ

முன்னைநீர்செய்பாவத்தான்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையின்மூழ்கிநீரெழும்மினே
பொன்னைவென்றகொன்றையான்பூதம்பாடவாடலான்
கொன்னவிலுமீவேலினன்கோடிகாவுசேர்மினே. ங

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ஒன்பதாந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சங்குலாமுன்கைத்தையலோர்பாகத்தன்
வெங்குலாமதவேழம்வெகுண்டவன்
கொங்குலாம்பொழிற்கோடிகாவாவெனா
வெங்கிலாததோரின்பம்வந்தெய்துமே. ௧

வாடிவாழ்வதென்னைவதுமாதர்பா
லோடிவாழ்வினையுள்கிநீர்நாடொறுங்
கோடிகாவனைக்கூறுமேற்கூறினேன்
பாடிகாவலிற்பட்டுக்கழிதிரே. ௨

நாடிநாரணனன்முகன்வானவர்
தேடியேசறவுந்தெரியாததேதார்
கோடிகாவனைக்கூறுதநாளெலாம்
பாடிகாவலிற்பட்டுக்கழியுமே. ௩

வரங்களால்வரையையெடுத்தான்றனை
யரங்கவூன்றியருள்செய்தவப்பனூர்
குரங்குசேர்பொழிற்கோடிகாவாவென
விரங்குவன்மனத்தேதங்கடீரவே. ௪

திருச்சிற்றம்பலம்.

---

௩௭. திருமங்கலக்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிரிஞர்மணிபும்மகில்சந்துஞ்செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கலிருந்தபுராணனே. ௧

பணங்கொளாடரவல்குனல்வார்பயின்றேத்தவே
மணங்கொண்மாமயிலாலும்பொழின்மங்கலக்குடி
யிணங்கிலாமறையோரிமையோர்தொழுதேத்திட
வணங்கினேடிருந்தானடியேசரணுகுமே. ௨

பந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
வெந்தையையிலார்பொழிற்காழியர்கவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திஞானசம்பந்தன்சொன்
மூர்த்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தங்கலப்பியதக்கன்பெருவேள்வி
யங்கலக்கழித்தாரருள்செய்தவன்
கொங்கலர்க்குழற்கொம்பினீயாளொடு
மங்கலக்குடிமேயபணாளனே! க

மங்கலக்குடியீசனேமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணெடுமண்ணுநேர்
சங்குசக்கரதாரிசதுமுக
னங்ககத்தியனும்மர்ச்சித்தாரன்றே. கூ

மங்கலக்குடியான்கயிலம்மலை
யங்கலித்தெடுக்குற்றவரக்கர்கோன்
றலங்கரத்தொடுதாடலீதேடகர்ந்
தங்கலத்தழுதுய்த்தனன்றானன்றே. கஎ

திருச்சிற்றம்பலம்.

கூகூ. திருப்பனந்தாள்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பஸ்-பஞ்சமம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலிநெற்றியினன்றிகழ்கையிலொர்வெண்மழுவான்
பெண்புனைர்கூறுடையான்றிருப்பிடைமால்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையிச்சரமே. க

விரித்தவனன்மறையைமிக்கவிண்ணவர்வந்திறைஞ்ச
வெரித்தவன்மூப்புரங்களியலேழுகில்லுயிரும்

பிரித்தவன்செஞ்சடைமேனிறைபேரொலிவெள்ளந்தன்னைத்
தரித்தவனூர்பணந்தாட்டிருத்தாடகையீச்சரமே. உ

தண்வயல்சூழ்பணந்தாட்டிருத்தாடகையீச்சரத்துக்
கண்ணியலேபிறையானவன்றன்னைமுன்காழியர்கோ
னண்ணியசெந்தமிழான்மிகுஞானசம்பந்தனல்ல
பண்ணியல்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. கக

திருச்சிற்றம்பலம்.

சஅ. திருவாப்பாடி.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கடலகமேழினெடும்புவனமுங்கலந்தவிண்ணு
முடலகத்துயிரும்பாருமொள்ளழலாகிநின்று
தடமலர்க்கந்தமாலைதண்மதிபதுமாகி
மடலவிழ்கொன்றைசூடிமன்னுமாப்பாடியாரே. க

திண்டிறலரக்கனெடிச்சியலாயந்தன்னை
யெண்டிறலிலனுமாகியெடுத்தலுமேழையஞ்ச
விண்டிறனெரியவூன்றிவிகக்கடுத்தலறிவீழப்
பண்டிறல்கேட்டுகந்தபரமராப்பாடியாரே கஅ

திருச்சிற்றம்பலம்.

சக. திருச்சேய்ஞலூர்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பஞ்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தூலடைந்தகொள்கையாலேதுன்னடிகூடுதற்கு
மாலடைந்தநால்வர்கேட்கநல்கியநல்லறத்தை
யாலடைந்தநீழன்மேவியருமறைசொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. க

பீடைடைந்தபாலதாட்டப்பேணுதவன்றுதை
வேரடைந்துபாய்ந்ததாளிவேர்த்தடிந்தான்றனக்குத்

தாரடைந்தமாலேசூட்டித்தலைமைவகுத்ததென்னே
சீரடைந்தகோயின்மல்குசெய்ஞலூர்மேயவனே. எ

சேயடைந்தசெய்ஞலூரிற்செல்வனசிர்பரனித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணிபுரத்தலீவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின்னிசைசல்
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்பவரே. கக

திருச்சிற்றம்பலம்.

சஉ. திருந்துதேவன்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கோல்லி. கூ-ந் திருமுறை.

பாருந்தவெண்டில்லைமந்திரந்சன்னிலை
பரிந்துகேட்கப்படும்புண்ணியங்கள்னிலை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
வருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. க

வீதிபோக்காவனவீணையைவிட்டுவ்வன
வோதியோர்க்கப்படாப்பொருளோர்விப்பன
தீதிறேவன்குடித்தேவர்தேவெய்திய
வாதியந்தம்மிலாவடிகள்வேடங்களே. உ

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றனை
யாடமோங்கும்பொழின்மல்குசண்காழியா
ளுடவல்லதமிழ்ஞானசம்பந்தன
பாடல்ப்தும்வல்லார்க்கில்லையாம்பாவமே. சக

திருச்சிற்றம்பலம்.

சஙு திருவியலூர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண் - நட்டபாடை. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்கமழ்நறுமென்குழலரிவையவள்வெருவப்
பொருவெங்கரிபடவென்றதனரிவையுடனணிவோ
னரவம்மலிபுனலும்மிளமதியுங்கருதலியும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே. க

ஏறூர்தருமொருவன்பலவுருவன்னிலையானை
னூறூர்தருசடையன்னனலுருவன்புலியுடையான்
மாறூர்புரமெரியச்சிலைவளைவித்தவன்மடவாள்
வீறூர்தரநின்றுனிடம்விரிநீர்வியலூரே. உ

விளங்குமம்பிறைசடைமேலுடைவிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டெதார்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன்
வளங்கிறமிழ்பரவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனேடுயர்விண்ணும்முடையாரே. கக

திருச்சிற்றம்பலம்.

சசு. திருக்கொட்டையூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். சுஈந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருமணிபோற் கண்டத்தழகன் கண்டாய்கல்லாலினிழற்
கீழிருந்தான்கண்டாய், பருமணிமாதாகம்பூண்டான்கண்டா
ய்பவளக்குன்றன்னபரமன்கண்டாய், வருமணிநீர்ப்பொன்
னிவலஞ்சுழியான்கண்டாய்மாதேவன்கண்டாய்வரதன்கண்
டாய், குருமணிபோலழகமருங்கொட்டையூரிற்கோடீச்ச
ரத்துறையுங்கோமான்றானே. க

தளங்கிளருந்தாமரையானனத்தான்கண்டாய்தசரதன்
றன்மகனைசவுதவிர்த்தான்கண்டா, யிளம்பிறையுமுதிர்ச
டைமேல்வைத்தான் கண்டாயெட்டெட்டிருங்கலையுமானான்
கண்டாய், வளங்கிளர்நீர்ப்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்
மாமுனிகடாமுதிதழுபொற்கழலான்கண்டாய், குளங்கிளர்
செங்குவளைகிளர்கொட்டையூரிற் கோடீச்சரத்துறையுங்
கோமான்றானே. கூ

திருச்சிற்றம்பலம்.

சரு. திருஇன்னம்பர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சாதாரி. சுஉ-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய
வண்டிசைக்குஞ்சடையீரே
வண்டிசைக்குஞ்சடையீருமைவாழ்த்துவார்
தெண்டிசைக்குந்தொழிலோரே. க

யாழ்நரம்பின்னிசையின்னம்பர்மேவிய
தாழ்தருசடைமுடியீரே
தாழ்தருசடைமுடியீருமைச்சார்பவ
ராழ்துயரருவினையிலரே. உ

ஏடமர்பொழிலணிபின்னம்பரீசனை
நாடமர்ஞானசம்பந்த
னாடமர்ஞானசம்பந்தனற்றமிழ்
பாடவல்லார்பழியிலரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

நிருவிருத்தம். சுஉ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மன்னுமலிகள்கையால்வருடினமாமறைகள்
சொன்னதிறதொறுந்தூப்பொருளாயனதூக்கமதுத்
தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்குருத்தி
யின்னல்களைவனவின்னம்பரான்றனிணையடியே. க

போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
யாற்றுந்தகையனவாறுசமயத்தவரவரைத்
தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்செந்நெறிக்கே
யேற்றுந்தகையனவின்னம்பரான்றனிணையடியே. எ

பயம்புன்மைசேர்தருபாவர்தமிர்ப்பனபார்ப்பதிதன்
குயம்பொன்மைமாமலராக்கக்குலாவினகூடவொண்ணைச்
சயம்புவென்றேதகுதாணுவென்றேசனிர்வேதங்கணின்
றியம்புங்கழலினவின்னம்பரான்றனிணையடியே. அ

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம் கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

என்னிலாருமெனக்கினியாரில்லை
யென்னிலுமினியானொருவன்னுள
னென்னுளேயுபிரப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே. க

தொழுதகுரைமலர்தூவித்தொழுதுதுதினை
முழுதுகாமுற்றமுற்றுங்கின்முரையும்
பொழுதுபோக்கிப்புறக்கணிப்பாரையு
மெழுதுங்கிழக்கணக்கின்னம்பரீசனே. உ

சனியும்வெள்ளிபுந்திங்களுஞாயிறு
முனிவனுப்முடிபத்துடையான்றனைக்
கனியவூன்றியகாரணமென்கொலோ
வினியனுய்கின்றனின்னம்பரீசனே ச0

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம் கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அல்லிமலர்நாற்றத்துளர்போலுமன்புடையார்சிந்
தையுங்கலார்போலுஞ், சொல்லிலாமறைகடாமேபோலுந்தூ
நெறிக்குவழிகாட்டுந்தொழிலார்போலும், வில்லிற்புரமூன்
றெரித்தார்போலும்வீங்கிருணுல்வெளியமானர்போலு, மெ
ல்லிநடமாட வல்லார்போலு மின்னம்பர்த்தான்முன்றியீச
னரே. க

கோழிக்கொடியோன்றன்முதலோடுங்கொம்பனுள்
பாகங்குளிர்ந்தார்போலு, மூழிமுதல்வருந்தாமேபோலு
முள்ளுவாருள்ளத்தினுள்ளார்போலு, மாழித்தேர்வித்தக
ருந்தாமேபோலு மடைந்தவர்கட்கன்பராய்நின்றார்போலு,
மேழுபிறவிக்குந் தாமேபோலு மின்னம்பர்த்தான் முன்றி
யீசனரே. உ

திருச்சிற்றம்பலம்.

ஆசு. திருப்புறம்பயம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பறம்பயமலைந்தவர்மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்தனதுநீர்மை
திறம்பயனுறும்பொருடெரிந்துணருநால்வர்க்
குறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய். க

சிரிந்தனைகுவிந்தனைவிழுங்குபிறுமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்;
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயமமர்ந்தோய். உ

கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தங்
கருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்
கரும்பனிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறிவொருங்குவர்பிறப்பே. ங

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம். ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொடிமாடநீடெருவுகூடல் கோட்டூர்கொடுங்கோளூர்
தண்வளவிகண்டியூரு, நடமாடுகன் மருகல்வைகிநாளுகலமா
குமொற்றியூரொற்றியாகப், படுமாலிவண்டறையும்பழனம்
பாசூர்பழையாறும்பாற்குளமுங்கையிட்டிங்காட்,பொடியே
றுமேனியராய்ப் பூதஞ்சூழப் புறம்பயநம்மூரென்றுபோயி
னீரே. க

செத்தவர்தந்தலைமாலைகையிலேந்திச்சிரமாலைசூடிச்சிவ
ந்தமேனி, மத்தகத்தயானீனபுரிவைமூடிமடவாளவளோடுமா
னேன்றேந்தி, யத்தவத்ததேவரறபதின்மராறுநூறுயிரவர்
க்காடல்காட்டிப், புத்தகங்கைக்கொண்டுபுலித்தோல்வீக்கிப்
புறம்பயநம்மூரென்றுபோயினீரே. உ

கோவாயவிந்திரனுள்ளிட்டாரக் குமரனும் விக்கினரா
ஞாயகனும், பூவாயபீடத்துமேலயனும்பூமியளந்தானும் போ
ற்றிசைப்பப், பாவாயவின்னிசைகள்பாடியாடிப்பாரிடமுந்
தாழும்பரந்துபற்றிப், பூவார்ந்தகொன்றைபொறிவண்டார்
க்கப்புறம்பயநம்மூரென்றுபோயிருரே. கஏ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமோதியோராறைமேற்றளிகின்றும்போந்தவந்
தின்னம்பர்த், தங்கியேனைமைபு மின்னதென்றிலரீசனெழு
நெஞ்சமே, கங்குலேமங்கள்கொண்டுதேவர்களேத்திவாள
வர்தான்றொழும், பொங்குமால்விடையேறிசெல்வப்புறம்
பயந்தொழப்போதுமே.

பதியுஞ்சுற்றமும் பெற்றமக்களும் பண்டையரல்லர்பெ
ண்டிருந், நிதியிலிம்மனைவாழும்வாழ்க்கையுநீணப்பொழிம்
மடநெஞ்சமே, மதியஞ்சேர்சடைக் கங்கையானிடம்பகி
ழுமல்லிகைசெண்பகம், புதியபூமலர்ந்தெல்லிநாறும்புறம்பய
ந்தொழப்போதுமே. உ

தோஞ்சியும்பிறந்தஞ்சிறந்தூர்துயக்குறுதமயக்கினை,யஞ்
சியூரான்திருப்புறம்பயத்தப்பனீத்தமிழ்ச்சிரிரு; னெஞ்சினு
லேபுறம்பயந்தொழுதய்திமென்றுநீணைத்தன, வஞ்சியாது
சைசெய்யவல்லவர்வல்லவானுலகாள்வரே. கஏ

திருச்சிற்றம்பலம்.

சஎ. திருவிசையமங்கை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ஈ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மருவமர்குழலுமைபங்கர்வார்சடை
யரவமர்கொள்கையெம்மடிகள்கோயிலாங்

சூரமர்சுரபுன்னைகோங்குவேங்கைகள்
விரவியபொழிலணிவிசயமங்கையே, க

கிதமுளிசைதரக்கிளரும்வீணையர்
பூதமுன்னியல்புடைப்புனிதர்பொன்னகர்
கேதனம்வழிபடக்குலவுநான்மறை
வேதியர்தொழுதெழுவிசயமங்கையே. உ

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை
நண்ணியபுகலியுண்ஞானசம்பந்தன்
பண்ணியசெந்தமிழ்பத்தும்வல்லவர்
புண்ணியர்சிவகதிபுகுதல்திண்ணமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

தனித்திருத்தாண்டகம். இ-ன் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சூசையுமங்கையிற்கோசமுங்கொண்டவல்
வசையின்மங்கலவாசகர்வாழ்த்தவே
யிசையமங்கையுந்தானுமொன்றுயினன்
விசையமங்கையுள்வேதியன்காண்மினே. க

கொள்ளிடக்கரைக்கோவந்தபுத்தூரில்
வெள்ளிடைக்கருள்செய்விசையமங்கை
யுள்ளிடத்துறைகின்றவுருத்திரன்
கிள்ளிடத்தலையற்றதையனுக்கே. ங

பாண்டுவின்மகன்பார்த்தன்பணிசெய்து
வேண்டுநல்வரங்கொள்விசையமங்கை
யாண்டவன்னடியேதினந்தாசையாற்
காண்டலேகருத்தாகியிருப்பனே. அ

இலங்கைவேந்தனிருபதுதோளிற
லிலங்கல்சேர்ந்திரலான்விசையமங்கை
வலஞ்செய்வார்களும்வாழ்த்திசைப்பார்களும்
நலஞ்செய்வாரவர்நன்னெறிநாடியே. கo

திருச்சிற்றம்பலம்.

சஅ. திருவைகாவூர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண் - சாதாரி. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோழைமிடறுகளீகோளுமிலவாகளிசைகூடும்வகையா
யேழையடியாரவர்கள்யாவைசொனசொன்மகிழுமீசனிடமார்
தாழைபிளநீர்முதியகாய்கமுகின்வீழநிரைதாறுசிதறி
வாழையுதிர்வீழ்கனிகளுறிவயல்சேறுசெயும்வைகாவிலே.

அண்டமுறுமேருவரையங்கிகணாணரவதாகவெழிலர்ர்
விண்டவர்தமுப்புரமெரித்தனிகிர்தன்னவன்விரும்புமிடமாம்
புண்டரிகமாமலர்கள்புக்குவிளையாடுவயல்சூழ்தடமெலாம்
வண்டினிசைபாடவழனார்குயின்மிழற்றுபொழில்வைகாவிலே

முற்றுநமையாளுடையமுக்கண்முதல்வன்றிருவைகாவிலித
செற்றமவினர்சிரபுரத்தலிவன்ஞானசம்பந்தனுரைசெ[னைச்
யுற்றதமிழ்மாலையீரைந்துமிவைவல்லவருருத்திரரெனப்
பெற்றமரலோகமிகவாழ்வர்பிரியாரவர்பெரும்புகழொடே.

திருச்சிற்றம்பலம்.

சகூ. திருவடகுரங்காடுதுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சாதாரி. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோங்கமேகுரவமேகொழமலர்ப்புன்னையேசெ தடிமுல்லை
வேங்கையேஞாழலேவிம்முபாதிரிகளேவிரவியெங்கு
மோங்குமகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
வீங்குநீர்ச்சடைமுடியடிகளாரிடமெனவிரும்பினரே. க

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
[வானியார்வழிபடப்பொருந்தினர்திருந்துமாஞ்சனிகளுந்தி
யாலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளீடினையவல்வினைகள்வீடே. எ

தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறைப்
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனீக்
காழியானருமறைஞானசம்பந்தனகருதுபாடல்
கோழையாவாழைப்பிணங்கூடுவார்நீடுவானுலகினூடே.

திருச்சிற்றம்பலம்.

நூ0. திருப்பழனம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. க

கண்டேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணுறுதிரமெதிராரேடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணுதலதைத்தவெந்தைபெருமானிமவான்பகளோடும்
பண்ணுர்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. உ

வேய்முத்தேதாங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ணெய்முத்தனையதிறலான்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைகூத்தும்வல்லார்நல்லரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

பண்-பழந்தக்கராகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலீனங்காள்சொல்லீரே
பன்மாமலரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனெம்புதுநலமுண்டிகழ்வானே. க

கண்டகங்காள்முண்டகங்காள்கைதைகாள்கெய்தல்காள்
பண்டரங்கவேடத்தன்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணங்
கொண்டுநான்தானறிவான்குறிக்கொள்ளாதொழிவானே.

மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றூதாய்ச்சோர்வாளே.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்பும்அப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. கூ

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கண்ணனும்பிரமனேடுகாண்கிலராகிவந்தே
எண்ணியுந்திதித்தமேத்தவெரியுருவாகிநின்று
வண்ணனன்மலர்கடிவாழ்த்துவார்வாழ்த்தியேத்தப்
பண்ணுலாம்பாடல்கேட்டார்பழனத்தெம்பரமனாரே. கூ

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அலையார்கடனஞ்சமுண்டார்தாமே யமரர்களுக்கருள்
செய்யுமாதிதாமே,கொலையாயகூற்றமுதைத்தார்தாமேகொ
ல்வேங்கைத்தோலொன்றசைத்தார்தாமே, சிலையாற்புரமூ
ன்றெரித்தார்தாமேதீநோய்களேந்தென்னையாண்டார்தாமே,
பலிதேர்ந்தழகாய பண்பர்தாமே பழனநகரெம்பிரானார்
தாமே. க

திருச்சிற்றம்பலம்.

நுக. திருவையாறு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-மேகராகக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டை
மேலுய்ந்தி, யலமந்தபோதாகலஞ்சேலென்றருள்செய்வான
மருங்கோயில், வலம்வந்தமடவார்க ணடமாடமுழவதிர

மழையென்றஞ்சிச், சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்
குந்திருவையாறே. க

கங்காளர்கயிலாய மலையாளர்கானப்பேராளர்மங்கை,
பங்காளர்திரிசூலப்படையாளர் விடையாளர்பயிலுங்கோயில்,
கொங்காளப்பொழிலுழைந்து கூர்வாயாலிறகுலர்த்திக்கூத
னீங்கிச், செங்கானல்வெண்குருகுபைங்கானலிரைதேருந்
திருவையாறே. உ

வேந்தாகிவிண்ணவர்க்குமண் ணவர்க்குநெறிகாட்டும்
விகிர்தனுகிப், பூந்தாமருங்கொன்றைச்சடைக்கணிந்தபுண்
ணியனூர்நண்ணுங்கோயில், காந்தாரமிசையமைத்துக்காரி
கையார்பண்பாடக்கனிஞர்வீதித், தேந்தாமென்றரங்கேறிச்
சேயிழையார்நடமாடுந்திருவையாறே. சு

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனுர்.

பண்-கொல்லிக்கௌவாணம். சுஎ-ஆம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாதர்பிறைக்கண்ணியானைமலையான்மகளோடும்பாடி
போதெரிநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். க

போழிளங்கண்ணியினைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவே
ணிலவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். உ

வளர்மதிக்கண்ணியினைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததேர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போடையாறடைகின்றபோது
விளமணிநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

பண்-பழந்தக்கராகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடிநாயேன்வேண்டியக்காலியாதொன்று
மிடைகிலேனமணர்கடமறவுரைகேட்டலம்நேதன்
றொடர்கின்றேனுன்னுடையதூமலர்ச்சேவடிகாண்பா
னடைகின்றேனியாறர்க்காளாய்நானுய்ந்தேனே. க

செம்பவளத்திருவுருவர்திகழ்சோதிக்குழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்கிற்கோல்வளையாளொருபாகர்
வம்பவிழ்மலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்து
வம்பவளவையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. உ

நணியானேசேயானேநம்பானேசெம்பொன்னின்
றுணியானேதேனாலேசுண்ணவெண்ணீற்றானே
மணியானேவானவர்க்குமருந்தாகிப்பிணிதீர்க்கும்
அணியானேயையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. ங

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுதகரணஞ்செய்துகந்தசிவமூர்த்தி
பெருவரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்து
மருவரைசூழையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. ச0

திருச்சிற்றம்பலம்.

பண்-திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைச்சகமலாதடிமையில்லைக்
கானலாதாடலில்லைக்கருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழன்மங்கையோடு
மானலாதூர்வதில்லையையனேயாறனுர்க்கே. க

எரியலாலுருவமில்லையேறலாலேறலில்லைக்
கரியலாற்போர்வையில்லைக்காண்டகுசோதியார்க்குப்
பிரியிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்து
மரியலாற்றேவியில்லையையனேயாறனுர்க்கே. ங

சகமலாதடிமையில்லைத்தானலாற்றுணையுமில்லை
நகமெலாநேயக்கையாணண்மலர்தொழுதுதூவி

முகமெல்லாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்தத்தொண்ட
ரகமலாற்கோயிலில்லையையனீயாறனுக்கே. ஆ

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம். ஈஈந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியசிந்திப்பவர்க்குச்சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்தித்துகின்றபழவினைதீர்ப்பனபாம்புசுற்றி
யந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே. க

இருடருதன்பப்படலமறைப்பமெய்ஞ்ஞானமென்னும்
பொருடருகண்ணிழுக்கண்பொருணெடிப்புகளிழுக்க
குருடருந்தம்மைப்பரவக்கொடுநரகக்குழிநின்
றருடருகைகொடுத்தேற்றுமையாறனடித்தலமே. ச

தின்பக்கடலிடைத்தோணித்தொழில்பூண்டதொண்டர்தம்மை
யின்பக்கரைமுகந்தேற்றுந்திறத்தனமாற்றயலே [ருந்தா
பொன்பட்டொழுகப்பொருந் தொளிசெய்யுமப்பொய்பொ
வன்பர்க்கணியனகாண்கவையாறனடித்தலமே. ஈ

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம். ஈஈந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மலையார்மடந்தைமனத்தனவாரூர்முகுடமன்னி
நிலையாயிருப்பனநின்றூர்மதிப்பனநீணிலத்துப்
புலையாடுபுன்மைதனிர்ப்பனபொன்னுலகம்மளிக்கு
மலையார்புனற்பொன்னிசூழ்ந்தவையாறனடித்தலமே.

பொலம்புண்டரீகப்புதுமலர்போல்வனபோற்றியென்பார்
புலம்பும்பொழுதும்புணர்துணையாவனபொன்னையாவி
லிலம்புஞ்செறிபாடகமுஞ்செழுங்கிண்கிணிச்சிலம்பு
மலம்புந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. கூ

உற்றாரிலாதார்க்குறுதுணையாவனவோதிநல்லூர்
கற்றூர்பரவப்பெருமையுடையனகாதல்செய்ய
கிற்பார்தமக்குக்கிளரொளிவானகஞ்சான்கொடுக்கு
மற்றூர்க்கரும்பொருள்காண்கவையாறனடித்தலமே.

பேணித்தொழுமவர்பொன்னுலகாளப்பிறங்கருளா
லேணிப்படிநெறிவிட்டுக்கொடுத்திமையோர்முடிமேன்
மாணிக்கமொத்தமரகதம்போன்றுவயிரமன்னி
யாணிக்கனகமுமொக்குமையாறனடித்தலமே. ஊ

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். ஊ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானுய்நீயேயுலகுக்கொருவனுய்நின்
றாய்நீயே, வாசமலரெலா மானுய்நீயேமலையான்மருகனுய்
நின்றாய்நீயே, பேசப்பெரிதுமினியாய்நீயேபிரானுயடியேன்
மேல்வைத்தாய்நீயே, தேசனிளக்கெலாமானுய்நீயேதிருவை
யாறகலாதசெம்பொற்சோதீ. க

எல்லாவுலகுமானுய்நீயேயெம்பெருமானிருந்தாய்நீயே,
நல்லாரைநன்மையறிவாய்நீயே ஞானச்சுடர்விளக்காய்நின்
றாய்நீயே, பொல்லாவினைகளறுப்பாய்நீயேபுகழ்ச்சேவடியெ
ன்மேல்வைத்தாய்நீயே, செல்வாயசெல்வந்தருவாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. எ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனெண்பண்டேயும்மைப்பயிலாதே
னிரவும்பகலுநினைந்தாலுமெய்தநினையமாட்டேனென்
கரவிலருளுமுகுண்டத்தெங்கங்குலுக்கீழ்க்கருப்பாலை
யரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. க

எங்கேபோவேனுயிடமுமங்கேயங்கெதன்மனத்தீராய்ச்
சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளெக்கவே
கங்கைசடைமேற்கரந்தாயேகலமாண்மறியுங்கையனே
திங்கள்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீ
ரோடியிருந்துமுணர்கிலேனும்மைத்தொண்டனாரேனென்

தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்ப
ஞற்றைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. ஈக

திருச்சிற்றம்பலம்.

நூஉ. திருநெய்த்தானம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மையார்மிடற்றண்டன்மிழலைமகள்பாகமதிடையான்
கையாடியகேடில்கிரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்ந்தனத்தகீழ்தேளாடுந்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. உ

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூர்
நறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனமடவார்பயினெய்த்தானமெனீரே. ஊ

கலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
னிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானநீகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வண்ணடிசேர்வர்சிவகதியே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தானத்தகம்படியுணர்வார்நின்று வேண்டிற்முக்கு
றைமுடித்து வினைக்குக்கூடார், மித்தானத் திருந்திங்கனுய
ரானெண்ணுமினையொழியியம்பக்கேளாழைநெஞ்சே, நை
த்தான நீணயனிபங்கன்வங்கம் வருதிரைநீர்நஞ்சுண்டகண்
டன்மேய, நெய்த்தானநன்னகரென்றேற்றிருந்தாலினையுமா
கினைந்தக்காலுய்யலாமே. க

நினைத்தனையோர்பொழுதிலா வுயிர்போங்கூட்டைப்
பொருளென்று நிதமுன்னிமதியாலிந்த, வுனைத்துலகுமாள
லாமென்றுபேசுமாங்காரந்தவிர்ந்தெஞ்சேயமர்க்காக, முனை
த்தவருமதின்முன்றும்பொன்றவன்று முடுகியவெஞ்சிலை
கோத்தசெந்தீமூழ்க, நினைத்தபெருங்கருணையனெய்த்தான
மென்றுநினையுமாநினைந்தக்காலுய்யலாமே. ரு

பேரப்பொருளலாப்பிறவிதன்னைப்பெரிதென்றுசிறுப
லாத்தல்வேண்டியீண்டு, வாசக்குழன்மடவார்போகமெவ்
வும்வலைப்பட்டுவீழாதேவருகெஞ்சே, தூசக்கரியுரித்தான்
றாடுடித்துணைதந்திலங்குநான்மார்பன்றொடர்கில்லா, நீசர
க்கரியவனெய்த்தானென்று நினையுமாநினைந்தக்காலுய்ய
லாமே. ஏ

திருச்சிற்றம்பலம்.

ருக. திருப்பெரும்புலியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ம் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்க்கங்கைசடைபிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. க

தன்னுகடற்பவளஞ்சேர்தூயனீண்டதிரடோள்கண்
மின்னுசுடர்க்கொடிபோலுமேனியினுளொருகங்கைக்
கன்னிகளின்புனையோடுகலைமதிமாலீகலந்த
பின்னுசடைப்பெருமானர்பெரும்புலியூர்பிரியாரே. உ

பிறைவளருமும்முடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நிறைவளருமும்பொழிற்காழிநிற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. ஙக

திருச்சிற்றம்பலம்.

ஏழாந் திருமுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி. ஈ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காலையார்வண்டினங்கிண்டியகாரூறு
சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட
மாலையார்மதிதவழ்மாமழபாடியே. க

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தூமலர்துதையவே
மறையணிநாவினன்மாமழபாடியே. உ

ஞாலத்தாராதிரைநாளினுஞ்டொறுஞ்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்றிக்கசீர்ஞானசம்பந்தன்சொற்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. ஙக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். ஊ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அலையடுத்தபெருங்கடனஞ் சமுதாவுண்டுவமர்க்குந்த
லகாத்தவையர்செம்பொற், சிலையெடுத்தமாநாகநெருப்புக்
கோத்திரிபுரங்கடியிட்டசெல்வர்போலு, நிலையடுத்தபசும்
பொன்னுன்முத்தானீண்ட நிரைவயிரப்பலகையாற்குவை
பார்த்தற்ற, மலையடுத்தமழபாடிவயிரத்தூணேயென்றென்
றேநானரற்றிநைகின்றேனே. க

சுழித்தணையாம்பிறவிவழித் தக்கநீக்குஞ்சுருள்சடை
யெம்பெருமானேதூயதெண்ணீ, ரிழிப்பரியபுசுபாசப்பிறப்
பைநீக்குமென்றுணையேயென்னுடையபெம்மான்றம்மான்,
பழிப்பரியதிருமாலுமயனுங்காணாப் பரிதியேசுருதிமுடிக்
கணியாய்வாய்த்த, வழித்தணையாமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. எ

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனார்.

டீண-நட்டராகம் எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. ச

கொளார்கோவணமுந்திருநீறுமெய்பூசியுன்றன்
முளேவந்தடைந்தேன்றலிவாவெனினேயென்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. உ

ஏராரும்புரமூவெரியச்சிலைதொட்டவனே
வாராரும்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
சீராரும்வாவலர்கோனருணைத்தமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. ச0

திருச்சிற்றம்பலம்.

நஎ. திருப்பழுவூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூத்தன்மிகுமூவிலைவேல்வலன்விரிநூல
னத்தனெமையாளுடையவண்ணலிடமென்பர்
மைத்தழைபெரும்பொழிலின்வாசமதுவீச
பத்தரொடுசித்தர்பயில்கின்றபழுவூரே. க

கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மே
லோடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. உ

அந்தணர்களானமலியாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரணியாரச்

சந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

ருசு. திருக்காளூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாளாரசோதிமன்னுசென்னிவண்ணிபுனங்கொன்றைத்
தேனார்போதுதாளார்கங்கைதிங்களொடுசூடி
மானேர்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
காளூர்மேயகண்ணார்கெற்றியாளூர்செல்வரே.

நீர்த்தலாகாவெள்ளமூழ்குநீள்சடைதன்மேலோர்
பேர்த்தகோணற்பிறையோடரவுகொன்றையெழிலாரப்
போர்த்தமென்சொலின்பம்பயந்தமைந்தரவர்போலாங்
காந்தள்ஷிம்மகாளூர்மேயசாந்தநீற்றரே. உ

கழுததுஞ்சுங்கங்குலாடுங்காளூர்மேபாணப்
பழுதில்ஞானசம்பந்தன்சொற்பத்துப்பாடியே
தொழுதபொழுதேதாத்திரங்கள்சொல்லித்துதித்துநின்
றழுதுநக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருவிஞ்தனுஞ்செம்மலர்மேனுறை
யருவனுயுலகத்தினுயிர்க்கெலாங்
கருவனுகிமூவேழ்தவன்காளூரிற்
பரமனுயபரஞ்சுடர்காண்மினே. ரு

பெண்டிர்மக்கள்பெருந்தீண்ஞன்னிதி
யுண்டின்றேயென்றுகவன்மினேழைகாள்
கண்டுகொண்மினீர்காளூர்முளையினைப்
புண்டரீகப்பொதும்பிலொதுங்கியே. உ

வன்னிகொன்றையெருக்கணிந்தான் மலை
யுன்னிவுசென்றெடுத்தவனெண்டிற
றன்னைவீழத்தனிவிரல்வைத்தவன்
கன்னிமாமதிற்காஞர்க்கருத்தனே. ௧0

திருச்சிற்றம்பலம்.

ருஎ. திருஅன்பிலாலந்துறை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடெரிமாலரவம்வரைவில்லா
வினையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணைமாமயிலுங்குயில்சேர்மடவன்ன
மணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. ௧

சடையார்சதிரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைகிள்ளை
யடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. ௨

அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேற்
கரவாதவர்காழியுண்ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்பத்திசைபாடவல்லார்போய்
விரவாகுவர்வானிடைவீடெளிதாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

தேருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

வானஞ்சேர்மதிசூடியமைந்தனை
நீநெஞ்சேதெடுவாய்நினைகிற்கிலை
யானஞ்சாடியையன்பிலாலந்துறைக்
கோனெஞ்செல்வனைக்கூறிடக்கிற்றியே. ௧

காரணத்தர்கருத்தர்கபாலியார்
வாரணத்துரிபோர்த்தமணாளரை

ராரண்ப்பொருளன்பிலாலந்துறை
நாரணற்கரியானெருகட்பியே. உ

இலங்கைவேந்தனிருபதுதோளிற்று
மலங்கமாமலமேல்விரல்வைத்தவ
னலங்கலெம்பிரானண்பிலாலந்துறை
வலங்கொள்வாரைவானேர்வலங்கொள்வரே.

திருச்சிற்றம்பலம்.

நுஅ. திருமாந்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செம்பொனார்தருவேங்கையுஞாழலுஞ்செருந்திசெண்பகமா
கொம்புமாரமுமாதவிசுரபுணைகுருந்தலர்போந்துந்தி [ணைக்
யம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற [மே
லெம்பிரானிமையோர்தொழுபங்கழலேத்துதல்செய்வோ

விளவுதேனுடைசாதியின்பலங்களும்வேய்மணிகிரந்துந்தி
யளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானத்
தளவமான்மகணங்கணைக்காமனைச்சுடவிழித்தவனென்றி
யுளகவாணுதலரிவைதன்பங்கனியன்றிமற்றறியோமே.

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவ
னரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பரவிநின்றெழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

நுக. திருப்பாற்றுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காராரகொன்றைகலந்தமுடியினர்
சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாராரநாளும்பரவியபாற்றுறை
யாராராதிமுதல்வரே.

நல்லாருமவர்தீயெனப்படுஞ்
சொல்லார்நன்மலர்சூடினூர்
பல்லார்வெண்டலைச்செல்வமெம்பாற்றுறை
யெல்லாருந்தொழுமீசரே. உ

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய
பத்தநூறுபெயரிணைப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ்
பத்தும்பாடிப்பரவுமே. கக

திருச்சிற்றம்பலம்.

சுயி. திருவாவினக்கா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

திருவிராகம்-பண-கௌசிகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானைக்காவில்வெண்மதிமல்குபுல்குவார்சடைத்
தேனைக்காவிலின்மொழித்தேவிபாகமாயினை
னூனைக்காவிலண்ணலேயபயமாகவாழ்பவ
ரேனைக்காவல்வேண்டுவார்க்கேதுமேதமில்லையே. க

சேறுபட்டதண்வயற்சென்றுசென்றுசேணுலா
வாறுபட்டதுண்டுறையாவினக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரில்பாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்விண்ணிலெண்ணவல்லரே. உ

ஊழியூழிவையகத்துயிர்கடோற்றுவானேடு
மாழியானுங்காண்கிலாவாவினக்காவிலண்ணலைக்
காழிஞானசம்பந்தன்கருதிச்சொன்னபத்திவை
வாழியாகக்கற்பவர்வல்வினைகண்மாயுமே. கம

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனூர்.

திருக்குறுந்தொகை. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோனைக்காவிக்குளிர்ந்தமனத்தராய்
தேனைக்காவியுண்ணுஞ்சிலதண்ணார்சு
ளானைக்காவிலெம்மானையணுகிலா
ரூனைக்காவியுழிதர்வருமரே. க

நடையுமெய்யென்றுநாத்திகம்பேசாதே
படைகள்போல்வரும்பஞ்சமாபூதங்கள்
தடையொன்றின்றியேதன்னடைந்தார்க்கெலா
மடைகியன்றிடுமாணைக்காவண்ணலே. சு

ஓதமாகடல்சூழிலங்கைக்கிறை
கீதங்கின்னரம்பாடக்கெழுவினன்
பாதம்வாங்கிப்பரிந்தருள்செய்தங்கோ
ராதியாயிடுமாணைக்காவண்ணலே. கo

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். சூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தாரெம்மாடுசும்மாடா
மேவார்நல்லார், செத்தால்வந்துதவுவாரொருவரில்லச்சிறு
சிறகாற்றீமூட்டிச்செல்லாநிற்பர், சித்தாயவேடத்தாய்நீடு
பொன்னித் திருவாணைக்காவுடைய செல்வாவென்ற, னத்
தாவுன்பொற்பாதமடையப்பெற்ற லலகண்டங்கொண்ட
டியேனென்செய்கேனே. க

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

திருவானைக்கா-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாந்
தறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
வறையும்பூம்புனலாணைக்காவுடையாதியையாளு
மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. க

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலகொள்ளெனவாங்கே
யாரங்கொண்டவெம்மாணைக்காவுடையாதியையாளு
மீருமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே. எ

ஆழியாற்கருளாணைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணுகின்முருள்கூரநினைந்து
வாழவல்லவன்முண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றுவெம்மையுமாளுடையாரே. கo

திருச்சிற்றம்பலம்.

சுக. திருப்பைஞ்ஞீலி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலாடிகள்காடலா
லோரிடங்குறைவிலருடையார்கோவண
நீரிடஞ்சடைவிடையூர்திநித்தலும்
பாரிடம்பணிசெயும்பயில்பைஞ்ஞீலியே. க

மருவிலார்திரிபுரமெரியமால்வரை
பருவிலாக்குனித்தபைஞ்ஞீலிமேவலா
னுருவிலான்பெருமையையுளங்கொளாதவத்
திருவிலாரவர்களேத்தெருட்டலாகுமே. உ

கண்புனல்விழாவயற்காழிக்கற்பகந்
நண்புணரருமறைஞானசம்பந்தன்
பண்பினர்பரவுபைஞ்ஞீலிபாடுவா
ருண்பினவுலகினிலோங்கிவாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உடையர்கோவணமொன்றுங்குறைவிலர்
படைகொள்பாரிடஞ்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
சடையிற்கங்கைதரித்தசதுரரை
யடையவல்லவர்க்கில்லையவலமே. க

மத்தமாமலர்சூடியமைத்தனர்
சித்தாய்த்திரிவார்வினைதீர்ப்பராற்

பத்தர்காந்தொழுதேத்தைபைஞ்ஞீலியெம்
மத்தணித்தொழவல்லவர்நல்லரே. 2

தருச்சிச்சென்றுக்டவரைபற்றலும்
நெருக்கியூன்றநிணைந்துசிவனேயே
யரக்கன்பாடவருளுமெம்மானிட
மிருக்கைஞீலியென்பார்க்கிடரில்லையே. கூ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியகுஞ்சையுண்டிருள்கண்டர்வெண்டலையோடுகொண்
டூரெலாந்திரிந்தென்செய்வீர்பலியேற்றிடத்திலேகொள்ளுநீர்
பாரெலாம்பணிந்தும்மைபேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீ
ராரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்களே. க

செந்தமிழ்த்திறம்வல்லீரோ செங்கணரவமுன்கையிலாடவே
வந்துநிற்குமிதென்கொலோ பலிமாற்றமாட்டோமிடுகிலோம்
பைந்தண்மாமலருந்துசோலைகள் சூந்தராறுபைஞ்ஞீலியீ
ரந்திவானமுமேனியோசொல்லுமாரணீயவிடங்களே. ச

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ் ஞீலியிலாரணீயவிடங்க
ரை, மின்னும்தண்ணிடைமங்கைமார்பல்வேண்டிக்காதல்
மொழிந்தசொன், மன்னுதொல்புகழ்நாவலூரான்வன்றொண்
டன்வாய்மொழிபாடல்பத்,தின்னியின்னிசைபாடுவாருமை
கேள்வன்சேவடிசேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

சுஉ. திருப்பாச்சிலாச்சிராமம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிலிளங்கச்சுடர்ச்சடைசுற்றி
மூடித்தப், பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்
பலிதேர்வ, ரணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிரா
மத்துறைகின்ற, மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்
செய்வதோவிவர்மாண்பே. க

கலைபூணமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்க
டலையணிசென்னியீர்தாரணிமார்பர்தம்மடிகள்ளிவரென்ன
வலைபுனல்பூம்பொழில்சூழ்ந்தமர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
விலைபுனவேலரோவேழையவாடவிடர்செய்வதோவிவரீரே.

அகமலியன்பொடுதொண்டர்வணங்கபாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

பாண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன் றனக்கே தலையுமென்னுயிருஞ்சமும் வஞ்
சமொன்றின்றி, யுய்த்தனன்றனக்கேதிருவடிக்கடிமையுரை
த்தக்காலுவமனேயாக்கும், பைத்தபாம்பார்த்தோர்கோ
வணத்தாதுபாச்சிலாச்சிராமத்தெம்பரமர், பித்தரேயொத்
தோர்நச்சிலராகிலிவரலாதில்லையோபிரானுர். க

அன்னையேயென்னனத்தனேயென்னனடிகளேயை
யுமென்றிருந்தே,னென்னையுமொருவனுளனென்றுகருதி
யிறையிறைதிருவருள்காட்டா,யன்னமாம்பொய்கைசூழ்தரு
பாச்சிலாச்சிராமத்தறையடிகள், பின்னையேயடியார்க்கருள்
செய்வதாகிலிவரலாதில்லையோபிரானுர். உ

ஏசினவல்லவிகழ்ந்தனவல்லவெம்பெருமானென்றெப்
போதும், பாயினபுகழான்பாச்சிலாச்சிராமத்தடிகளையடி
தொழப்பன்னுள், வாயினுற்கூறுமனத்தினனினவான்வள
வயனுவலாளரன், பேசினபேச்சைப்பொறுத்திலாராகிலிவர
லாதில்லையோபிரானுர். கஉ

திருச்சிற்றம்பலம்.

சுஉ. திருநங்கோய்மலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி-க-ந். திருமுறை

திருச்சிற்றம்பலம்.

வானத்தியர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனேத்தனமென்மொழிமான்விதியாடேவிபாகமாக்
கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
மேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. க

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாகக்
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொழிந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவீரும்பரமனு
சேலத்தடநல்லிலவங்கமழுமீங்கோய்மலையாரே. உ

ளிழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னு
ளழகார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழ்கோய்மலையிசை
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

காவேரிக்குத்தென்கரை

க. திருவாட்போக்கி.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காலம்பாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையரெ
ரானீழலமர்ந்தவாட்போக்கியார்
சிலமார்ந்தவர்செம்மையுணிற்பரே. க

வீடித்ததூதுவர்வந்துவீணைக்குழிப்
படுத்தபோதுபயனிலபாவிகா
ளெடுத்தகின்னரங்கேட்குஞ்வாட்போக்கியை
யெடுத்துமேத்தியுமின்புறு'மின்களே உ

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
யரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. க0

திருச்சிற்றம்பலம்.

உ. திருக்கடம்பந்துறை.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. டு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முற்றிலாமுலைபூளிவளாகிலு
மற்றநீர்க்குமறிவிலளாகிலுங்
கற்றைச்செஞ்சடையான்கடம்பந்துறைப்
பெற்றமூர்தியென்றுளெங்கள்பேதையே. க

தனகிருந்தேதார்தன்மையராகிலு
முன்குதீரத்தொழுதுமின்களோ
கனகப்புன்சடையான்கடம்பந்துறை
நினையவல்லவர்நீள்விசும்பாள்வரே.

நாலானன்றுநினைமின்கணேய்கெடப்
பாலைநீர்துடனுடும்பரமனூர்
காலாலூன்றுகந்தான்கடம்பந்துறை
மேலானஞ்செய்தவல்வினைவீடுமே. க0

திருச்சிற்றம்பலம்.

ங. திருப்பராய்த்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-மேகராகக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை
கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை
யாறுசேர்சடையண்ணலே. க

கந்தமாமலர்க்கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபராய்த்துறை
யந்தமில்லவடிகளே. உ

செல்வமல்கியசெல்வப்பராய்த்துறைச்
செல்வமேற்சிதையாதன
செல்வன்ஞானசம்பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவைசெப்பவே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. (நு-ந்) திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கரப்பர்காலமடைந்தவர்தம்மினை
சுருக்குதாறுவல்லார்கங்கைசெஞ்சடைப்
பரப்புநீர்வருகாவிரித்தென்கரைத்
திருப்பராய்த்துறைமேவியசெல்வரே. க

தொண்டுபாடியுந்தூபலர்தூவியும்
இண்டைகட்டியிணையடியேத்தியும்
பண்டரங்கர்பராய்த்துறைப்பாங்கரைக்
கண்டுகொண்டடியேனுய்ந்துபோவனே. க0

அரக்கனற்றலழித்தவழகனைப்
பரக்குநீர்ப்பொன்னிமன்னுபராய்த்துறை
யிருக்கைமேவியவீசனையேத்துமின்
பொருக்கரம்மினைபோயறங்காண்மினே. கக

திருச்சிற்றம்பலம்.

ச. திருக்கற்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம்-க-ந். திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென்முலையாளோர்பாகமதாகமத்தித்துத்
தடந்திரைசேர்புனன்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ்முப்புரிநூலர்துன்பமொடின்பமதெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. க

அங்கமொராறுடைவேள்வியானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையின்மைந்தர்கடாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. உ

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனேவானவர்க்குமூவாமேனிமுதலவனேத்திருவரையின்மூக்கப்பாம்பொன், மூர்த்தவனேயக்கரவமாரமாகவணிந்தவனேப்பணிந்தடியாரடைந்தவன்போ, டேத்தவனேயிறுவரையிற்றேனேயேனேர்க் கின்னமுதமளித்தவனேயிடரையெல்லாங், காத்தவனேகற்குடியில்வாழுமியானேக்கற்பகத்தைக்கண்ணுரக்கண்டேனுனே. க

மண்ணதனிலந்தமாநீரினன்கைவயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை, விண்ணதனிலொன்றைவிரிகதிரைத்தண்மதியைத்தாரகைகடம்மைமிக்க, வெண்ணதனிலெழுத்தையேழிசையைக் காமனெழிலழியவெரியுமிழ்ந்தவிம்மையாநெற்றிக், கண்ணவனேக்கற்குடியில்வாழுமியானேக்கற்பகத்தைக்கண்ணுரக்கண்டேனுனே. கூ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாய்பரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னினின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. க

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
விறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே. உ

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிள்ழவமருங்
கலையார்மாதவர்சேர்திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாணல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே. கo

திருச்சிற்றம்பலம்.

ருு. திருமுக்கீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையோடாடியகாரண
மாய்ந்துகொண்டாங்கறியாதனிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்முக்கீச்சரத்திடிகள்செய்கின்றதோற்பெய்மையே.

வெண்டலையோர்கலனப்பலிதேர்ந்துதனிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்தபையாவெனிங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தழக்
கண்டவர்முக்கீச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே. உ

மல்லியார்முல்முடிமன்னர்முக்கீச்சரத்திடிகளைச்
செல்வராகநினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுண்ஞானசம்பந்தன
சொல்லவல்லாரவர்வானுலகாளுமவ்வில்லரே. கக

திருச்சிற்றம்பலம்.

---

௯. திருச்சிராப்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதில்லானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாதசிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிருமேமே. க

கைம்மகவேந்திக்கடுவனெடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. உ

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலரிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

மட்டுவார்குழலாளொடுமால்விடை
யிட்டமாவுகந்தேறுமிறைவனூர்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயுஞ்
சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே.

அரிச்சிராப்பகலேவரலாட்டுண்டு
சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திரிச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குநடக்குமே. ங

தாயுமாயெனக்கேதகுகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனரெனநம்வினைநாசமே. ச

திருச்சிற்றம்பலம்.

---

௭. திருவெறும்பியூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

தீருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பன்னியசெந்தமிழறியேன்கலியேமாட்டேனெண்
ணுடுபண்ணிறைந்தகுகளாய, தன்னையுந்தன்றிறத்தறியா
ப்பொறியிலேனைத்தன்றிறமுமறிவித்துநெறியுங்காட்டி, யன்
னையுமத்தனையும்போலவன்பாயடைந்தேனைத் தொடர்ந்
தென்னையாளாக்கொண்ட, தென்னெறும்பியூர்மேலேமன்மா
ணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனனே.

பளிங்கினிழையுட்பதித்தரோதியாணைப்பசுபதியைப்பா
சுபதவேடத்தானை, விளிந்தெழுந்தசந்தரனைவீட்டினை
வேதியனைவிண்ணவனைமேவிலையம், ஆளந்தானைநான்முக
னையல்லறீர்க்குமருந்தையாமாறறிந்தெனுள்ளங், தெளிந்தெ
றும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்
றடையப்பெற்றேனனே. உ

திருச்சிற்றம்பலம்.

அ. திருநெடுங்களம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

***பண்-பழந்தக்கராகம். க-ந் திருமுறை.**

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுன்னைப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினலுயர்ந்த
நிறையுடையாரிடர்கடீர்ப்பாய்நெடுங்களமேயவனே. க

கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சதன்னைத்
தினைத்தனையாமிடற்றில்வைத்ததிருந்தியதேவதின்னை
மனத்தகத்தேதார்பாடலாடல்பேணியிராப்பகலு
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. உ

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
நாடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. கக

திருச்சிற்றம்பலம்.

கூ. மேலைத்திருக்காட்டுப்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லி. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாரும்மன்னும்முலைமங்கையோர்பங்கினர்
ஊரும்மன்னும்பலியுண்பதாம்வெண்டலை
காரும்மன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீரும்மன்னுஞ்சடைநிமலர்க்கதீர்மையே. க

கிருத்தனர்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
பருத்தனரழகமர்மங்கையோர்பாகமாப்
பொருத்தினர்கழலினைபோற்றுதல்பொருளதே. உ

பொருபுனல்புடையணிபுறவநன்னகர்மன
னருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொற்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்கொடுப்பறையுமெய்ப்பர்பாவமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

தீருக்குறுந்தொகை. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டுப்பள்ளிமகிழ்ந்தறைவீர்க்கெலாங்
கேட்டுப்பள்ளிகண்டீர்கெடுவீரிது

ஒட்டுப்பள்ளிவிட்டோடலுறுமுனங்
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. கூ

மாட்டைத்தேடிமகிழ்ந்துநீர்தும்முளே
நாட்டுப்பொய்யெலாம்பேசிடுநாணிலீர்
கூட்டைவிட்டுயிர்போவதன்முன்னமே
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. உ

எண்ணிலாவரக்கன்மலியேந்திட
எண்ணிரண்முடிபத்திறுத்தவன்
கண்ணுளார்கருதுங்காட்டுப்பள்ளியை
நண்ணுவாரவர்தம்வினைநாசமே. கo

திருச்சிற்றம்பலம்.

கo. திருவாலம்பொழில்.

திருநாவுக்கரசுநாயனார்.

நீர்த்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கூருவாகிக்கண்ணுதலாய்நின்றருண்முன்னைக்கமலத்தோன்
றலையறிந்தகபாலியை, யுருவரர்த்தமல்லமகளிளார்பாகத்தானை
யுணர்வெலாமானினையோசையாகி, வருவானவலஞ்சுழியெ
ம்பெருமான்றன்னைமறைக்காடுமாவடுதண்டுறையுமேய, திரு
வானைத்தென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்பொழிலா
னைச்சிந்திநெஞ்சே.

உருமூன்றுபுணர்மின்கலிணன்றுனையோங்காரமெய்
ப்பொருளையுடம்பினுளாற்றி, கருவீன்றவெங்களவையறிவா
ன்றன்னைக்காலனைத்தன்கழலடியாற்காய்த்தமாணிக், கருளீ
ன்றவாரமுதையமரர்கோனை யஞ்ஞதியெம்பெருமானென்
பார்க்கென்றுந், திருவீன்றதென்பரம்பைக்குடியின்மேயதிரு
வாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. கூ

திருச்சிற்றம்பலம்.

---

௪௫. திருப்பூந்துருத்தி.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். சுரூ-நீ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடைமேனிற்பித்தாநின்னையாவென்னெஞ்
சைநினைவித்தானைக், கல்லாதனவெல்லாங்கற்பித்தானைக்கா
ணுதனவெல்லாங்காட்டினானைச், சொல்லாதனவெல்லாஞ்
சொல்லியென்னைத்தொடர்ந்திங்கடியேனையாளாக்கொண்டு,
பொல்லாவென்வினைப்பிறப்பதன்றன்னைப்புண்ணியமேப்
பூந்துருத்திகண்டேனானே. ௧

மறுத்தானைமலைஞாத்தங்கெடுத்தான்றன்னைமணிமுடி
யோடிருபதுதோளிறுத்தபெருமானை, இறுத்தானையெழுநரம்
பினிசைகேட்டானையெண்டிசைக்குங்கண்ணுளானைச்சிரமேலொ
ன்றை, அறுத்தானையமார்களுக்கமுதீந்தானையரனுக்குந்தா
ங்கொணஞ்சமுண்டு, பெறுத்தானைப்புண்ணியனைப்புனி
தன்றன்னைப்பொய்யிலியைப்பூந்துருத்திகண்டேனானே. ௧0

திருச்சிற்றம்பலம்.

---

௪௨. கண்டியூர்வீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி. சூ-நீ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுரைசெய்மினீரருள்வேண்டுவீர்
கனவிலாற்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டன்
றனமுனேதனக்கின்மையோதமராயினரண்டமாளத்தான்
வனனில்வாழ்கைகொண்டாடிப்பாடியிவையுமாப்பலிதோற்றே.

உள்ளவாறெனக்குரைசெய்மின்னுயர்வாயமாதவம்பே
ணுவீர், கள்ளவிழ்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறை
காதலான், பிள்ளைவான்பிறைசெஞ்சடைப்மிசைவைத்ததும்
பெருந்தொலி, வெள்ளந்தாங்கியதென்கொலோமிகுமங்கை
யாளொருகூறே. ௨

கருத்தனைப்பொழில்சூழ்ந்கண்டியூர்வீரட்டத்துறை
கள்வனை, யருத்தனைத்திறமடியார்பாலன்மிகக்கேட்டுகந்தவி
னவரை, திருத்தமாந்திகழ்காழிஞான சம்பந்தன்செப்பியசெ
ந்தமி, ழொருத்தராகிலும்பலர்சளாகிலுமுரைசெய்வாருயர்
ந்தார்களே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வானவர்தானவர்வைகன்மலர்கொணர்ந்திட்டிறைஞ்சித்
தானவர்மால்பிரமன்னறியாததகைமையினன்
ஆனவனதிபுராணனன்றேடியப்பனறியெய்த
கானவனீக்கண்டியூரண்டவாணர்தாழுகின்றதே. க

பண்டங்கறுத்ததொர்கையுடையான்படைத்தான்றலையை
உண்டங்கறுத்ததுமூதொடுநாடவைதானறியுங்
கண்டங்கறுத்தமிடறுடையான்கண்டியூரிருந்த
தொண்டர்பிராணக்கண்டீரண்டவாணர்தொழுகின்றதே. உ

மாய்ந்தனதீவினைமங்கினநோய்கண்மறுகிலிழத்
தேய்ந்தனபாவஞ்செறுக்கிலாநம்மைச்சேர்ந்தநங்கைக்
காய்ந்தபிரான்கண்டியூரெம்பிரானங்கமாதினையும்
ஆய்ந்தபிரானல்லனேவடியேனையாட்கொண்டவனே. கக

திருச்சிற்றம்பலம்.

கஉ. திருச்சோற்றுத்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பஸீ-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செப்பமெஞ்சேரெறிகொள்சிற்றின்பந்
துப்பனென்னுதருளேதுணையாக
வொப்பரொப்பர்பெருமாணெளிவெண்ணீற்
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. க

பாலுநெய்யுந்தயிருமம்பயின்றுடித்
தோலுநூலுந்துதைந்தவரைமார்பர்

மாலுஞ்சோலைபுடைசூழ்மடமஞ்ஞை
யாலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. உ

அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச்
சிந்தைசெய்மினடியராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன்
வந்தவாறேபுனல்வழிபாடே. சக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். ஏ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனுலகுக்குமுந்தினேமுறைமையாலெல்லாம்
படைக்கின்றானே, ஏற்றவனேயேழுலகுமாயினானேயின்பனை
த்துன்பங்களானின்றானே, காத்தவனையெல்லாந்தான்காண்
கின்றானேகடியனேயென்றீயினையைக்கண்டுபோகத், தீர்த்த
தவனேதிருச்சோற்றுத்துறையுளானே திகழொளியேசிவ
னேயுன்னபயனானே. க

நம்பனேநான்மறைகளாயினானேநடமாடவல்லானே
ஞானக்கூத்தா, கம்பனேகச்சிமாநகருளானேகடிமதில்கண்
மூன்றினையும்பொடியாவெய்த, அம்பனேயளவிலாப்பெரு
மையானேயடியார்கட்காரமுதேயானேறேறும், செம்பொ
னேதிருச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்
னபயனானே. ங

வானவனேவண்மைமனத்தினானேமாமணிசேர்வானே
ர்பெருமானேயே,கானவனேனைத்தின்பின்சென்றானேகடிய
வரணங்கன்மூன்றட்டானே, தானவனுத்தண்கயிலைமேவினா
னேதன்னுப்பாரில்லாதமங்கைக்கென்றுந்தேனவனேதிரு
ச்சோற்றுத்துறையுளானேதிகழொளியேசிவனேயுன்னபய
னானே. எ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-கவுசிகம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அழனீரொழுகியனையசடையு
முழையீருரியும்முடையானிடமாங்

கழிந்தநீர்முத்துங்கனகக்குவையுஞ்
சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே. க

பண்டைவினைகள்பறியநின்ற
அண்டமுதல்வனமலன்னிடமா
மிண்டைகொண்டன்பிடையறுத
தொண்டர்பரவுஞ்சோற்றுத்துறையே. உ

இறந்தாரென்புமெருக்குஞ்சூடிப்
புறங்காட்டாடும்புனிதன்கோயில்
சிறந்தார்சுற்றந்திருவென்றின்ன
துறந்தார்சேருஞ்சோற்றுத்துறையே. எ

இலையாலன்பாலேத்தமவர்க்கு
நிலையாவாழ்வைநீத்தாரிடமார்
தலையாற்றுழுந்தவத்தோர்க்கென்றுந்
தொலையாச்செல்வச்சோற்றுத்துறையே. கூ

சுற்றுர்தருநீர்ச்சோற்றுத்துறையுண்
முற்றுமதிசேர்முதவன்பாதத்
தற்றுரடியாரடிநாயுரன்
சொற்றுணிவைகற்றுர்துன்பிலரே. கo

திருச்சிற்றம்பலம்.

கச. திருவேதிகுடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண்-சாத்தாரி. கூ-ஈ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீறுவரியாடரவோடாமைமனவென் புநிரைபூண்பரிடப
மேறுவரியவருமிறைஞ்சுகழலாதியிருந்தவிடமாந்
தாறுவிரிபூகமலிவாழைவிரைநாறவினைவாளைமடிவில்
வேறுபிரியாதுவினையாடவளமாரும்வயல்வேதிகுடியே. க

சொற்பிரிவிலாதமறைபாடிநடமாடுவர்தொலாவினையுரிவை
மற்புரிபுயத்தினிதுமேவுவரெநாளுமவளர்வானவர்தொழத்
துற்பரியநஞ்சமுதமாகமுனையின்றவரியன்றதொருசீர்
வெற்பரையன்மங்கையொருபங்கர்நகரென்பர்திருவேதிகுடியே

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிருகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர்கணல்லவர்களென்னிகழ்வெய்தியிமையோ
ரந்தவுலகெய்தியசாலுமதுவேசரதமாகுணமதே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

கிருவிருத்தம்-ஈ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கையதுகாலெரிநாகங்கனல்விடுசூலமது
வெய்யதுமேலுருஞ்சுண்டவிரிசடைவிண்ணவர்கோன்
செய்யினீலமணங்கமழுந்திருவேதிகுடி
யையனையாவாழுதினாமடைந்தாடுதுமே. க

வருத்தனவாவரக்கன்முடிதோளொடுபத்திறுத்த
பொருத்தனபொய்யாவருளினப்பூதப்படையுடைய
திருத்தனத்தேவர்பிரான்றிருவேதிகுடியுடைய
அருத்தனையாவாழுதினாமடைந்தாடுதுமே.

திருச்சிற்றம்பலம்.

கரு. திருத்தென்குடித்திட்டை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கோல்லி. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முன்னைநான்மறையவைமுறைமுறைகுறையொடுந்
தன்னதாடொழுதெழுதின்றவன்றன்னிட
மான்னுமாகாவிரிவந்தடிவருடநற்
செந்நெலார்வளவயற்றென்குடித்திட்டையே. க

ஊறினீரோசையுள்ளொன்றினீரொன்றிமால்
கூறினீரமர்தருங்குமரவேடாதையூ
ராறினீர்பொய்யகத்தையுணர்வெய்திமெய்
தேறினீர்வழிபடுந்தென்குடித்திட்டையே. கூ

கானலைக்கும்மவன்கண்ணிடந்தப்பரீள்
வானலைக்குந்தவத்தேவுவைத்தானிடந்
தானலைத்தள்ளமூர்தாமரைத்தண்டுறை
தேனலைக்கும்வயற்றென்குடித்திட்டையே. ஏ

தேனலாஞ்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கானலார்கடிபொழில்சூழ்தருங்காழியுண்
ஞானமார்ஞானசம்பந்தனசெந்தமிழ்
பானலார்மொழிவலார்க்கில்லையாம்பாவமே. கஅ

திருச்சிற்றம்பலம்.

கசு. திருப்புள்ளமங்கை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிரளாயினன்பரமன்பிரமன்முன்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிறலறச்சாடியகடவுள்ளிடங்கருதி
லாலந்துறைதொழுவார்தமையடையாவினைதானே. க

மலையான்மகள்கணவன்மலிகடல்சூழ்தருதன்மைப்
புலையாயினகூளவாளிடம்பொழில்சூழ்புளமங்கைக்
கலையான்மலிமறையோரவர்கருதித்தொழுதேத்த
அலையார்புனல்வருகாவிரியாலந்துறையதுவே. உ

பொற்றின்னிடைத்தேனூறியபொழில்சூழ்புளமங்கை
யந்தண்புனல்வருகாவிரியாலந்துறையாவினைக்
கந்தம்மலிகமழ்காழியுட்கலைஞானசம்பந்தன்
சந்தம்மலிபாட்டல்சொலியாடத்தவமாமே. கக

திருச்சிற்றம்பலம்.

கஎ. திருச்சக்கரப்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொல்லி. ங-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

படையினர்வெண்மழுப்பாய்புலித்தோலரை
யுடையினருமையொருகூறனூர்வதோர்
விடையினர்வெண்பொடிப்பூசியார்விரிபுனற்
சடையினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. க

பாடினாருமறைபனிமதிசடைமிசைச்
சூடினார்படுதலைதுன்னெருக்கதனெடு
நாடினாரிடபலிநண்ணியோர்காலனைச்
சாடினார்வளநகர்சக்கரப்பள்ளியே. உ

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெங்
கண்ணுதலவனடிகழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொற்
பண்ணியவிவைசொலப்பறையுமெய்ப்பாவமே. கக

திருச்சிற்றம்பலம்

கஅ. திருக்கருகாவூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கௌசிகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே
மதகயாணமறுகவ்வுரிவாங்கியக்
கத்தைபோர்த்தகடவுள்கருகாவுரெம்
மத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. க

விழுதவல்லசடையான்றனையுள்குவார்க்
கழுதநீழலகலாததோர்செல்வமாங்
கழுதமுல்லைகழற்கின்றகருகாவூ
ரமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. உ

கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றன்னீள்கழல்
குலவுஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலவல்லாரவர்தொல்வினைதீருமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருகாம்வயிரமாங்கூலங்களாளாங்கொள்ளுங்கிழமையாங்
கோவேதனும், பருகாவமிர்தமாம்பாலினெய்யாம்பழத்தி
னிரதமாம்பாட்டிற்பண்ணு, மொருகாலுமையாளோர்பாக

னுமாமுண்ணின்றநாவிற்குரையாடியாம், கருவாயுலகுக்கு
முன்னேதோன்றுங்கண்ணுங்கருகாவூரெந்தைதானே. க

பூத்தானும்பூவினிறத்தானுமாம்புக்குளால்வாசமாய்
மன்னிநின்ற, கோத்தானுங்கோல்வளையாள்கூறனுங்கொ
ண்டசமயத்தார்தேவனுகி, ஏத்தாதார்க்கென்றுமிடரேதுன்
பமீவானுமென்னெஞ்சத்துள்ளேகின்று, காத்தானுங்காலன
டையாவண்ணங்கண்ணுங்கருகாவூரெந்தைதானே. உ

திருச்சிற்றம்பலம்.

கஉ. திருப்பாலைத்துறை.

திருநாவுக்கரசுநாயனுர்.

திருக்குறுந்தொகை. கு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

நீலமாமணிகண்டத்தர்நீள்சடைக்
கோலமாமதிகங்கையுங்கூட்டினர்
சூலமான்மழுவேந்திச்சுடர்முடிப்
பாலனெய்யாடுவார்பாலைத்துறையாரே க

கவளமால்கரிற்றின்னுரிபோர்த்தவர்
தவளவெண்ணகைமங்கையோர்பங்கினர்
திவளவானவர்போற்றித்திசைதொழும்
பவளமேனியர்பாலைத்துறையாரே. உ

உரத்தினுரைக்கன்னுயர்மாமலை
நெருக்கினுனெரித்தவன்பாடலு
பிரக்கமாவருள்செய்தபாலைத்துறை
கரத்தினுற்றொழுவார்வினையோயுமே. கக

திருச்சிற்றம்பலம்.

உ0 திருநல்லூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பஃறூறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொட்டும்பறைசீராற்குழமவனலேந்தி
நட்டம்பயின்றுடுநல்லூர்ப்பெருமானை

முட்டின்றிருபோதுமுனியாதெழுந்தன்பு
பட்டமனத்தார்களறியார்பாவமே. க

ஏறிலெருதேறுமெழிலாயிழையோடும்
வேறும்முடனுமாம்விகிர்தரவரென்ன
நாறும்மலர்ப்பொய்கைநல்லூர்ப்பெருமானைக்
கூறும்மடியார்கட்கடையாகுற்றமே. உ

தண்ணம்புனற்காழிஞானசம்பந்த
னண்ணும்புனல்வேலிநல்லூர்ப்பெருமானை
வண்ணம்புனமாலைவைகலேத்துவார்
விண்ணுநிலனுமாய்விளங்கும்புகழாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண்-திருவிருத்தம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அட்டமினில்பலியென்றென்றகங்கடோறும்வந்து
மட்டவிழுங்குழலார்வளைகொள்ளும்வகையென்கொலோ
கொட்டியபாணியெடுத்திட்டபாதமுங்கோளரவு
கட்டநின்றுடியகாதர்நல்லூரிடங்கொண்டவரே. க

தேற்றப்படத்திருநல்லூரகத்தேசிவனிருந்தாற் [யா
ரேற்றப்படச்சென்றுகண்டுகொள்ளார்தொண்டர்ஞன்மதி
லாற்றிற்கெடத்தீக்குளத்தினிற்றேடியவாதரைப்போற்
காற்றிற்கடித்துலகெல்லாந்திரிதர்வர்காண்பதற்கே. சு

நாட்கொண்டதாமரைப்பூந்தடஞ்சூழ்ந்தநல்லூரகத்தே
கிட்கொண்டகோவணங்காவென்றுசொல்லிக்கிறிபடத்தான்
வாட்கொண்டநோக்கிமணவியோடுமங்கோர்வாணிசனீ
யாட்கொண்டவார்த்தையுரைக்குமன்றேயிவ்வகலிடமே. எ

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நினைந்தருகுமடியாரைநையவைத்தார்நில்லாமேநீவினைகணீங்கவைத்தார், நினைந்திருகுகளிற்றுரிவைப்போர்வையைவைத்தார்செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்தவாறேனுர், இனந்

அருமணிமகுடத்தேறத்தற்ற வினமலர்கள்போதவிழ்ந்து மதுவாய்ப்பிலிற்றி, நணிந்தணியதிருவடியென்றலைமேல்வைத்தார்நல்லூரெம்பெருமானூர்நல்லவாறே. ௫

குலங்கிளருமவருதிரைகளேழும்வைத்தார்குருமணிசேர்மௌலிவைத்தார்மலையக்கையால், உலங்கிளரவெடுத்தவன்றோண்முடியுநோவ வொருவிரலாலுறவைத்தாரிறைவாவென்னு, புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார்புகழ்வைத்தார்புரிந்தாளாக்கொள்ளவைத்தார், நலங்கிளருந்திருவடியென்றலைமேல்வைத்தார்நல்லூரெம்பெருமானூர் நல்லவாறே. ௧௫

திருச்சிற்றம்பலம்.

---

௨௫. திருஆவூர்ப் பசுபதீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

பண்- நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர்பூசுரர்தர்புடைபடுவார்தம்மனத்தார்திங்கட்,கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்தவிருந்தவூராம்விண்ணுயர்மாளிகைமாடவீதிவிரைகமழ்சோலைசுலாவியவெங்கும்,பண்ணியல்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ௧

மீத்தியர்மூப்பிலராப்பிலுள்ளார்முக்கணர்தக்கன்றன்வேள்விசாடு, மத்தியமென்றென்றடியரேத்தமையணங்கொடிருந்தவூராந், தொத்தியலும்பொழில்மாடுவண்டுதைத்தெங்குந்தூமதுபாயக்கோயிற், பத்திமைப்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ௨

எண்டிசையாருமிவணுகியேத்தமெம்பெருமானெழில்கொளாவூர்ப், பண்டுரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதியீசரத்தாதிதன்மேற், கண்டல்கண்மிண்டியகானற்கானழிக்கவுணியன்ஞானசம்பந்தன்சொன்ன, கொண்டிணைதாளிசைபாடியாடிக்கூடுமவருடையார்கள்வானே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

௨௨. திருச்சத்திமுற்றம்.

திருவிருத்தம். ச-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. க

காப்தாயனங்களுடலம்பொடிபடக்காலினைமுன்
பாய்ந்தாயுபிர்செகப்பாதம்பணிவார்தம்பல்பிறவி
ஆய்ந்தாய்ந்தறுப்பாயடியேற்கருளாயுன்னன்பர்சிந்தை
சேர்ந்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. உ

நில்லாக்குரம்பைநிலையாக்கருதியிந்நீணிலத்தொன்
றல்லாக்குழிவீழ்ந்தயர்வுறவேனைவந்தாண்டுகொண்ட
வில்லோர்புரவத்துமையாள்சணவாவிடிற்கெடுவேன்
செல்வாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. ச

கருவுற்றிருந்துன்கழலேகினைந்தேன்கருப்புவியிற்
றெருவிற்புகுந்தேன்றிகைத்தடியேனைத்திகைப்பொழிவி
யுருவிற்றிகழுமுமையாள்கணவாவிடிற்கெடுவேன்
திருவிற்பொலிசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. ஞ

வெம்மைநமன்றமர்மிக்குவிரவிவிழப்படதன்முன்
னிம்மையுன்றாளென்றனெஞ்சத்தெழுதிவையிங்கிகழி
லம்மையடியேற்கருளுதியென்பதிங்காரறிவார்
செம்மைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. ரு

பொறித்தேரரக்கன்பொருப்பெடுப்புற்றவன்பொன்முடிதோ
ளிறத்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொன்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்.

உக. திருப்பட்டீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சாதாரி. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாடன்மறைகூடன்மதிபல்வலியோர்பாகமதின்மூன்றெரிகணையாற்
கூடவெரியூட்டியெழில்காட்டிநிழல்கூடுபொழில்சூழ்பழமை
மாடமழபாடியுறைபட்டீசரமேயகடிகட்டரவினர் [யுண்
வேடங்கிலேகொண்டவரைவீடுநெறிகாட்டிவினைவீடுமவரே. க

நீரின்மலிபுன்சடையர்நீளரவுகச்சையதுகச்சிலையதோர்
கூரின்மலிசூலமதுதேவர்தியுடைகோவணமுமானினுரிதோல்
காரின்மலிகொன்றைவிரிதார்கடவுள்சுதல்செய்துமேயகதான்
பாரின்மலிசீர்பழமைபட்டீசரமேத்தவினைபற்றறியுமே. உ

மரகதமலிசோலைமழபாடிநகர்மேவுமழுவாளையதனிற்
பரகதியர்வீடுநலபட்டீசரமேயபடர்புன்சடையினீ
யரக்கண்மறையோரினிதுவாழ்புகலிஞானசம்பந்தனணியார்
செந்தமிழ்கள்கொண்டினிதுசெப்பவலதொண்டர்வினைதிற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்.

உச. திருப்பழையாறைவடதளி.

திருநாவுக்கரசுநாயனார்.

நீநக்குறுந்தொகை. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்சையருண்
ணிலையினுன்மறைத்தான்மறைக்கொண்ணுமே
அலையினார்பொழிலாறைவடதளி
நிலையினனடியேநினைந்தாய்மினே. க

மூக்கினுண்முரன்றேதியச்குண்டிகை
தூக்கினார்குலந்தூறுபத்தேதனக்
காக்கினனணியாறைவடதளி
நோக்கினார்க்கில்லையாருநோய்களே. உ

வாயிருந்தமிழ்பேபடித்தானுரு
ஆயிரஞ்சமணும்மழிவாக்கினன்
பாயிரும்புனலாறைவடதளி
மேயவன்னெனவல்வினைவீடுமே. கூ

செருத்தனைச்செயுஞ்சேணரக்கன்னுடல்
எருத்திறவிரலாலிறையூன்றிய
அருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே. கo

திருச்சிற்றம்பலம்.

உரு. திருவலஞ்சுழி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

என்னபுண்ணியஞ்செய்தனெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னிநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. க

ணிண்டொழிந்தனநம்முடைவல்வினைவிரிகடல்வருநஞ்ச
முண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியவிறைவனெயுலகத்தில்
வண்டுவார்குழன்மங்கையோர்பங்கனெவலஞ்சுழியிடமாகக்
கொண்டதாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்
தமையாலே. உ

மாதொர்கூறனெவலஞ்சுழிமருவியமருந்தினெவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவின்றியதமிழ்மாலை
யாரணித்திசைகற்றுவல்லார்சொலக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைகுமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாலே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

தீருத்தாண்டகம். ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அலையார்புனற்கங்கைநங்கைகாணவம்பலத்திலருநட்ட
மாடிவேடந்,தொலையாதவென்றியார்நின்றியூருநெடுங்களமு
மேனிவிடையேமேல்கொண், டிலையார்படைகையிலேந்தியெ
ங்குமிமையவருமுமையவளுநிறைஞ்சியேத்த, மலையார்திரள
ருவிப்பொன்னிசூழ்ந்தவலஞ்சுழியேபுக்கிடமாமருவினரே.

திருச்சிற்றம்பலம்.

உசு. திருக்குடமூக்கு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அரவிரிகோடனீடலணிகாவிரியார்த்தயலே
மரவிரிபோதுமவ்வன்மணமல்லிகைகள்ளவிழுங்
குரவிரிசோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
விரவிரிதிங்கள்சூடியிருந்தானவனெம்மிறையே. க

ஓத்தரவங்களோடுமொலிகாவிரியார்த்தயலே
பூத்தரவங்களோடும்புகைகொண்டடிபோற்றிநல்ல
கூத்தரவங்களோவாக்குழகன்குடமூக்கிடமா
வேத்தரவங்கள்செய்யவிருந்தானவ்வனமிறையே. உ

வெண்கொடிமாடமோங்குனிறல்வெங்குருநன்னகரா
னவ்வொடுநின்றசீரான்றமிழ்ஞானசம்பந்தனல்ல
தண்குடமூக்கமர்ந்தானடிசேர்தமிழ்பத்துமவ்வார்
விண்புடைமேலுலகம்வியப்பெய்துவர்வீடெளிதே. சக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

நக்கதுறுத்தொகை. கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவணத்தவன்புண்ணியனண்ணியங்
காவணத்துடையாளடியார்களைத்
தீவணத்திருநீறுமெய்பூசியோர்
கோவணத்தலைடையான்குடமூக்கிலே. க

தறனிலேஞ்சினராகியதொண்டர்காள்
பிறனிலீங்கப்பிதற்றுமின்பித்தராய்
மறவனுய்ப்பார்த்தன்மேற்கணைதொட்டவெம்
குறவனுருறையுங்குடமூக்கிலே. கூ

காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்தணர்மினே
சாமியோடுரச்சுவதியவள்
கோமியும்முறையுங்குடமூக்கிலே. அ

அன்றுதானரக்கன்கயிலாயத்தைச்
சென்றுதாஞ்செடுக்கவுமையஞ்சலும்
நன்றுதானக்குநல்லிரலூன்றிப்பின்
கொன்றுகீதங்கேட்டான்குடமூக்கிலே. கo

திருச்சிற்றம்பலம்.

உ எ. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சொன்மலிந்தமறைநான்காறங்கமாகிச்சொற்பொருளு
ங்கடந்தசுடர்ச்சோதிபோலும், கன்மலிந்தகயிலைமலைவாண
ர்போலுங்கடனஞ்சமுண்டிருண்டகண்டர்போலு, மன்மலி
ந்தமணிவரைத்திண்டோளர்போலு மலையரையன்மடப்பா
வைபணவளர்போலுங், கொன்பலிந்தமூவிலைவேற்குழகர்போ
லுங்குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனரே. க

ஏவியிடர்ச்கடலிடைப்பட்டிளைக்கின்றேனை யிப்பிறவி
யறத்தேறவாங்கியாங்கே, கூவிமலருலகனைத்துமுருவிப்போ
சுக்குறியிலறுகுணத்தாண்டுகொண்டார்போலுங், தாவிமுத
ற்காலினிலையுமனைங்கைசரச்சுதி பொற்றுமரைபுட்கரணி
தெண்ணீர்க், கோவியொடுகுபரிவாருதீர்த்தஞ்சூழ்ந்தகுடந்
தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனரே. கo

திருச்சிற்றம்பலம்.

உ அ. திருக்குடந்தைக்காரோணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாசார்கொள்கைமாதேர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூசாரார்மழுவொன்றேந்தியன்றண்குழகன்குடமூக்கிற்
காசார்கண்டத்தெண்டோளெங்கைகாரோணத்தாரே. க

மூடியார்மன்னர்மடமான்விழியார்மூவுலகும்மேத்தும்
படியார்பவளவாயார்பலரும்பரவிப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார்மாடவீதிக்குடந்தைக்குழகாருங்
கடியார்சோலைக்கலவமயிலார்காரோணத்தாரே. உ

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்காரோணத்தாரைத்
திருவார்செல்வமல்குசண்பைத்திகழுஞ்சம்பந்த
னுருவார்செஞ்சொன்மாலையிவைபத்துரைப்பாருலகத்திற்
கருவாரிடும்பைப்பிறப்பதறுத்துக்கவலைகழிவாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

---

௨௧. திருநாகேச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தழைகொள்சந்தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நிழலில்வாணர்தொழநல்குசீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கழகாகுமே. ௧

காளமேகந்நிறக்காலனைடந்தகருடனு
நீளமாய்நின்றெய்தசாமனும்பட்டனனினவுறி
ஞாளுந்நாதனமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுந்தியவேனுநன்காங்குறிக்கொண்மினே. ௨

கந்தநாறும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுத
னந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேன்ஞானசம்
பந்தனுரைப்பனவல்லிவைபத்தும்வல்லார்கள்போ
யெந்தையீசன்னிருக்குமூலகெய்தவல்லார்களே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். ௬-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தாயவனேவானோர்க்குமேனோருக்குந்தலையவனேமலையவனேயுலகமெல்லா,
மாயவனேச்சேயவனேயணியான்றன்னேயழலவனேநிழலவனேயறியவொண்ணு,
மாயவனேமறையவனே

மறையோர் தங்கண் மந்திரனீத் தந்திரனே வளராநின்ற, தீயவ னேத்திருநாகேச்சரத்துளானைச்சேராதார்நன்னெறிக்கட்சே ராதாரே. க

அளியானேயண்ணிக்குமான்பாறன்னேவான்பயிரையப் பயிரின்வாட்டந்தீர்க்குந், துளியானேயயன்மாலுந்தேடிக்கா ணுச்சுடரானேத்திரிசறத்தொண்டுபட்டார்க், கெளியானே யாவர்க்குமரியான்றன்னே யின்கரும்பின்றன்னுள்ளாலிருந்த தேறற், றெளியானேத்திருநாகேச்சரத்துளானைச்சேராதார் நன்னெறிக்கட்சேராதாரே. கூ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-பூஞ்சுமம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே குறையணிகுல்லைமுல்லையணிந்துகுளிர்மாதவிமேற் சிறையணிவண்டுகள்சேர்திருநாகேச்சரத்தானே. க

தங்கியமாதவத்தின்றழல்வேள்வியினின்றெழுந்த சிங்கமுரீள்புலியுஞ்செழுமால்கரியோடவுறப் பொங்கியபோர்புரிந்துபிளந்தீருரிபோர்த்ததென்னே செங்கயல்பாய்கழனித்திருநாகேச்சரத்தானே. சு

கொங்கணவண்டரற்றக்குயிலும்மயிலும்பயிலுந் தெங்கணிபூம்பொழில்சூழ்திருநாகேச்சரத்தானே வங்கமலிகடல்சூழ்வயனவலுரன்சொன்ன பங்கமில்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. கக

திருச்சிற்றம்பலம்.

ந0. திருவிடைமருதூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-வியாழக்குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலியுரிவிரவியவரையினர் திரிதருமெயிலவைபுணைகணையினிலெய்த

வெரிதருசடையினரிடைமருதடைவுனல்
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. க

மறிதிரைபடுகடல்விடைமடைமிடறின
ரெறிதிரைகரைபொருமிடைமருதனுமவர்
செறிதிரைகரையொடுசெலவிலருகினிற்
பிறிதிரைபெறுமுடல்பெறுகுவதரிதே. உ

பொருகடலடைதருபுகலியர் தமிழொடு
விரகினன்விரிதருபொழிலிடைமருதினைப்
பரவியவொருப துபயிலவலவரிடர்
விரவிலர்விணையொடுவியனுலகுறவே. ஙக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ருந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாசமொன்றிலராய்ப்பலபத்தர்கள்
நாசநாண்மலர்கொண்டடிவைகலும்
ஈசனீம்பெருமானிடைமருதினில்
பூசனாம்புகுதும்புனலாடவே. க

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினும்
தனிமூடிகவித்தாளுமரசினும
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. கo

மண்ணினுண்டமால்காணன்மலரடி
விண்ணினுண்டயன்காணன்வியன்முடி
மொண்ணிண்மாமருதாவென்றென்மொய்குழல்
பண்ணினுபாயமுந்தானும்பயிலுமே. ஙி

மங்கைகாணக்கொடார்மணமாலையைக்
கங்கைகாணக்கொடார்சூடிக்கண்ணியை
நுங்கைமீரிடைமருதரிற்நுங்கைக்கே
எங்ஙுவாங்கிக்கொடுத்தாரிதழியே. ஙூ

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். சுந்தரர் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

சூலப்படையுடையார் தாமேபோலுஞ் சுடர்த்திங்கட்கண்ணியுடையார்போலும், மாலுமிகிழ்தொருபால்வைத்தார்போலுமந்திரமூர்த்தந்திரமூர்த்தானார்போலும். வேலுக்கடனஞ் சமுண்டார்போலுமேல்வினைகடீர்க்கும்விகிர்தர்போலும், ஏலக்கமழ்குழலாள்பாகர்போலுமிடைமருதுமேவியவீசனரே.

பிரியாதகுணமுமிர்கட்கஞ்சோடஞ்சாய்ப்பிரிவடையகுணம்பேசிற்பத்தேதொடர்ன்றாய், விரியாதகுணமொருகாலுன்கேயென்பர்விரிவிலாக்குணராட்டத்தாறேயென்பர், தெரிவரியகுணமஞ்சுஞ்சமிதையஞ்சுப்பத மஞ்சுங்கதியஞ்சுஞ்செப்பிரும், எரியாயகாமரைமேலியங்கினுமிடைமருதுமேவியவீசனரே. ஏ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.
திருச்சிற்றம்பலம்.

கழுதைகருந்தாந்தான் சுமக்கெய்த்தாரீகைப்பர்பாரும் புகழ்ற்றதுபோலப், பழுதில்நாணுமுன்றுள்ளதுமாறிப்படுசுழித்தலைப்பட்டனனெந்தா, யாழதுபீழிருந்தென்செய்திமனவேயங்கணுவனேயெனமாட்டா, யிழுதையேனுக்கோரூர்வகையருளாயிடைமருதுறைமையங்தைபிரானே. க

புன்னுனைப்பணிவெங்கதிர்கண்டாற்போலுமவாழுக்கைபொருளிலைநாளும், என்னெனக்கினியிற்றைக்குநாளையென்றிருந்திடருற்றனனெந்தாய், முன்னமேயுனசேவடிசேராதமூர்க்கனுகிக்கழிந்தனகாலம், இன்னமென்றனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தபிரானே. உ

குற்றந்தன்னெடுகுணம்பலபெருக்கிக்கோலதண்ணிடையாரொடுமயங்கிக், கற்றிலேனகலிகள்பலஞானங்கடியவாயினகொடுமைகள்செய்தேன், பற்றலாவதோர்பற்றுமற்றில்லேன்பாவியேன்பலபாவங்கள்செய்தேன், எற்றுளேனெனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தபிரானே.

கொடுக்கஇற்றிலேணெண்பொருடன்னைக்குற்றஞ்செற்றமிவைமுதலாக, விடுக்கஇற்றிலேன்வேட்கையுஞ்சினமும்வே

ண்டிலம்புலனின்வசமல்ல. நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெ
ய்திமன்றமர்நரகத்திடலஞ்சி, யிடுக்கணுற்றனலுய்வகை
யருளாயிடைமருதுறையெந்தையபிரானே. எ

ஏழைமானுட னின்பினைகோக்கியிளையவர்வலிப்பட்டி
ருந்தின்னம், வாழுதான்பழக்கும்நமக்கென்றுவஞ்சவல்
வினைபுள்வலிப்பட்டுக், கூழைமாந்தர்தஞ்செல்கதிப்பக்கம்
போகமும்பொருளொன்றறியாத, வேழையேனுக்கோருய்
வகையருளாயிடைமருதுறையெந்தையபிரானே. கூ

ஆரைக்குஞ்சந்தனத்தோடகிலுந்தியையனஞ்சுமந்தா
ர்த்திநபாலு, மிரைக்குங்கானினீர்த்தென்கரைதண்போலிடை
மருதுறையெந்தையபிரானே, யுரைக்குமூரனெளிதிகழ்மாலை
யுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்கள், நரைப்புமூப்பொடுநட
லையுமின்றிநாதன்சேவடிநண்ணுவர்தாமே. கஎ

திருச்சிற்றம்பலம்.

கஉ. திருத்தித்தன்குரங்காடுதுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ
லிலிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
யரவச்சடையந்தணன்மேயவழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே. க

விண்டார்புரமூன்றுமெரித்தனிமல
விண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்கருங்குழன்மங்கையோர்பாகங்
கொண்டானகர்போல்குரங்காடுதுறையே. உ

கல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேற்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறவாரே. கஎ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

தேவாரத்திருத்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்

இரங்காவன்மனத்தார்களியங்குமுப்
புரங்காவல்லழியப்பொடியாக்கினன்
றரங்காடுந்தடநீர்ப்பொன்னித்தென்கரைக்
குரங்காடுதுறைக்கோலக்கபாலியே. சு

முத்தினமணியைப்பவளத்தொளிர்
தொத்தினைச்சுடர்ச்சோதியைச்சோலைசூழ்
கொத்தலர்குரங்காடுதுறையுறை
அத்தனென்னவண்ணித்திட்டிருந்ததே. உ

கடுத்ததோரரக்கன்கயிலைமலை
எடுத்ததோடலையிற்றலறவ்விரல்
அடுத்தனும்மவனின்னிசைகேட்டருள்
கொடுத்தவன்குரங்காடுதுறையனே. கக

திருச்சிற்றம்பலம்.

நஉ. திருநீலக்குடி

திருநாவுக்கரசுநாயனார்.

தேவாரத்திருத்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வைத்தமாடுமனையியுமக்கணீர்
செத்தபோதுசெறியார்பிறிவதே
நித்தநீலக்குடியரனேநினை
சித்தமாகிற்சிவகதிசேர்திரே. க

செய்யமேனியன்றேனெடுபாறையீர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாம்,
கையிலாமலகக்கனியொக்குமே. உ

கல்லினேடெனைப்பூட்டியமண்கையர்
ஒல்லைநீர்புகநூக்கவென்வாக்கினுல்
நெல்லுநீள்வயனீலக்குடியரன்
கல்லுமாமகிழ்றியுய்ந்தேனன்றே, எ

தருக்கிவெற்பதுதாங்கியவீங்குதோள்
அரக்கனுருடலாங்கோர்விரலினால்
நெரித்துநீலக்குடியரன்பின்னேபும்
இரக்கமாயருள்செய்தனனென்பரே. ஏ0

திருச்சிற்றம்பலம்.

ஏஏ. திருவைகன்மாடக்கோயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ஏ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தளமதியுடைமறிதோன்றுகையின
ரிளமதியணிசடையெந்தையாரிட
முளமதியுடையவர்வைகலேர்ங்கிய
வளமதிடவியமாடக்கோயிலே. ஏ

மெய்யகமிளிரும்வெண்ணூலர்வேதியர்
மையகண்மலிமகளோடுமைவிடம்
வையகமகிழ்தரவைகன்மேற்றிசை
செய்யகண்வளவன்முன்செய்தகோயிலே. ஏ

மைந்தனதிடம்வைகன்மாடக்கோயிலைச்
சந்தமார்பொழிலணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பத்திவை
சிந்தைசெய்பவர்சிவலோகஞ்சேர்வரே. ஏ0

திருச்சிற்றம்பலம்.

ஏச. திருநல்லம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. ஈ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கல்லானிழல்மேயகறைசேர்கண்டாவென்
றெல்லாமொழியாவுமிமையோர்தொழுதேத்த
வில்லாலரண்மூன்றுமெய்துஞ்சிவெய்த
நல்லானமையாள்வானல்லநகரானே. ஏ

தக்கன்பெருவேள்வி தன்னிலமரரைத்
தக்கம்பலசெய்தசுடர்பொற்சடைதாழக்
கொக்கின்னிறகோடுகுளிர்வெண்பிறைசூடி
நக்கன்ணமையாள்வானல்லநகரானே. உ

நலமார்மறையோர்வாழ்நல்லநகர்மேய
கொலைசேர்மழுவாளிகொச்சையர்கோற்றோங்கு
கலைமார்தமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
கலைகளிவைவல்லார்கலிகடிவாரே. ஈஈ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். (நு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொல்லைத்தானாரறைசார்வாக்கால்
இல்லைத்தார்செயலாவதெனைழைகாள்
நல்லைத்தானமையாளுடையான்சழல்
சொல்லைத்தான்வல்லீரேற்றுயர்தீருமே. ச

தாக்குநல்லதுதம்மூழ்பிறாயினல்
இணைக்குமபோதுதீராதிக்குற்பைதான்
உடைக்குநல்லவன்றனையும்பதி
நமக்குநல்லதுநல்லமடவதே.

பல்லாலியேதாளரக்கன்வலி
ஒல்லையில்லொழித்தானையும்பதி
நல்லநல்லமெனும்பெயர்நாவினல்
சொல்லவல்லவர்தூநெறிசேர்வரே. கூ

திருச்சிற்றம்பலம்.

நகு. திருக்கோழம்பம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நீற்றுநினீள்சடைமேனிறைவுள்ளதோ
நாற்றுனையழகமர்மென்முலையாளையோர்

கூற்றுனைக் குளிர்பொழிற்கோழம்பமேவிய
வேற்றுனைப்பத்துமிணும்மிடரேகவே. க

மையாரகண்டனைமான்மறியேந்திய
கையானைக்கடிபொழிற்கோழம்பமேவிய
மெய்யானைத்தேனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானைமேவுவார்மேல்வினைமேவாவே. உ

தண்புனலோங்குதண்ணாந்தாய்மாநகர்
நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியடித்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைபாவமே. ஙக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. இ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வேழம்பத்தைவர்வேண்டிற்றுவேண்டிப்போய்
ஆழம்பற்றிவீழ்வார்பலவாதர்கள்
கோழம்பத்துறைகூத்தன்குரைகழல்
தாழும்பத்தர்கள்சாலச்சதுரரே. க

சமரசூரபன்மாவைத்தடிந்தவேற்
குமரன்றுதைநற்கோழம்பமேவிய
அமரர்கோனினுக்கன்புடைத்தொண்டர்கள்
அமரலோகமதாளுடையார்களே. கo

துட்டனெகிமலையெடுத்தானுகிழ்ப்
பட்டுவீழ்ந்தபடர்ந்தயப்போயினன்
கொட்டமாறியகோழம்பத்தீசனென்
றிட்டகீர்த்தமிசைத்தவரக்கனே. ஙக

திருச்சிற்றம்பலம்.

ஈசு. திருவாவடுதுறை.

திருஞான்னசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்-காந்தாரபஞ்சமம். ஈ-ந் திருமுறை.

நாலடி மேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய்
தொடரினுமுனகழறொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தருஞ்சை
மிடறினிலடக்கியவேதியனே
யிதுவோவெமையாளுமாறிவதான்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. க

வாழினுஞ்சாவினுவருந்தினும்போய்
வீழினுமுனகழல்விடுவேனல்லேன்
றாழிளந்தடம்புனறயங்குசென்னி
போழிளமதிவைத்தபுண்ணியனே
யிதுவோவெமையாளுமாறிவதான்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. உ

ஆலபுனலாவடுதுறையமர்ந்த
வீலதுனவேற்படையெம்மிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
வீலியுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயினநீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம்
நிலையாகமுன்னேறுவர்நிலமிசைநிலையிலரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போதும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பார்போதும்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போதுமாவடுதுறையனாரே. க

பார்த்தனுக்கருள்வர்போதும்படர்சடைமுடியர்போதும்
ஏத்துவாரிடர்கடீரவின்பங்கள்கொடுப்பர்போதும்

கூச்சராய்ப்பாடியாடிக்கோடலெயாக்கன்றன்னை
யார்த்தவாயலறவிப்பாராவடுதுறையனமே. கம

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். சுஉ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனீநான்வேதங்கள்கைகண்டாயினைஞானப்பெருங்கட
லேநன்மைதன்னைக். கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்கற்
பகமாயடியார்கட்கருள்செய்வானைச்,செம்பொன்னீப்பவள
த்தைத்திரளுமுத்தைத்திங்களைஞாயிற்றைத்தீயைநீரை, அம்
பொன்னியாவடுதண் டுறையுண்மெயவரனடியே யடிநாபே
னடைந்துய்ந்தேனே. க

பேணியநற்பிறைதவழ்செஞ்சடையினைப்பித்தராமடி
யார்க்குமுத்திசாட்டும், ஏணியைபிடர்க்கடலுட்சழிக்கப்ப
ட்டிங்கிளக்கின்றேற்றுக்கரைக்கேயேறவாங்குந், தோணி
யைத்தொண்டனேன்றாயசோதிச்சுலாவெண்குழையானைச்
சுடர்பொற்காசின், ஆணியையாவடுதண்டுறையுண்மெயவர
னடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. ச

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம். சுஉ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமேதேனேவாழ்ஞர்சொழஞ்சுட
ரேசெழுஞ்சுடரும்சோதிமிக்க, உருவேயென்னுறவேயென்
னூனேயூனுளுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற, கருவேயெ
ன்கற்பகமேகண்ணேகண்ணிற்கருமணியேமணியாடுபாவா
ய்க்காவாய், அருவாயவல்வினைநோயடையாவண்ணமாவடு
தண்டுறையுறையுமமரரேறே. க

மாற்றேமனைவாழ்த்துஞ்சுமென்றுனைன்மறவேன்றிருவ
ருள்கள்வஞ்சகெஞ்சி, னேற்றேன்பிறதெய்வமெண்ணுகா
யேனெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லான், பேற்று
னீசெய்வனகள்செய்யக்கண்டு வேதனைக்கேயிடங்கொடுத்து
காலுநாளும், ஆற்றேனடியேனேயஞ்சலென்னுமாவடுதண்டு
றையுறையுமமரரேறே. உ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பிஸ-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மறையவனெருமாணிவந்தடையவாரமாமிவனெநுயிர் நிறுத்தக், கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்கடிந்த சரணங்கண்டுகண்டடியேய, னிறைவனெம்பெருமானென் றெப்போதுமேத்தியேத்திநின்றஞ்சலீசெய்து, னறைகொள் சேவடிக்கள்போடைந்தேனவுதுறையாதியெம்மானே.

கொருண்டவாயிடைநால்கொண்டுகிலர்திகித்தியப்பத் தர்க்கெனையிற்றுச், சுருண்டசெஞ்சடையாயதுகண்ணிச்சோ ழனைக்கியமதாடர்ச்சென்டடியேன், புறண்டுவீழ்ந்துநின் பொன்பவர்ப்பாதம்போற்றிபோற்றி யென்றன்போம்புலர்ப்பி, யருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனவுது துறையாதியெம்மானே.

திகாழமாலவனுயிரானாலேத்துவானெருநீண்மலர்கு றையப், புகாழிலைவன்கண்ணிடந்திடலுற்புரிந்துசக்கரங் கொடுத்தல்கண்டடியேன், றிகாழுநின்றிருப்பாதங்கள்பரவித்தேவதேவனின்றிறம்பலபிதற்றி, யகாழம்வல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனவுது துறையாதியெம்மானே.

வீரத்தாலொருவேடுவனுகிவிசயத்தோர்கேழலைத்துரத் திச்சென்றுணங்கு, போரத்தான்விசையன்றனக்கன்பாய்ப்புரிந்துவான்படைகொடுத்தல்கண்டடியேன், வாரத்தானுனாமங்கள்பரவிவழிபட்டின்றிரமேற்றுநாருகி,யாரவத்தோடுவந்தடியிணையடைந்தேனவுதுறையாதியெம்மானே.

ஒக்கமுப்புரமோங்கெரிதூவவுன்னுமுன்னியமூவர்தின் சரணம், புக்குமற்றவர்பொன்னுலகாளப்புகழினருளியாக்கையதிற்கு, மிக்கதின்கழலேதொழுதற்றிலேதியாவதி மூர்த்திநின்னடையில், அக்கணிந்தவெம்மானுணியடைந்தேனவுதுறையாதியெம்மானே.

திருச்சிற்றம்பலம்.

ஙஎ. திருத்துருத்தி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம் உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப்பரம்பொடேருங்கலன்கருந்திவர்
திரைத்தலைச்சுரந்துகொண்டெறிந்திலங்குகானிரீக்
கரைத்தலைத்துருத்திபக்கிருப்பதேகருத்திணை
யுரைத்தலைப்பொலிந்தனக்குணர்த்துமாறுவல்லமே. க

அடித்தடித்தகத்தியோடுவன்னிகொன்றைகூளிளந்
தொடித்துடன்சடைப்பெய்தாய்துருத்தியாயோர்காலனைக்
சுடித்தடிப்புறத்தினிறத்துதைத்தகாரணை
மெடித்தெடித்துரைக்குமாறுவல்லமாகினல்லமே. உ

சுற்றுமுற்றினர்தொழுங்கழற்றருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினைவன்பகர்ந்தசொற்களாற்
பெற்றபொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே. சக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொருத்தியகுரம்பைதன்னிற்பொருளெனக்கருதவேண்டாம்
இருத்தியெப்போதுநெஞ்சுளிறைவனீயெத்துதின்கள் [த்த
ஒருத்தியைப்பாகம்வைத்தங்கொருத்தியைச்சடையுள்வைத்த
திருத்தியஞ்சுடரினீனத்தொண்டனேன்கண்டவாறே. க

பாதியிலுமையாடன்னீப்பாகமாவைத்தபண்பன்
வேதியனென்றுசொல்லிவிண்ணவர்விரும்பியேத்தச்
சாதியாஞ்சதுமுகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. உ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவிவடிபடக்
கரையொடுந்திரைகொணர்ந்தெற்று, மன்னமாங்காவிரிய
கன்கரை யுறைவாரடியிணை தொழுதெழு மன்பாமடியார்,
சொன்னவாறறிவார் தருத்தியார்வேள்விக்குடியுளாரடிகள்
ச்செடியனேனையே, னென்னைநான்மறக்குமாறெம்பெருமா
னையென்னுடம்படும்பிணியிடர்கெடுத்தானே. க

கூடுமாறுள்ளனகூடியுங்கோத்துங்கொய்புனலேனலோ
டைவனஞ்சிதறி, மாடுமாகோங்கமேமருதமேபொருதுமலீ
யெனக்குகைகளமறிக்குமாறுந்தி, யோடுமாகாவிரித்தருத்
தியார்வேள்விக்குடியுளாரடிகளச்செடியனேனையேன், பாடு
மாறறிகிலே னெம்பெருமானைப் பழவினையுள்ளன பற்றறுத்
தானே. உ

மங்கையோர்கூறுகந்தேறுகந்தேறிமாறலார்திரிபுரம்
நீறெழச்செற்ற, வங்கையான்கழலடியன்றிமற்றறியாதடிய
வர்க்கடியவன்றொழுவனுரான், கங்கையார்காவிரித்தருத்தி
யார்வேள்விக்குடியுளாரடிகளச்சேர்த்தியபாட, நங்கையா
ரிறைதொழுதெந்நாளின்மேற்கொள்வார் தவநெறிசென்றமருவ
காமாள்பவரே. க0

திருச்சிற்றம்பலம்.

கஅ. திருவழுந்தூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந்
தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
யழுமாறுவல்லாரழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமண்ணினையே.

கடலேறியநஞ்சமுதண்டவனே
யுடலேயுயிரேயுணர்வேயெழிலே

டலேறுடையாயழுந்தைமறையோர்
விடலேதொழுமாமடமேவினையே. உ

அருஞானம்வல்லாரழுந்தைமறையோர்
பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்க
ளுருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே. ४४

திருச்சிற்றம்பலம்.

---

६६. திருமயிலாடுதுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். 1

பண் - சாதாரி. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஏனவெயிறுடையவேடனிவனியாமையிவையுண்டிலோ
யாயப், கானவரிடுமுழையதனுடையபட்சடையர்காணி
யெனலர், மானபுகழ்வேதியர்களாகுதியின்மிதுபுகையோ
கியமுகார், வானமுறுசோலைமிசைமாசுபடலுமயிலாடு
துறையே. க

அந்தண்மதிசெஞ்சடையரங்கணெழில்கொள்றையோ
டணிந்தழகரா, மெந்தமடிகட்கினியதாளமதுவேண்டிலெழி
லார்பதியதாங், கந்தமலிசந்திறைதிகாரகிலும்வாரிவருகா
விரிபுனரால், வந்திதிரையுந்தியெதிர்மந்திமலர்சிந்துமயிலாடு
துறையே. உ

திணந்தருமயானகிலவானமதியாததொருசூலமொடு
போய்ப், சுணங்கெதாழுகபாலிகைபலித்திமிகவாய்த்ததொரு
காதன்மையினுண், மணந்தண்மலிகாழிமறைஞானசம்பந்
தன்மயிலாடுதுறையைப், புணர்ந்ததமிழ்பத்துமிசையாலுரை
செய்வார்பெறுவர்பொன்னுலகமே. ४४

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொல்லுங்காதன்மைபெய்துறுங்கோல்வினை
உள்ளமுள்ளியுரைக்குந்திருப்பெயர்

வள்ளல்மாமயிலாடுதுறையுறை
வெள்ளந்தாங்குசடையனேவேண்டியே. க

அண்டர்வாழ்வுமமராரிருக்கையும்
கண்டுவீற்றிருக்குங்கருத்தொன்றிலோம்
வண்டுசேர்மயிலாடுதுறையரன்
தொண்டர்பாதங்கள்சூடித்தொழுதுமே. உ

சோலும்புல்லுமொருகையிற்கூர்ச்சமும்
தோலுமாடுண்டுதயாமுற்றென்பயன்
நீலமாமயிலாடுதுறையனே
நாலுமேவண்டுமோநுண்ணுணர்ந்தோர்கட்கே. அ

பருத்தகோளரமும்பொடிபட்ட
இருத்திணைவெளின்னிசைகேட்டலும்
வரத்திணைமயிலாடுதுறைதொழுங்
கரத்திணர்வினைகட்டறுங்காண்மினே. ச

திருச்சிற்றம்பலம்.

ச0. திருவிளநகர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஒளிர்விளம்பிறைசென்னிமேலுடையர்கோவணவாடையர்
குளிர்விளம்மலைதவழ்பொழிற்சோலைநீர்மல்குகாவிரி
களிர்விளம்புனல்வார்துறைநங்கைகங்கையெனுண்ணினர்
மிளிர்விளம்பொறியரவினர்மேயதுவிளநகரதே. க

அக்கரவ்வணிகலனெனவதிலைடார்த்ததோராமைபூண்
டுக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
பக்கவர்துயர்கெடுகெனப்பூசுவெண்பொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளநகரவர்மேயதே. உ

மென்கிறைவண்டியாழ்முரல்விளநகர்த்துறைமேவிய
நன்பிறைநுதலண்ணலீச்சண்பைஞானசம்பந்தன்சீ

நின்புறுதிமூழ்கொன்னவேத்துவார்வினைநீங்கிப்போய்த்
அன்புறுதியரம்மிலர்தூதெறிபறுவார்களே. கக

திருச்சிற்றம்பலம்.

சக. திருப்பறியலூர்வீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-மேகராகக்குறிஞ்சி க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன்கடவுள்கனலேந்தியாடு
திருத்தன்சடைமேனிரப்பாமதியன்
பிருத்தமுடையார்திருப்பறியலூரில்
விருத்தனெனத்தகும்வீரட்டத்தானே.

பருந்தனமுதன்மயானத்துண்மைந்தல்
பெருந்தண்புனற்கொன்னிவைத்தபெருமான்
பிரிந்தாமறையோர்திருப்பறியலூரில்
விரிந்தமலர்ச்சோலைவீரட்டத்தானே.

நறுநீருகுங்காழிஞானசம்பந்தன்
வெறிநீர்த்திருப்பறியல்வீரட்டத்தானை
பொறிநீடறவன்புனைபாடல்வல்லார்க்
கறுநீடவலமறப்பற்றப்புத்தானே

திருச்சிற்றம்பலம்.

ரஉ. திருச்செம்பொன்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களே
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. ன

வாரார்கொங்கைமாதோர்பாகமாய்ச்
சீரார்செம்பொன்பள்ளிமேவிய

வேரார் புரிபுன் சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. உ

நறவார் புகழ்ஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்து
முறுமாசொல்லவோங்கிவாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண் - திருக்குறுந்தொகை. ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கானமுதகடிபொழில்வண்டினந்
தேனமுதந்திருச்செம்பொன்பள்ளியான்
ஊனமுதமோர்வெண்டலையிற்பலி
தானமுதமோர்கொள்கையன்காண்மினே. க

என்புமாமையுப்பூண்டங்குழிதர்வார்க்
கன்புமாயிடுமாயினழியினிச்
செம்பொன்பள்ளியுளானிவலோகனே
நம்பொன்பள்ளியுள்கவினைநாசமே. உ

திரியுமும்மதில்செங்கணையொன்றினை
லெரியவெய்தனலோட்டியிலங்கைக்கோன்
தெரியவூன்றியிட்டார்செம்பொன்பள்ளியா
ரரியவானமவரருள்செய்வரே. கக

திருச்சிற்றம்பலம்.

சகு. திருநனிபள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பியந்தைக்காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

"காடைகள்கூகைமுல்லைகளாவாகையீகைபடர்தொடரிசு
ள்ளிகவியிர், சூரைகள்பம்மிவிம்மூசுகாடமர்ந்தசிவன்மே

விசோலைநகர்தான், றேரைகளாரைசாயமிதிகோள்ளவாளா
குதிகொள்ளவள்ளைதவள, நாரைகளார்ல்வாரவயன்மேதி
வைகுநனிபள்ளிபோலுநமர்காள். க

சடையிடைபுக்கொடுங்கியுளதங்குவெள்ளம்வளர்திங்
கள்கண்ணியயலே, யிடையிடைவைத்தவதாக்குமலர்தொத்
தமாலையிறைவன்னிடங்கொள்பதிதான், மடையிடைவாளை
பாயமுகிழ்வாய்நெரிந்துமணநாறுநீலமலருந், நடையுடைய
ன்னம்வைகுபுனலம்படைப்பைநனிபள்ளிபோலுநமர்காள்.

கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்சாழியை
ன்றுகருதப்,படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியாள
ஞானமுனிவ, னிடுமறையொன்றவத்தர்பியன்பேணிருந்திவி
சையாறுரைத்தபனுவ, னடுவிருளார்மெய்ந்தைநனிபள்ளியுள்
சுவினெகெடிதலாணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

நேரிசை. சு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புலர்ந்தகால்பூவுநீருங்கொண்டடிபோற்றமாட்டா
கலஞ்செய்துவாயினூலால்வட்டணைப்பத்தர்செய்த
சிலந்தியையரசனுக்கிச்சிர்மைகளருளவல்லார்
நலந்திகழ்சோலைசூழ்ந்தநனிபள்ளியடிகளாரே. உ

தஞ்சிருள்காலைமாலைதொடர்ச்சியைமறந்திராதே
யஞ்செழுத்தோதிநாளுமரனடிக்கன்பதாரும்
வஞ்சனைப்பாற்சோருக்கிவழுக்கிலாவமணர்தந்த
நஞ்சமுதாக்ஞனித்தார்நனிபள்ளியடிகளாரே. ஙி

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியன்னதிரையன்னையன்மாலறிதற்கரிய
சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறைநான்கினையு

மோதியனும்பர் தங்கோனைத்தினைவ்வுபிர்க்கு
நாதியனம்பெருமானண்ணுமூர்நனிபள்ளியதே. க

பண்ணற்கரியதொருபடையாழிதனைப்படைத்த
கண்ணற்கருள்புரிந்தான்கருதாதவர்வேள்வியினி
லுண்ணற்கியையவரையுருண்டோடவிதைத்தகந்தி
நண்ணற்கரியபிரானண்ணுமூர்நனிபள்ளியதே. ஞ

காலமுராழிகையுக்கனிபள்ளிரானத்தினுள்ளிக்
கோலமதாயவினைக்குளிர்காலைவுரல்சொன்ன
மாலுமாதித்தரைப்பார்மண்மறந்தவரேனுலகித்
சாலநல்லின்பமெய்தித்தவலோகத்திருப்பவரே. கo

திருச்சிற்றம்பலம்.

சச. திருவலம்புரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பஸ்ர-பழம்பஞ்சுரம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கொடியுடைமும்மதிலூர்திருவக்குளிவெஞ்சிலைதாங்கி
யிடியுடனெய்தவமரர்பிரானடியாரிசைந்தேத்தத்
துடியிடையாளையோர்பாகமாகத்துளைதற்சாரிடம்போலும்
வடிவுடைமேதிவயல்படியும்வலம்புரனன்னகரே. க

கோத்தகல்லாடையுங்கோவணமுங்கொடுகொட்டியுஞ்
சொண்டிடருகையர், தேய்த்தன்றநங்களினத்தைதூழித்தருத்தி
ரையாற்றொழுதேத்தச், காய்த்தசல்லாலதனின்கிழிருந்தசடை
விடம்போலும், வாய்த்தமுதத்தினத்தாழிஞன்மறையோர்வ
லம்புரனன்னகரே. உ

நல்லியுனன்மறையோர்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
வல்லியந்தோலுடையாரடியினன்வலம்புரனன்னகரைச்
சொல்லியபாடல்சொல்பத்துஞ்சொல்லவல்லவர்தம்வினைபோய்ச்
செல்வனசேவடிசென்றணுகிச்சிவலோகஞ்சேர்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

தேவாரம். ஆறாந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மண்ணளந்தமணிவண்ணர் தாமுமற்றுமறையவரும்
வானவருஞ்சூழநின்று,கண்மலர்த்திருநூற்றியுடையாரொற்
றைக்கதகாகங்கையுடையார்சாணிரன்றே, பண்மலிந்தமெ
ழுதியவருமியாணுமெல்லாம்பணிந்திறைஞ்சித்தம்முடையபின்
பின்செல்ல, பண்மலிந்தவயல்புடைசூழ்மாடவீதிவலம்புர
மேபுக்கங்கேமன்னினரே. ௧

செங்கண்மால்சிலபிடித்துச்சேனையோடுஞ்சென்றபந்த
னஞ்செய்துசென்றுபுக்குப்,பொங்குபோர்பலசெய்துபுகர
ல்வென்றபோராரக்கனெடுமுடிகள்பொடியாய்வீழ, அங்கொ
ருதன்றிருவிரலாலிறையேயூன்றியபாடற்கவர்க்கேயருள்புரிந்
தவிடங்களிற்சார்ந்தள், வங்கமலிகடல்புடைசூழ்மாடவீதிவலம்புர
மேபுக்கங்கேமன்னினரே. ௧0

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பஞ்சமதாந்தாரம். எட்டாந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எனக்கினித்தினைத்தனைப்புகலிடமறிந்தேன்
பனிக்கினிப்பழம்படும்பாவையிற்கரைவேன்
சினக்கினியவன்றமர்க்கினியவனெழுதையு
மனக்கினியவன்றனதிடம்வலம்புரமே. ௧

புரமலையெரிதரவூன்றுதன்னினைவன்
மரகதமணிபுனைதளைமிசையருளின
னரவரியிருந்தவனிரந்தணைரிருப்பிகின்
றிரவெரியாடிதனிடம்வலப்புரமே. ௨

வருங்கலமும்பலபேணுதல்கருங்கட
லிருங்குலப்பிறப்பர்தமிடம்வலம்புரத்தினை
யருங்குலத்தருந்தமிழ்ஞரன்வன்மெண்டன்சொற்
பெருங்குலத்தவர்கொடுபிதற்றுதல்பெருமையே. ௩

திருச்சிற்றம்பலம்.

சரு. திருத்தலைச்சங்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கலைச்சங்கவெண்குழைபுந்தோடும்பெய்தோர்காற்வெதஞ்
சொலைச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
நூலைச்செங்காய்ப்பைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலுந்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. க

தணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்திரண்டுர்க்கெல்வாமாண்பானீர்
பிணிமல்குநூன்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
யணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. உ

நனிநம்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குனிநந்தலைச்சங்கையோங்குகோயின்மேயாதீனை
யொனிநம்பிறையாதினையுரைத்தபாடலிவைவல்லார்
மினிநந்திரைசூழ்ந்தவையத்தோர்க்குமேலாரே. கக

திருச்சிற்றம்பலம்.

சகூ. திருவாக்கூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்தவாரமுமாடாவுமாமையுந்
தொக்கிருந்தமார்பினன்றோலுடையான்வெணணீற்றான்
புக்கிருந்ததொல்கோயில்பொய்யிலாமெய்ந்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. க

நன்மையானுரணனும்நான்முகனுங்காண்பரிய
தென்மையான்றோற்றங்கேடில்லாதான்றெல்கோயில்
இன்மையாற்சென்றிரந்தார்க்கில்லையென்னுமீக்குவக்குந்
தன்மையாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. கூ

ஆடலார்ந்தாணயாக்கூரிற்றுன்றேறுன்றி
மாடமயர்ந்தாணமாடஞ்சேர்தண்சாழி
நாடர்சுரியசீர்ஞானசம்பந்தன்சொற்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. ௯

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். சுத்த திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

முடித்தாமரையணிந்தமூர்த்தியேபூமலைகுந்தாமரை நின்றார்போலும், கடித்தாமரையேய்த்தண்ணார்போலுங்கல் லைகுபாணிபயின்றார்போலும், கைகூடித்தாபரைக்காடே டுந்தொண்டர்குற்றேவருமகிழ்ந்தகுழகர்போலும், அடித் தாமலராலர்மேல்வைத்தார்போலுமாக்கூரிற்றுன்றேறி யப்பனரே. ௧

ஏகாசமாம்புலித்தோல்பாம்புதாழவிடவெண்டலைசல ணவேந்திநாளு, மேகாசங்கட்டழித்தவெள்ளிமாலபுனைசர் சடைமுடிமேற்புனைந்தார்போலும், ஆகாசமாயவெண்ணீ ருந்தியமதியமதிபிறந்தவிண்ணுமண்ணும், ஆகாசமென்றி னையுமானார்போலுமாக்கூரிற்றுன்றேறியப்பனரே. ௨

திருச்சிற்றம்பலம்.

சஎ. திருக்கடவூர்வீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். சுத்த திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சடையுடையாணெய்யாடலாணுஞ்சரிசோவணை
வுடையுடையாணமையார்ந்தவொண்கண்ணுமாகேளவணங
கடையுடைகன்னெடுமாடமோங்குகடவூர்தனுள்
விடையுடையண்ணலும்வீரட்டானத்தரனல்லனே. ௧

எரிதருகொன்றைசடையாணும்வெள்ளையெருதேறியும்
பரிதருமாமலர்க்கொன்றைமாலபுனைந்தேத்தவே

சரிதருகாலினைக்காடினலுங்கடலூர்தனுள்
விரிதருதாமரைப்பூம்பீரட்டானத்தரனல்லனே. உ

வெந்தவெண்ணீறணிபீரட்டானத்தறவேந்தனை
யந்தணர்க்கடலூருமாணியணிகாழியான்
சந்தமல்லாமடிகாத்தல்லமறைஞானசம்
பந்தனசொற்பிழைப்பாடியாடக்கெடும்பாவமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. சுந்தரமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொருந்புலர்காலைமுழுப்பித்தர்க்குப்பத்தராகி [அ
யருந்பெரும்பாலர்கள்கொண்டாங்கார்வத்தையுள்ளவத்
விருந்பிநல்விளக்குத்தூபம்விரும்பினைடவல்லார்க்குக்
கருந்பினிற்கட்டிபோல்வார்கடலூர்வீரட்டனுரே. ச

பாழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வாழிவிடவாழுமாட்டேன்மாயமுற்றுதெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கையையரவாலிக்கப்பட்டுக்
கூழியிடத்தேரணிபோன்றேன்கடலூர்வீரட்டனுரே. சு

சேலினேரனையகண்ணுர்நிறம்விட்டுச்சிவனுக்கன்பாய்ப்
பாலுநற்றயிர்நெய்யோடுபலபலவாட்டியென்னு
மாலினைத்தவிர்ந்றமார்க்கண்டர்க்காகவன்னு
காலனையுதைப்பர்போலுங்கடலூர்வீரட்டனுரே. கூ

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம். சுந்தரமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாநட்டியர்தீரவன்றர்ச்சித்தமாணிமார்க்கண்டேயற்சா
னிநட்டியமேனிவனேவாவெயிற்றெரிபோலுங்குஞ்சிச்
சுநட்டியநாவில்வெங்கூற்றப்பதைப்பவுதைத்தங்கனே
யுநட்டியசேவடியான்கடலூருறையுத்தமனே. க

பாலனுக்சாலன்றுபற்கடலீர்த்துபணைத்தெழுந்த
வாலினிற்கீழிருந்தாணைமோதியருமுனிக்காச்
சூலமும்பாசங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடலூருறையுத்தமனே சூ

கேழலதாகிக்கினறியகேசவன்காண்பரிதாம்
வாழிநன்மாமலர்க்கண்ணிடந்திட்டவம்மாலவற்கன்
றாழியுமீந்தவடிதிறற்காலனையன்றடர்த்து
ஆழியுமாயபிரான்கடவூருறையுத்தமனே. ४

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம். ८-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்சூலமேலேவல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியார்கொன்றையனேகடவூர்தனுளீரட்டத்திதம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணையாவதே. ४

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொண்
டிறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர்தனுளீரட்டத்திதம்
மிறைவாவென்னமுதேயெனக்கார்துணையாவதே. २

காராருஞ்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்தான்
சேராருஞ்சிறையத்தினையாமெழிலைவர்கோன்
ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. ४०

திருச்சிற்றம்பலம்.

८४. திருக்கடவூர்மயானம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-கொந்தாரம். २-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
யெரியமதில்கணெய்தாரெறியுமுரசமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே.

பங்கமணந்தமார்பர்மழுவாள்வலனேந்திநீறு
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்

செங்கண்வெள்ளேறுதிச்செல்வஞ்செய்யாவருவா
ரங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே.

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவினினைவார்வினைகளிலரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை. ருஃ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சூழைகொள்காதினர்கோவணவாடையர்
மழைபயிற்றாங்கடவூரின்மயானத்தார்
பழைபயிற்றம்மடியார்செயும்பாவமும்
பிழைபுரிப்பர்பெருமானடிகளே. க

உன்னிவானவரோதியசிற்தையிற்
கன்னிறைன்கடவூரின்மயானத்தார்
தன்னைநோக்கித்தொழுதெழுவார்க்கொலாம்
பின்னையென்னர்பெருமானடிகளே. உ

அரவுகையினராதிபுராணனர்
மரவுசேர்கடவூரின்மயானத்தார்
பரவுவாரிடர்தீர்ப்பர்பணிகொள்வர்
பிரமன்மாற்கும்பெருமானடிகளே. அ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பஞ்-பழம்பஞ்சுரம் எஃ திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பாருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்பலிபோல
வாருவார்விடைமேன்மாதேதும்மகிழ்ந்துபூதப்படைசூழ்ந்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. க

விண்ணேர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரீர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிடையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. ௮

மாடமல்குகடவூரின்மறையோரேத்தமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்தீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. ௯0

திருச்சிற்றம்பலம்.

---

௮௬. திருவேட்டக்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பஞ்சமம். கூ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்குமலர்க்கொன்றைவிரிசடைமேல்வரியரவம்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காவலிகளைசுழல்கிப்பட்டவளைத்
தொண்டிரைத்துத்தித்தாழ்திறைஞ்சத்துளங்கொளிர்ச்சுடர்
தெண்டிரைக்கண்கொணார்ந்தெறியுந்திருவேட்டக்குடியாரே.

தோத்திரமாமணலிலிங்கந்தொடங்கியவானிறையிற்பால்
பாத்திரமாவாட்டுதலும்பரஞ்சோதிபரிந்தருளி
யாத்தமெனமறைநால்வர்க்கறப்புரிநூலன்றுரைத்த
தீர்த்தமல்குசடையாருந்திருவேட்டக்குடியாரே. ௮

தெண்டிரைசேர்வயலுடுத்தசிருவேட்டக்குடியாரைத்
தண்டலைசூழ்கழிக்காழித்தமிழ்ஞானசம்பந்த
னெண்டமிழ்நூலிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போ
யுண்டிடுப்பில்வானவரோடுயர்வானத்திருப்பாரே. ௯௯

திருச்சிற்றம்பலம்.

ஙக. திருத்தெளிச்சேரி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-இந்தளம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பூவலர்ந்தனகொண்டுமுப்போதுமும்பொற்கழ
றேவர்வந்துவணங்குமிருதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனும்
பாவகங்கொடுநின்றதுபோலுநம்பான்மையே. க

லோகத்தும்பத்திக்குணிண்ணவர்மண்ணவரேத்தவே
நோக்குந்தீர்த்தமதிகழ்தெளிச்சேரியீர்
வோக்குந்திண்சிலைமேலுந்துபாணமுந்தானெய்து
களிக்குங்காமனெங்கனகீர்கண்ணிற்காய்ந்ததே. உ

திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனை
நிக்கசாழியுண்ஞானசம்பந்தன்னினைப்பிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கடாடமுடி
தொக்கவானவர்சூழவிருப்பவர்சொல்லிலே. கக

திருச்சிற்றம்பலம்.

ஙஎ. திருத்தருமபுரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - யாழ்முரி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியு-மட-வன்னமுமன்னதோர்
நடையுடைம்மல மக டுணையெனமகிழ்வர்
பூதவினப்படைகின்-றிசை-பாடவுமாடுவ
ரவர்-படர்சடைநெடு-முடியதோர்புனலர்
வேதமோடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரை
யிரைத்துரைகரைபொருது-விம்மிகின்றயலே
தாதவிழ்புன்னைதயங்-குப-லர்ச்சிறைவண்டரை
யெழில்பொழில்குயில்பயில்-தருமபுரம்பதியே. க

பொன்னெடுநன்மணிமா-ளிகைசூழவிழவம்மலி
பொருபுனல்திருவமர்-புகலியென்றுலகிற்
றன்னெடுநேர்பிறவில்-பதி-ஞானசம்பந்தனஃ
தெகந்தமிழ்த்தடங்கடற்-றருமபுரப்பதியைப்
பின்னெடுவார்சடையிற்-பிறையும்மரவும்முடை
யவன்பிணைதுணைகழல்கள்-பேணுசலுரியா
சின்னெடுநன்னுவகெய்-துவ-ரெய்தியபோகமு
முறுவர்களிடர்பிணி-துயரணிலரே. ௪௪

திருச்சிற்றம்பலம்.

---

௬௨. திருநள்ளாறு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-பழந்தக்கராகம். ௪-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னெடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. ௧

தோடுடையகாதுடையன்றோலுடையன்றொலியாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
சேடுடையமேலுலகோர்சேர்ந்தடிபுனைந்தேத்த
நாடுடையநம்பெருமான்மேயதுநள்ளாறே. ௨

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
கண்புரைகார்மல்குகாழிஞானசம்பந்தனல
பண்புரைபாடலாடற்பத்தமிவைவல்லா
ருண்புகுந்திவ்வானவரோடுலகிலுறைவாரே. ௪௪

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம்-பண்-இந்தளம். ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலஞ்சடையெமைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. ௧

பாலனடிபேணவவனுயிர்குறைக்குங்
காலனுடன்மாளமுனுதைத்தவரனூராங்
கோலமலர்நீர்க்குடமெடுத்தமறையாளர்
நாலின்வழிநின்றுதொழில்பேணியாள்வாரே. கூ

ஆடலரவார்சடையுமிழுதலைஞெடுங்
காடுமலிவெய்திடனிருந்தவனள்ளார்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொற்
பாடலுடையாரையடையாபழிகணையே. ககூ

திருச்சிற்றம்பலம்.

கிருவிராகம்-பண்-சாதாரி. கூ-ந் கிருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதகுதெழிறருதிகழ்மலிமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னெளிரிளவளரொளிமருவுகள்ளாறர்தங்நாமமே
மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலெய்மையே. கூ

போதமர்தருபுரிகுழலெழின்மலிமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவளமுலைசெறிதலி
னூதமதெழிலுருவணியகள்ளாறர்தங்நாமமே
மீதமதெரியினிலிடிலிவைபழுதிலெய்மையே. உ

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரு
நற்றிறமுலகுழுமலருகர்ஞானசம்பந்தன்
கொற்றவனெதிரிடையெரியினிலிடிலிவைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே. ககூ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

கிருத்தாண்டகம். கூ-ந் கிருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ஆதிக்கணன்முகத்திலொன்றுசென்றுவல்லாதசொல்
லுரைக்கத்தன்கைவாளால், சேதித்ததிருவடியைச்செல்லாக்
கிலகிலோகநெறிவகுத்துக்காட்டுவானே, மார்க்கமையமா
தோர்கூறுயினானமாமலர்மேலயனேடுமாலுங்காணு, நடு
னையாம்பியைகள்ளாற்றிலானேனடியேனிணக்கப் பெற்றுய்ந்த
வாறே. கூ

குலங்கெடுத்துக்கோணீக்கவல்லான்றன்னீக்குலவரை
யன்மடப்பாவையிட்ப்பாலாணீ, மலங்கெடுத்துமாநீர்த்தமா
ட்டிக்கொண்டமறையவனீப் பிறைதவழ் செஞ்சடையினீனீ
ச், சலங்கெடுத்துத்தயாமூலதன்மூமென்னுந்தத்துவத்தின்வ
ழிநின்றுசூழ்ந்தார்க்கெல்லாம், நலங்கொடுக்குநம்பியைநள்
ளாற்றினீநானடியேனீக்கப்பெற்றுய்ந்தவாறே. சு

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-தக்கேசி. எ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

செம்பொன்மேனிவெண்ணீறணீவாணீக்கரியகண்டனீ
மாலியன்காணீச், சம்புவைத்தழலங்கையினீனீச்சாமவேத
னீத்தன்னெப்பிலானீக், கும்பமாகரியின்னுரியானீக்கோவி
ன்மேல்வருங்கோவினீநங்க, ணீம்பனீநள்ளாறனீயமுதை
நாயினேன்மறந்தென்னினீக்கேனே. க

மறவனீயன்புபன்றிப்பின்சென்றமாயனீநால்வர்க்காலி
ன்கீழரைத்த, அறவனீயமார்க்கரியாணீயமர்சேனீக்குநா
யகனனீ, குறவர்மங்கைதன்கேள்வனீப்பெற்றகோனீநள்
செய்தகுற்றங்கள்பொறுக்கு, நறைவிரியுநள்ளாறனீயமுதை
நாயினேன்மறந்தென்னினீக்கேனே. ர

மாதினீக்குடம்பிடங்கொடுத்தானீமணியினீப்பணிவா
ர்வினீனெடுக்குமு, வேதனீவேதவேள்வியர்வணங்கும்விபுல
னீயடியேற்கெளிவந்த, தூதனீத்தன்னீத்தோமையருளித்
தொண்டனேன்செய்ததீச்சுகள்பொறுக்கு, நாதனீநள்ளாற
னீயமுதைநாயினேன்மறந்தென்னினீக்கேனே. அ

செறிந்தசோலைகள்சூழ்ந்தநள்ளாற்றெஞ்சிவனீநாவலூ
ர்ச்சிங்கடிதர்தை, மறந்தானான்மற்றுனீப்பதேதென்றுவன
ப்பகையப்பனூரன்வன்றொண்டன், சிறந்தமாலீகொடைஞ்
சினீடைஞ்சுஞ்சிந்தையுள்ளுருகிச்செப்பவல்லார்க், கிறந்து
போக்கில்லைவானில்லையாகியின்பவெள்ளத்துளிருப்பர்களினிதே.

திருச்சிற்றம்பலம்.

நாங. திருக்கோட்டாறு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-சீகாமரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

கருகுதடங்கண்ணின்மாதராரிசைசெய்யக்காதிற்கிலம்பூம்
குருகுதமாதவியின்னிரைமல்குகோட்டாற்றி [பொழிற்
விருகுதவெம்பெருமானீயுள்கியிணையடிதொழுதேத்தாராக்
வருகுதமாதறியார்நெறிசேர்வர்வானுளோடே. [தர்கள்

விரிவிளைஞெம்விழாவிடைப்பொலிதெண்டர்வெதுவியத்தப
சுரவுமாருழற்பொழின்மல்குகோட்டாற்றி [ண்சையக்
ரைவிளிள்சடையானீயுள்கிநின்றுதித்தமூனன்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறுப்பாரே. நு

காலனைக்கழலாலுதைத்தொருகாலாலக்கனலாகச்சிறிபெய்
கோலவார்குழலார்குடிகொண்டகோட்டாற்றின் [ல்லிய
மூலனைமுடிவொன்றிலாதவெம்மூத்தசினப்பிரிவில்பத்துசொ
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. கக

திருச்சிற்றம்பலம்.

நாசு. திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரபஞ்சமம். ரு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

எரிதரவனல்கையிலேந்தியெல்லியி
னரிதிரிகானிடைநட்டமாடுவா
ரரிசிலம்பொருபுனலம்பர்மாநகர்க்
குரிசில்செங்கண்ணவன்கோயில்சேர்வுமே. க

மையகண்மலிமகள்பாகமாயிருள்
கையதோர்கனலெரிகனலவாடுவ
ரையனன்பொருபுனலம்பர்ச்செம்பியர்
செய்யகணிறைசெய்தகோயில்சேர்வரே. உ

அழகையடிகளையம்பர்மேனிய
ரிழுகுசடைமுடிநீலகண்டரை
யுமிழ்திரையுகினிலோதுவீர்சொன்மிள்
றமிழ்கெழுவிரகினர்நிறைந்தசெய்மாலையே. கம

திருச்சிற்றம்பலம்.

நாநி. திருஅம்பர்மாகாளம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-குறிஞ்சி. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

அடையார்புரமூன்றமனலாய்விழவெய்த
மடையார்புனல்சூழ்பர்மாகாளம்மேய
விடையார்கொடியெந்தைவெள்ளைப்பிறைசூடி
சடையாரடிபேணத்தடையாவினைதானே. க

தேனார்தமதுத்தங்கிங்கள்புனல்சூடி
வானார்பொழிலம்பர்மாகாளம்மேய
வூனார்தலைகொள்ளிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
யானைன்கழலேத்தவல்லடையாவினை. உ

வெருநீர்கொளமேவாங்குவேணுபுரந்தன்னுட்
டிருமாமறைஞானசம்பந்தன்சேணூர்
பெருமான்மலியம்பர்மாகாளம்பேணி
யுருகாவுரைசெய்வாருயர்வானடைவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

நிசு. திருமீயச்சூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-காந்தாரம். உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்தகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்மாறுத்தமைந்தன்றாளதன்னீர்
மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே.

பூவார்சடையின்முடிமேற்புனலானல்கொள்வார்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலையேந்தி
யேவார்மலியேகிலையர்க்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. உ

வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
நாடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழீரைந்துமொழிந்தள்கி
யாடுமடியாரகல்வானுலகமடைவாரே. க

திருச்சிற்றம்பலம்.

ருஎ. திருமீயச்சூரிளங்கோயில்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண் - திருக்குறுந்தொகை. டு-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றங்கோயிலுந்தோன்றியகோயிலும்
வேற்றுக்கோயில்பலவுளமீயச்சூர்க்
கூற்றம்பாய்ந்தகுளிர்புன்சடையாற்
கேற்றகோயில்கண்டரிளங்கோயிலே. க

வேதத்தானென்பர்வேள்வியுளானென்பர்
பூதத்தானென்பர்புண்ணியன்றன்னையே
கீதத்தான்கிளருந்திருமீயச்சூர்
ஏதந்தீர்க்கநின்றரிளங்கோயிலே. உ

கடிக்கனைகயிலாயமலைதனை
எடுக்கலுற்றவிராவணனீடற
இடுக்கணின்றிவெகுண்டவன்மீயச்சூர்
இடுக்கண்டீர்க்கநின்றரிளங்கோயிலே. ரo

திருச்சிற்றம்பலம்.

௹அ. திருத்திலைதைப்பதி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-செவ்வழி. உ-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

பொடிகள்பூசிப்பலதொண்டர்கூடிப்புலர்காலையே
யடிகளாரதுதொழுதேத்தநின்றவழகன்னிடங்
கொடிகளோங்கிச்சுலவுமின்னார்திலைதைப்பதி
வடிகொள்சோலைம்மலிபணைகமழும்மதிமுத்தமே. க

புரிவியேழும்மணிபூண்டியங்குங்கொடித்தேரினன்
பரவிநின்றுவழிபாடுசெய்யும்பரமேட்டியூர்
விரவிஞாழல்விரிசோங்குலவங்கைசுரபுன்னைசண்
மரவமவ்வன்மலருந்திலைதம்மதிமுத்தமே. ங

மந்தமாரும்பொழில்சூழ்திலைதைமதிமுத்தமேற்
கந்தமாருங்கடற்காழியுளான்றமிழ்ஞானசம்
பந்தன்பாலிபழிதீரநின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார்சிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. ஙக

திருச்சிற்றம்பலம்.

ஙஎ. திருப்பாம்புரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்-தக்கராகம். க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்
தசெல்வர், வாரணிவனமுலைமங்கையோர்பாகர்பான்மறியே
ந்தியமைந்தர், சாரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்சண்ணு
தல்லிண்ணவரேத்தும், பாரணிதிகழ்தருதான்மையாளர்பா
ம்புரநன்னகராரே. க

மாலினுக்கன்றுசக்கரமீந்தமாலைவரைக்கொருமுகமொரி
த்தே, ஆலின்கிழறவோர்கால்வருக்கருளியஎமதுவாடுமெம்
படிகள், காலனைக்காய்ந்தஅங்கழலடியார்காபணைப்பொடிப
டநோக்கிப், பாலனுக்கருள்கள்செய்தவெம்படிகள்பாம்புர
நன்னகராரே. எ

பார்மலிந்தோங்கிப்பருமதில்சூழ்ந்தபாம்புரநன்னகரார்
கைக், கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலமுதுபதிக்
கலணி, நார்மலிந்தோங்குநான்மறைஞானசம்பந்தன்செந்
தமிழ்வல்லார், சீர்மலிந்தழகார்செல்வமேதோங்கிச்சிவனடி
நண்ணுவர்தாமே. கக

திருச்சிற்றம்பலம்.

கூ0. திருச்சிறுகுடி.

திருஞானசம்பந்தசமூர்த்திநாயனார்.

பண்-சாதாரி. க-ந் திருமுறை.

திருமுக்கால்.

திருச்சிற்றம்பலம்.

திடமதிமதில்சிறுகுடிமேவிய
படமலியரவுடையீரே
படமலியரவுடையீருமைப்பணிபவ
ரடைவதுமமருலகதுவே. க

கிற்றிடையுடன்படுகிற்சிறுகுடிமேவிய
கற்றியசடைமுடியீரே
கற்றியசடைமுடியீருமதாழகழ
ரற்றவருறுவினையிலரே. உ

தேனமர்பொழிலணிசிறுகுடிமேவிய
மானமர்கரமுடையீரே
மானமர்கரமுடையீருமைவாழ்த்திய
ஞானசம்பந்தனதமிழே. கக

திருச்சிற்றம்பலம்.

கூக. திருவீழிமிழலை

திருஞானசம்பந்தசமூர்த்திநாயனார்.

பண்-நட்டபாடை. க-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சடையார்புனலுடையானெருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமையாளிடமுடையானெனவுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிமிழலையே. க

நாய்முதலொன்றுயிருபெண்ணுண்குணமூன்றுய்
மாறுமறைநான்காய்வருபூதம்மலைவையந்தா
யாருர்சுவையேழோசையொடெட்டுத்திசைதானுய்
வேறுயுடனுணிடம்வீழிம்மிழலையே. ௨

வீழிம்மிழலம்மேமனியகிர்தன்றிணிமாசேர்
காழிங்ககர்க்கலுஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
யாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரெல்லா
மூழின்வலினீனேபோயிடவுயர்வானடைவாரே. ௩

திருச்சிற்றம்பலம்.

திருவிருக்குக்குறள்-பண்-துறிஞ்சி. ௧-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

வாகிதீரவே, கரகுகல்குவீர்
மாகின்மிழலையீ, ரேசலிக்கிலே. ௧

இறைவரானினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காகினீ, முறைமைமகல்குமே. ௨

காழிமாநகர், வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், முழுமொழிகளே. ௩

திருச்சிற்றம்பலம்.

பண்-மேகராகக் குறிஞ்சி. ௨-ந் திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

ரிசையும்வடவாலின்கிழிருந்தங்கிருவர்க்கிரங்கின்று, கேரியனன்மறைப்பொருளுரைத்தொளிசேர்நெறியளித்தானின்றுகோயில், பாரிசையும்பண்டிதர்கள்பன்னுளும்பயின்றேதுபோசைகேட்டு, வேரிமலிபொழிற்கின்னவேதங்கள்பொருட்சொல்லுமிழலையாமே.

உரைச்சேருமெண்பத்தானான்குநூறியிரமாம்யோனிபேத, நிரைச்சேரப்படைத்தவற்றினுயிர்க்குயிராயங்கங்கேகின்றன்கோயில், வரைச்சேருமுகின்முழவமயிற்கள்டலாட மாடவண்டுபாட, விரைச்சேர்பொன்னிதழிதரமென்காந்தள்கையேற்குமிழலையாமே.

ஆறுசடைமுடியானனலாடுமலர்க்கையனீறுமெய்ப்பானவ,
கூறுமிருவுருவனகூத்தாடுங் குணமுடையோன் குளிருங்
கோயில், சேறுபடுசெங்கழுநீர்த்தாதாடுமதிவண்டுசிவந்தவ
ண்டு, வேறுபவுவாகிச்செவ்வழிநற்பண்பாடுமிழலையாமே.

திருச்சிற்றம்பலம்.

பண்-புறநீர்மை. சுரம் நிருமுறை.

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்கோலாடைபூண்பதுநாகப்பூசுரார்தம்பிரடிதோ
ஹு,கொள்ளித்தீவிளக்குக்கூவிரல் கூட்டுங்கபாரியைக்குணஞ்
செய்கூத்துடையோர், னள்ளற்காராமையதடிவான்படியேமை
ய்க்குமுட்டாழைகளாகினை, வெள்ளைக்கொம்பினும்வினிபொ
ழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. க

தன்றவர்பெரியசலந்தரனுடலந்தடிந்தசக்கரமெனக்கருளன், றன்றரிவழிபட்டிழிச்சியவிமானத்திறையவன்பிறையணிசடையர், நின்றநாள்காலெரிந்தநாணமாலிகிடந்தமண்மேல்வருகலிகா, வென்றவேதியர்கள்விழாவறுவீழிமிழலையானெனவினைகெடுமே. எ

வேந்தர்வந்திறைஞ்சவேதியர்வீழிமிழலையுள்விண்ணிழிவிமானத், தேய்ந்தகன்றெறியோடுறைகின்றவீசனையெம்பெருமானை, தேர்ந்தநீர்த்தேனணிபுரத்துறைபடையோன்றமொழிஞானசம்பந்தன், வாய்ந்தபாமாலைவாய்நவில்வாரை வானவர்வழிபடுவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம். சுரம் நிருமுறை.

திருச்சிற்றம்பலம்.

போராணையிருநிலைப்போர்வையாணைப்புலியதளையுடை
யாடைபோற்றினைப், பாராணைமதியாணைப்பகலாஞாண்ப
ல்லுமிராய்நெடுவெளியாய்ப்பரந்துநின்ற, நீராணைக்கரற்றுணைத்
தீயாணைநிலனாதார்புறமெரியநிலைத்தெய்வத், தேராணைத்
திருவீழிமிழலையாணைச்சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே.

அன்றலின்கீழிருந்தங்கறஞ்சொன்னீயகத்தியனீயு
கப்பானீயயன்மாறேட, நின்றனீக்கிடந்ததனஞ்சுண்டா
னேரிழையைக்கலந்திருந்தேபுலன்களைந்தும், வென்றனீ
மீயச்சூர்மேவினனீ மெல்லியலாடவத்தினிறையளக்கலுற்
றுச், சென்றனீத்திருவீழிமிழலையானீச்சேராதார்தீநெறிக்
கேசேர்கின்றாரே. ங

அறுத்தானீயயன்றலைகளைஞ்சிலான்றையஞ்சாதேவு
ரையெடுத்தவரக்கன்றோள்க, ளிறுத்தானீயெழுநரம்பினிசை
கேட்டானீயிந்துசன்னத்தேய்த்தானீயிரளிதன்மேற், பறித்தா
னீப்பகீரதற்காவானேர்வேண்டப் பரந்திழியும்புனற்கங்கை
பனிபோலாகச், செறுத்தானீத்திருவீழிமிழலையானீச்சேரா
தார்தீநெறிக்கேசேர்கின்றாரே. கo

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணவன்காண்கண்ணிணைசேர்காட்சியான்காண்கந்
தருவம்பாட்டிசையிற்காட்டுகின்ற,பண்ணவன்காண்பண்ண
வற்றின்றிறலானன்காண்பழமாகிச்சுவையாகிப் பயக்கின்ற
ன்காண், மண்ணவன்காண்டீயவன்காணீரானன்காண்வந்த
லைக்குமாருதன்காண்மழைமேகஞ்சேர், விண்ணவன்காண்
விண்ணவர்க்கு மேலானன்காண் விண்ணிழிதண் வீழிமிழலை
யானே. க

ஆலைப்படுகரும்பின்சாறுபோலவண்ணிக்குமஞ்செழுத
தினுமத்தான்காண், சிலமூடையடியார்சிந்தையான்காண்டி
ரிபுரமூன்றெரிபடுத்தசிலையினன்காண், பாலினெடுதயிர்நறு
நெய்யாடினன்காண்பண்டரங்கவேடன் காண்பலிதேர்வான்
காண், வேலைவிடமுண்டமிடற்றினன்காண்விண்ணிழிதண்
வீழிமிழலையானே. உ

மெய்த்தவன்காண்மெய்த்தவத்தினிற்பார்க்கெல்லாம்
விருப்பிலாவிருப்புமனவினையர்க்கென்றும்,பொய்த்தவன்கா
ண்புத்தன்மறவாதேதாடி யெறிசல்லிபுதுமலர்களாக்கினன்கா
ண், உய்த்தவன்காணுயர்கதிக்கேயுள்கினுரையுகனைத்தி
மொளித்தளித்திட்டுய்யச்செய்யும், வித்தகன்காண்வித்தகர்
தாம்விருப்பியேத்தும்விண்ணிழிதண்வீழிமிழலையானே.

திருச்சிற்றம்பலம்.

பதியினைச்சென்றணுகாப்பசுபாசம்
யதியணுகிற்பசுபாசமிலாவே. ஐ

சூரியகாந்தமுஞ்சூழ்பஞ்சும்போலவே
சூரியகாந்தஞ்சூழ்பஞ்சைச்சுடமாட்டாச்
சூரியன்சந்நிதியிற்சுடுமாறுபோ
லாரியன்றோற்றமுனற்றமலங்களே. ஓ

கிழக்கொழுந்தோடியஞாயிறுமேற்கே
விழக்கண்டுந்தேரார்விழியிலாமாந்தர்
குழக்கன்றுசூதறுதாய்ச்சிலநாளில்
விழக்கண்டுந்தேரார்வியனுலகோரே. ஙி

சொல்லிடுசுத்தன்றுகூறியமாக்களை
வல்லிடிக்காரர்வலிக்கயிற்றுற்சுட்டிச்
செல்லிடுநில்லென்றுதீவாய்நரகிடை
நில்லிடுமென்றுநிறுத்துவர்தாமே. ஙஙி

பொல்லாப்புலாலுதகரும்பூலையை
யெல்லாருங்காணவியமன்றன்றூதுவர்
செல்லாகப்பற்றியதீவாய்நரகத்தின்
மல்லாக்கத்தள்ளிமறித்துவைப்பாரே. ஙஙி

ஆத்தமலையாளகத்திலிருக்கவே
சாத்தமலையாளுக்காமுறுங்காலையர்
காய்ச்சரவின்கனியுண்ணமாட்டாம
லீச்சம்பழத்துக்கிடருற்றவாறே. ஙஙி

திருமந்திரம்.

திருத்திவளர்த்ததேர்தேமாங்கனியை
யருத்தமென்றெண்ணியறையிற்புதைத்துப்
பொருத்தமிலாதபுளிமாங்கொம்பேறிக்
கருத்தறியாதவர்காலற்றவாறே. ௧௮

இலைவாயினுமெட்டிபாழுக்காற்
சூலைவாங்கனிகொண்டுனைலாகா
மூலைவங்கொண்டுமுறுவல்செய்வார்மேல்
விலகுறுநெஞ்சினெவ்துகொள்வீரே. ௧௯

கல்லாவரசனுங்காலனேரொக்குங்
கல்லாவரசனிற்காலன்மிகநல்லன்
கல்லாவரசனறமோரான்கொல்லென்பான்
நல்லாரைக்காலனணுகில்லானே. ௨௦

வேடரெறிந்தில்லார்வேடம்பூண்டென்பயன்
வேடரெறிந்தபோர்வேடமேமெய்வேடம்
வேடரெறிந்தில்லார்தம்மைனிறல்வேந்தன்
வேடரெறிசெய்தால்வீடதுவாகுமே. ௨௧

ஆவையும்பானையுமற்றறவோரையுந்
தேவர்கள்போற்றுந்திருவேடத்தாரையுங்
காவலன்காப்பவன்காவாதொழிவனேல்
மேவுமறமைக்குமீளாநரகமே. ௨௨

தத்தஞ்சமயத்தகுதிநில்லாதாரையு
யத்தன்சிவன்சொன்னவாகமநூனெறி
யெத்தண்டமுஞ்செயுமம்பையிலிம்மைக்கே
மெய்த்தண்டஞ்செய்வதவ்வேந்தன்கடனே. ௨௩

யாவர்க்குமாமிறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம்பசுவுக்கொருவாயறுகு
யாவற்குமாமுண்ணுப்போதொருகைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னாதானே. ௨௪

அன்புஞ்சிவமுமிரண்டென்பரறிவிலா
ரன்பேசிவமாவதாருமறிகிலா
ரன்பேசிவமாவதாருமறிந்தபி
னன்பேசிவமாயமர்ந்திருந்தாரே. ௨௫

என்பெலிறகாயிறைச்சியறுத்திட்டுப்
பொன்போற்கனலிற்பொரியவறுப்பினு
மன்போடுருகியகங்குழைவார்க்கன்றி
யென்போன்மணியினையெய்தவொண்ணுதே. ஏஉ

கற்றுஞ்சிவஞானமில்லாக்கலதிகள்
சுற்றமும்வீடார்தூரிசருர்மூடர்கண்
மற்றும்பலதிசைகாணர்மதியிலோர்
கற்றன்பினிற்போர்கணக்கறிந்தார்களே. ஏந

சத்தியைவேண்டிச்சமயத்தேதார்கள்ளுண்பர்
சத்தியழிந்ததுதம்மைமறத்தலால்
சத்திசிவஞானந்தன்னிற்றலைப்பட்டுச்
சத்தியஞானவானந்தத்திற்சார்தலே. ஏச

சத்தனருடரிற்சத்தியருளுண்டாஞ்
சத்தியருடரிற்சத்தனருளுண்டாஞ
சத்திசிவமாமிரண்டுந்தன்னுள்வைக்கச்
சத்தியுமெண்சித்தித்தன்மையுமாமே. ஏரு

அப்பணிசெஞ்சடையாதிபுராதனன்
மூப்புரஞ்செற்றனனென்பர்கண்மூடர்கண்
மூப்புரமாவதுமும்மலகாரிய
மப்புரமெய்தமையாரறிவாரே. ஏசு

அடிசேர்வினன்னவெம்மாதியையேநோக்கி
முடிசேர்மலாகனர்மகளாகித்
திடமாதவஞ்செய்துதேவரறியப்
படியாரவர்ச்சித்துப்பத்திசெய்தாளே. ஏள

திரிகின்றமுப்புரஞ்சென்றபிராணி
யரியனென்றெண்ணியயர்வுறவேண்டாம்
பரிவுடையாளர்க்குப்பொய்யலனீசன்
பரிவொடுதின்றுபரிசறிவானே. ஏஅ

ஆழிவலங்கொண்டயன்மாலிருவரு
மூழிவலஞ்செய்யவொண்ணுடாதியு
மாழிகொடுத்தனனச்சுதற்கவ்வழி
வாழிப்பிரமற்கும்வாள்கொடுத்தானே. ஏஊ

திருமந்திரம்.

தாங்கியனிருபதுதோளுந்தடவரை
யோங்கவெடுத்தவனைப்பில்பெருவலி
யாங்குநெரித்தமராவென்றழைத்தபின்
னீங்காவருள்செய்தானின்மலன்றானே. ௫0

உலவுதறிதண்டியொண்மணற்கூட்டி
யுலவுகையாணிந்துமாட்டத்தன்றனை
செலுவதைசெய்துசிதைப்பமுனிந்து
மலுமழுவால்வெட்டிமாலைபெற்றானே. ௫௧

அரிபிரமன்றக்கனருக்கனுடனே
வருபதிவாலவன்னிகல்லிந்திரன்
சிரமுகநாசிசிறந்தகைதோள்தா
னரனருளின்றியழிந்தகல்லோரே. ௫௨

சக்கரம்பெற்றுநற்றுமோதரன்றானுஞ்
சக்கரத்தன்னைத்தரிக்கவொண்ணுமையால்
மிக்கரன்றன்னைவிருப்புடனர்ச்சிக்கத்
தக்கநற்சத்திலைத்தான்கூறுசெய்தானே. ௫௩

பிரமனுமாலும்பிரானேநானென்னப்
பிரமன்மாறங்கடம்பேதமையாலே
பரமனனலாய்ப்பரந்தமுன்னிற்க
வரனடிதேடியறற்றுகின்றாரே. ௫௪

திலமத்தனைபொன்சிவஞானிக்கீந்தால்
பலமுத்திசித்திபரபோகமுந்தரும்
திலமத்தனைபொன்னேதின்மூடர்க்கீந்தால்
பலமுமற்றேபரபோகமுங்குன்றுமே. ௫௫

தாவரலிங்கம்பறித்தெதான்றிற்றாபித்தா
லாவதன்முன்னேயரசுதிலகெடுஞ்
சாவதன்முன்னேபரநேரானயித்திடுங்
காவலன்பேர்நந்திகட்டுரைத்தானே. ௫௬

கட்டுளித்தார்மதிற்கல்லொன்றுவாங்கிடில்
வெட்டுவிக்கும்மெறிதேடகத்தரசரை
மூட்டுவிக்கும்முனிவேதியராயினும்
வெட்டுவித்தேவிடும்விண்ணவனீனையே. ௫௭

ஆற்றருநோய்மிக்கவனிமழையின்றிப்
போற்றருமன்னரும்போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத்தான்றிருக்கோயில்களீரணைவ
சாற்றியபூசைகள்தப்பிடற்றானே. ஈஅ

முன்னவனர்கோயில்பூசைகண்முட்டிடின்
மன்னர்க்குத்தீங்குளவாரிவளங்குன்றுங்
கன்னங்களவுமிகுத்திடுங்காசினி
யென்னருந்தியெடுத்துரைத்தானே. ஈஆ

பேர்கொண்டபார்ப்பான்பிரான்றனையர்ச்சித்தாற்
போர்கொண்டவேந்தர்க்குப்பொல்லாவியாதியாம்
பார்கொண்டநாட்டுக்குப்பஞ்சமுமாமெண்றே
சீர்கொண்டநந்திதிருத்துரைத்தானே. சடி

அப்பகையாலேயசுரருந்தேவரு
நற்பகைசெய்தநடுவேமுடிந்தன
ரெப்பகையாகிலுமெய்தாரிறைவனைப்
பொய்ப்பகைசெய்யினுமொன்றுபத்தாமே. சக

ஓரெழுத்தொருபொருளுணரக்கூறிய
சீரெழுத்தாளரைச்சிதையச்செப்பிலு
ளூரிடைச்சுணங்கணுய்ப்பிறந்தங்கோருசம்
பாரிடைக்கிரிமியாய்ப்படிவர்மண்ணிலே. சக

டஞ்சினிபத்தர்கள்தத்துவஞானிகள்
சித்தங்கலங்கச்சிதைவுகள்செய்தவ
ரத்தமுமாவியுமாண்டொன்றின்மாய்ந்திடுஞ்
சத்தியமீதுசதாநந்திதானே. சஈ

ஈசனடியாரிதயங்கலங்கிடத்
தேசமுநாடுஞ்சிறப்புமழிந்திடு
வாசவன்பீடமுமாமன்னர்பீடமு
நாசமதாகுமேநம்நந்தியாணையே. சஉ

அரகரவென்னவரியதொன்றில்லை
யரகரவென்னவறிகிலர்மாந்த
ரரகரவென்னவமரருமாவ
ரரகரவென்னவும்பிறப்பன்றே. சஊ

அறிவார்பராசத்தியானந்தமென்பா
ரறிவாரறிவுருவாமவளென்பா
ரறிவார்கருமமவளிச்சையென்பா
ரறிவார்ரபனுமவளிடந்தானே. சக

ஓங்காரியென்பாளவளொருபெண்பிள்ளை
நீங்காதபச்சைநிறத்தையுடையவ
ளாங்காரியாகியேயையவரைப்பெற்றிட்டு
நீங்காரத்துள்ளேயினி திருந்தாளே சஎ

கங்காளன்பூசுங்கவசத்திருநீற்றை
மங்காமற்பூசமகிழ்வினோடாமாகிற்
றங்கூவினைசளுஞ்சாருஞ்சிவகதி
சிங்காரமானதிருவடிசேர்வீரே. சஅ

குருட்டினைநீக்குங்குருவினைக்கொள்ளார்
குருட்டினைநீக்காக்குருவினைக்கொள்வர்
குருடுங்குருடுங்குருட்டாட்டமாடிக்
குருடுங்குருடுங்குழிவிழுமாறே. சக

புண்ணியஞ்செய்வார்க்குப்பூவுண்டுநீருண்டு
வெண்ணலுதகண்டருள்புரியாநிற்கு
மெண்ணிலிபாவிகளெம்பிறையீசனை
நண்ணியாபணிவுகின்றிலரே. ரு

வெள்ளக்கடலுள்விரிசடைநந்திக்கு
வுள்ளக்கடற்பக்குவார்சுமைபூக்கொண்டு
சள்ளக்கடல்விட்டுக்கைதொழுமாட்டாதா
ரள்ளக்கடலுளழுந்துகின்றாரே. ருக

படமாடக்கோயிற்பகவற்கொன்றீயி
னடமாடக்கோயினமபர்க்கஙகாகா
நடமாடக்கோயினப்பர்க்கொன்றீயிற்
படமாடக்கோயிற்பகவற்குதாமே. ருஉ

அகரமாயிரமந்தணர்க்கீயிலென்
சிகரமாயிரஞ்செய்துமுடிக்கிலென்
பகருஞானிபகலுண்பலத்துக்கு
மிகரிலையென்பதுநிச்சயந்தானே. ருந

பரந்துலகேழும்படைத்தபிரானே
யிரந்துணியென்பர்களெற்றுக்கிரக்கு
நிரந்தரமாகநினையுமடியர்
சிரந்தண்டுதன்கழலெட்டச்செய்தானே. நச

பெறுதற்கரியபிறவியைப்பெற்றும்
பெறுதற்கரியபிரானடிபேணார்
பெறுதற்கரியபிராணிகளெல்லாம்
பெறுதற்கரியதோர்பேறிழந்தாரே. நந

மரத்தைமறைத்ததுமாமதயானை
மரத்தின்மறைந்ததுமாமதயானை
பரத்தைமறைத்ததுபார்முதற்பூதம்
பரத்தின்மறைந்ததுபார்முதற்பூதமே. நசு

அறிவுவடிவெனறறியாதவென்னை
யறிவுவடிவெண்றருள்செய்தானந்தி
யறிவுவடிவென்றருளாலறிந்தே
யறிவுவடிவென்றறிந்திருந்தேனே. நள

சித்தாந்தத்தேசிவன்மூத்திசித்தித்தலாற்
சித்தாந்தத்தேநிற்போர்மூத்திசித்தித்தவர்
சித்தாந்தம்வேதாந்தஞ்சைவம்பாருளாதலாற்
சித்தாந்தவேதாந்தங்காட்டுஞ்சிவனேயே. நஅ

வேதமோடாகமமெய்யாமிறைவனூ
லோதுஞ்சிற்பும்பொதுவுமென்றுள்ளன
நாதனுணர்வைநாடிலிரண்டுந்தம்
பேதமதென்பர்பெரியோர்க்கபேதமே. நக

அறிவறிவென்றுவறிவுமனுதி
யறிவுக்கறிவாம்பதியுமனுதி
யறிவினைக்கட்டியபாசமனுதி
யறிவுபதியிற்பிறப்பறுத்தானே. கூ0

பசுப்பலகோடியிரண்மூதலாய்ப்
பசுக்களைக்கட்டியபாசமூன்றுண்டு
பசுத்தன்மைநீக்கியப்பாசமறுத்தாற்
பசுக்கடலிவனைப்பற்றிடாவே. கூக

திருமந்திரம்.

ஆயபதிதானருட்சிவலிங்கமா
மாயபசுபமடலேறெனநிற்கு
மாயபெலம்பீடமாகுநற்பாசமா
மாயவரனிலையாய்ந்துகொள்வார்கட்கே. ௬௨

தன்னையறிந்திடுந்தத்துவஞானிகண்
முன்னைவினையின்முடிச்சையவிழ்ப்பர்கள்
பின்னைவினையைப்பிடித்துப்பிசைவர்கள்
சென்னியில்வைத்தசிவனருளாலே. ௬௩

மாடத்துளானலன்மண்டபத்தானலன்
கூடத்துளானலன்கோயிலுள்ளானலன்
வேடத்துளானலன்வேட்கைவிட்டார்நெஞ்சின்
மூடத்துளேநின்றுமுத்திதந்தானே. ௬௪

ஆசையறுமின்களாசையறுமின்க
ளீசனேடாயினுமாசையறுமின்க
ளாசைபடப்படவாய்வருந்துன்டங்க
ளாசைவிடவிடவானந்தமாமே. ௬௫

அடியாரடியாரடியார்க்கடிமை
கடியனுய்ந்கிட்டடிமையுப்பூண்டே
னடியாரருளாலவனடிகூட
வடியானிவனென்றடிமைகொண்டானே. ௬௬

கருடனுருவங்கருதுமளவிற்
பருவிடந்தீர்ந்துபயங்கெடுமாபோல்
குருவினுருவங்குறித்தவப்போதே
திருமலந்தீர்ந்துசிவமவனுமே. ௬௭

சிவசிவவென்கிலர்தீவினையாளர்
சிவசிவவென்றிடத்தீவினைமாளுஞ்
சிவசிவவென்றிடத்தேவருமாவர்
சிவசிவவென்னச்சிவகதிதானே. ௬௮

சிவாயநமவெனச்சித்தமொருக்கி
யவாயமறவேயடிமையதாக்கிச்
சிவாயசிவசிவவென்றெண்றேசிந்தை
யவாயங்கெடநிற்சிவானந்தமாமே. ௬௯

எங்குந்திருமேனியெங்குஞ்சிவசத்தி
யெங்குஞ்சிதம்பரமெங்குந்திருநட்ட
மெங்குஞ்சிவமாயிருத்தலாலெங்கேங்குந்
தங்குஞ்சிவனருட்டன்னினையாட்டதே. எ0

சிற்பரஞ்சேர்திசிவானந்தக்கூத்தினைச்
சொற்பதமாமந்தச்சுந்தரக்கூத்தினைப்
பொற்பதிக்கூத்தினைப்பொற்றில்லைக்கூத்தினை
யற்புதக்கூத்தனையாரறிவாரே. எக

புனிக்கண்டவர்க்குப்புனலூறுமாபோற்
கனிச்சுரந்திருக்கூத்துக்கண்டவர்க்கெல்லா
மனிக்குமருட்கண்ணீர்சோர்நெஞ்சருக்கு
மொனிக்குளானந்தத்தமுதூறுமுள்ளத்தே. எஉ

அரண்முடிதோற்றமமைத்தறியா
மரணங்கிதன்னிலறையிற்சங்கார
மரணுற்றணப்பிலமருந்திரோதாயி
யரனடியென்றுமனுக்கிரகமென்னே. எகூ

பட்டிப்பசுக்களிருபத்துநாலுள
குட்டிப்பசுக்களொருமூளைவந்துள
பட்டிப்பசுக்கள்குடப்பாற்சொரியினும்
பட்டிப்பசுவேபனவற்குவாய்த்ததே. எச

நூறுப்பசுக்களிருபத்துநாலுள
வூற்றுப்பசுக்களொருகுடம்பால்போதுங்
காற்றுப்பசுக்கள்கறந்துண்ணுங்காலத்து
மாற்றுப்பசுக்கள்வரவறியோமே. எஙி

பார்ப்பானகத்திலேபாற்பசுவைந்துண்டு
மேய்ப்பாருமின்றிவெறித்துத்திரிவன
மேய்ப்பாருமுண்டாய்வெறியுமடங்கிநற்
பார்ப்பான்பசுவைந்தும்பாலாச்சொரியுமே. எசு

முகத்திற்கண்கொண்டுகாண்கின்றமூடர்கா
ளகத்திற்கண்கொண்டுகாண்பதேயானந்த
மகட்குத்தாய்தன்மணாளனேடாடிய
சுகத்தைச்சொல்லெனாற்சொல்லுமாறெங்ஙனே

மூலனுரைசெய்தமூவாயிரந்தமிழ்
மூலனுரைசெய்தமூன்னூறுமந்திரம்
மூலனுரைசெய்தமூப்பதுபதேசம்
மூலனுரைசெய்தமூன்றுமொன்றுமே. ௭௮

வாழ்கவேவாழ்கவென்நந்திதிருவடி
வாழ்கவேவாழ்கமலமறுத்தாள்பதம்
வாழ்கவேவாழ்கமெஞ்ஞானத்தான்றுள்
வாழ்கவேவாழ்கமயமிலான்பாதமே. ௭௯

திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாந்திருமுறை.

திருவாலவாயுடையார்
அருளிச்செய்த

திருமுகப்பாசுரம்.

திருச்சிற்றம்பலம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மெழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலாக்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலைய குடைக்கீழ்ச்
செருமா வலகக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநாபிபொழிந்தாசுண்டுகண்வெண்பற்கு
ழிவயிற்றுப், பங்கிவிலந்திராபற்கணீண்டுபாடியர்நீள்கணிக்
காலேர்பெண்பேய், தங்கியலறிபுலாறுகாட்டிற் றுழ்சடை
பெட்டுச்திசையும்வீசி, யங்கங்குளிர்ந்தனலாடுமெங்களப்ப
னிடந்திருவாலங்காடே. க

களரிக்கவட்டிடைக்காலிநீட்டிக்கடைக்கொள்ளிவாய்
கிமித்துமையை, விள்ளவொழதிவிடுவெடென்னநக்குவெ
ருண்டிலிலங்குபார்த்துத், தூளிச்சுடலைச்சுடுபிணத்திச்சுட்
டிடமுறைஞ்சுளிர்தூதி, யள்ளியணிக்கின்றுடுமெங்களப்ப
னிடந்திருவாலங்காடே. உ

ஒப்பிணையில்லவன்பேய்கள்கூடியொன்றினையொன்றடி
த்தெதாக்கலித்துப், பப்பிணையிட்டுப்பகண்டைபாடப்பாடிருந்
தந்நியாழுமைப்ப, வப்பனையணிதிருவாலங்காட்டுளடிகளுச்
செடலைக்காரைக்காழ்வேய, செப்பியசெந்தமிழ்பத்தும்வல்
லார்சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே. கச

திருச்சிற்றம்பலம்.

மூத்ததிருப்பதிகம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசேர்ந்தகுடர்கவ்வப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்கூழகனுடமே. க

நிணந்தானுருகிநிலைந்தானனைப்பநெடும்பற்குழிகட்டேய்
தினங்கையெறிந்துசூழுநோக்கிச்சுடலைநீழ்த்தெங்கும்
கணங்கள்கூடிப்பிசங்கண்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டில்லைகையேந்தியழகனுடுமே. உ

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வார்திருநட்ட
மாடுமரவ்மரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தசுனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. கக

திருச்சிற்றம்பலம்.

அற்புதத் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பிறந்துமொழிபயின்றுபின்னெல்லாங்காதல்
சிறந்தங்கின்சேவடியேசேர்ந்தே—னிறந்திசழு
மைஞ்ஞான்றகண்டத்தவாளனேர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர். க

இடர்சுளையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறச்சோலத்தெரியாடுமெம்மானர்க்
கன்பருதென்னெஞ்சவர்க்கு. உ

யானேதவமுடையேனென்னெஞ்சேநன்னெஞ்சம்
யானேபிறப்பறுப்பானென்ணினேன்—யானேயக்
கைம்மாவுரிபோர்த்தகண்ணுதலான்வெண்ணீற்ற
வம்மானுக்காளாயினேன். ங

அறிவானுந்தானேயறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானேவிசுடர்ப்பராகாச
மப்பொருளுந்தானேயவன். ச

ஒருபாலுலகளந்தமாலவனுமற்றை
யொருபாலுமையவளாமென்று—மிருபாலு
நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமா
னின்னுருவோமின்னுருவோநோக்கு. ஞ

காலையேபோன்றிலங்குமேனிகடும்பகலின்
வேலையேபோன்றிலங்கும்வெண்ணீறு—மாலையின்
ரூங்குருவேபோலுஞ்சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளேபோலுமிடறு, ரு

திருச்சிற்றம்பலம்.

ஐயடிகள் காடவர்கோனயனார்

அருளிச் செய்த

கூடற்திரத்திருவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமேயுற்றாருங்
கோடுகின்றூர்மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற்றம்பலமே நண்ணுமுனன்னெஞ்சே
தில்லைச்சிற்றம்பலமே சேர் க

கடுவடுத்த நீர்கொடுவா காடிதீவென்று
நடுநடுதது நாவடங்காமுன்னம் - பொடியடுத்த
பார்ழ்க்கோட்டஞ் சேராமுன்பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக்கிட. உ

குந்திநடந்து குனிந்தொருகை கோலூன்றி
மருந்திருமியேங்கி நரைத்தேறி - வந்துந்தி
யையாறுவாயாறுபாயாமுனெஞ்சமே
யையாறுவாயாலழை. ங

காலைவடிவொழிந்து கையுறவோ டையுறவாய்
நாளுமணுகி நலியாமுன் - பாலை
யணிழ்கமுகம் பூஞ்சோலையாரூர்க்காளாய்க்
கணிழ்சிமுகங்கூம்புகவென்கை. ச

காலைக்கரையிழையாற்கட்டித் தாங்கையார்த்து
மாலைதலைகணிந்துமையெழுதி - மேலோர்
பருக்கோடிமூடிப் பலரழாமுன்னந்
திருக்கோடி காவடைநீ சென்று. ஞ

தொட்டுத்தடவித்திடிப்பொன்றுங் காணுது
பெட்டப்பிணமென்றுபேரிட்டுக் - கட்டி

யெடுங்கள்த்தா் வெண்ணுமுன் னேழைமட்டெஞ்சே
கெடுங்களத்தான் பாதகிணை. சு

படிமுழுதும் வெண்குடைக்கிழ்ப்பாலொமாண்ட
முடியரசர் செல்வத்துமும்மை - கடியிலிக்கு [பட்
தோடேந்துகொன்றையந்தார்ச் சோதிக்குத்தொண்டு
டோடேந்தியுண்பதுறும். எ

குயிலொத்திருள்குஞ்சி கொக்கொத்திருமல்
பயிலப்புகாமுன்னநெஞ்சே - மயிலைத்
திருப்புன்னையங்கானல் சிந்தியா யாகி
லிருப்பின்னை யங்காந்திஞாத்து அ

இல்லுமிபொருளு மிருந்தமினையளவே
சொல்லுமயலார் தடிப்பளவே - நல்ல
கிளைகுளத்துரளவேகிற்றியே நெஞ்சே
வளைகுளத்துளீசனையேவாழ்த்து. கூ

என்னெஞ்சேயுன்னை யிரந்துமுரைக்கின்றேன்
கன்னஞ்செய்வாய்கிற் காலத்தால் - வன்னெஞ்சேய்
மாகம்பத்தானையுரித்தானை வண்கச்சி
யேகம்பத்தானை யிறைஞ்சு. கூ

தஞ்சாகமூவுலகு மாண்டு தலையளித்திட்
டெஞ்சாமைபெற்றிடினும் யான்வேண்டே - னெஞ்சங்
கரந்துண்டகண்டர்தம்மொற்றியூர்பற்றி
யிரந்துண்டிருக்கப்பெறின். கக

நூற்றினத்தேர்பல்லூழிதுண்வயிரவெண்குடைக்கிழ்
வீற்றிருந்த செல்வம்மினையாதே - கூற்றுதைத்தா
ளுடரவங்கச்சாவரைக்கசைத்தவம்மீன்றன்
பாடரவங்கேட்டபசல். கஉ

டெய்யுமருந்திதினை யுண்மினென வுற்றூர்
கையைப்பிடித்தெதிரே காட்டியக்காற் - பையவெ
ழுந்திருமியான்வேண்டேனென்னுமெஞ்சே
செழுந்திருமயானமேசேர். கஙு

திருச்சிற்றம்பலம்.

சேரமான் பெருமாணயனார்

அருளிச் செய்த

பொன்வண்ணத்தந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனிப்பா
லின்கிலங்கு, மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்
சடை வெள்ளிக்குன்றந், தன்வண்ண மெவ்வண்ண மவ்
வண்ண மால்விடை தன்னைக்கண்ட, வென்வண்ண மெவ்
வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே. க

இடமால் வலந்தானிடப்பா துழாய்வலப் பாலொண் கொ
வடமா லிடந்துகி றேல்வல மாழிபிடம்வலமா [ன்றை
னிடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழிலிவஞ்சேர்
குடமா லிடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே.

வானக மாண்டுமந் தாகினி யாடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல் வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப் போருங் கனகவண்ணப்
பானிற நீற்றுக் கடியரு மல்லாப் படிறருமே. ங

உலகா ளுறுவீர் தொழுமின் விண்ணுள்வீர் பணிமினித்தம்
பலகா முறுவீர் நினைமின் பரமெனு டொன்றுபற்றீர்
நலகா மலர்சூ ளரிச்சிமி ணைர கத்துறிற்கு
மலகா யிறுவீ ரரனடி யாரை யலைமின்களே. ச

கொடிமே லிடபமுங் கோவணக் கிளரீமோர் கொக்கிறகு
மடிமேற் கழலு மகலத்தி னீறுமை வாயரவு,
முடிமேன் மதியு மூருதலர் கொன்றையு மூனிலைய
வடிவேல் வடிவுமென் கண்ணுளைப்போ தும் வருகின்றவே. ஞ

வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம்வைகற் குவை
கல், பொருகின்ற போர்க்கொன்று மாற்றகில் லேனிபொ
டிப் பூசிவந்துன், னருகொன்றி நிற்க வருளுகண் டாயழல்
வாயரவம், வெருகொன்ற வெண்மதி செஞ்சடைமேல்வை
த்தவேதியனே. ஞ

விரிகின்ற ஞாயிறு போன்றது மேனியஞ்ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடையச்சடைக்கீழ்ச்

சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்றவெண்முகில்போன் றுளதாலெந்தையொண்பொடியே.

சொல்லா தனகொழு காவல்ல சோதியுட் சோதிதன்போர்
செல்லாச் செனிமரக் தேறித்தொ ழாதகை மண்டிணிந்த
கல்லா நினையா மனம்வணங் காத்தலீ யும்பொறையா
மல்லா வவயவந் தாலு மனிதர்க் கசேதனமே. அ

தனக்குன்ற மாவையஞ் சங்கரன் றன்னரு ளன்றிப்பெற்றான்
முனக்கென்னு நஞ்சிற் கடையா கினவன் முதலிரியும்
புனக்கொன்றை யானரு ளாற்புழு வாகிப் பிறந்திடினு [னே
மெனக்கென்றும் வானவர் பொன்னுலகோடொக்க வெண்ணுவ

ஓர்க்கின்ற நீரு மனஞ் மதியுமை வாயாவு
மோர்க்கின்ற யோகு முருவு மருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையு மானும்பகலு மிரவுமெல்லாங்
கார்க்கொன்றை மாலையி னூர்க்குட னுகிக் கலந்தனவே. கo

கூறுமி னீசனைச் செய்ம்மின்குற் றேவல் குளிர்மின்கண்க
டேறுமின் சித்தந் தெளிமின் சிவனைச் செறுமின்செற்ற
மாறுமின் வேட்கை யதுமி னைவல மிவைநெறியா
வேறுமின் வானத் திருமின் விரும்தா விமையவர்க்கே. கக

சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழுவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே. கஉ

பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்து புக்கிங்
குய்யா வுடம்பினை நேர்வ நடப்ப பறப்பவென்று
நையா விளியினு நானில மானினு நான்மறைசேர்
மையார் மிடற்ற னடிமற வாவரம் வேண்டுவனே. கஙு

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

கைலைபாதி காளத்திபாதி யந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

சொல்லும்பொருளுமே தூத்திரியுகெய்யுமா
கல்லிடிஞ்சிலென்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பாவிளக்காவியன் கயிலைமேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று. க

பெற்றபயனிதுவேயன்றேபிறந்தியான்
கற்றவர்களேத்துஞ்சீர்க்காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத்தாடாவஞ்சூழ்ந்தணிந்தவம்மானுக்
காளாகப்பெற்றேனடைந்து. உ

உலகமீனத்தினுக்கு மொண்ணுதன்மேலிட்ட
திலகமெனப்பெறினுஞ் சீசீ - யிலகியசீ
ரீசாதிருக்கயிலையெம்பெருமா னென்றென்றே
பேசாதிருப்பார் பிறப்பு. ங

பிறப்புடையார்கற்றோர் பெருஞ்செல்வர் மற்றுஞ்
சிறப்புடையரானுஞ் சீசீ - யிறப்பில்
கடியார்ந்றுஞ்சோலைக் காளத்தியாளவா
ரடியாரைப் பேணுதவர். ச

கதையிலேகேளீர் கயிலாயநோக்கிப்
பதையிருட்கண்மாலோடும்போகிச் - சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற்பாசுபதம் பெற்றுச் செருக்களத்திற்
பார்த்தன்போர்வென்றிலனே பண்டு. ஞ

பண்டுதொடங்கியும் பாவித்து நின்கழற்கே
தொண்டுபடுவான் றொடர்வேனைக் - கண்டுகொண்
டாளத்தியாவுண்டோ வில்லையோசொல்லாயே
காளத்தியாயுன் கருத்து. ட

வந்தமரேத்து மடைகூழும் வார்சடைமேற்
கொந்தவிழ்மாலை சூடித்தார்கொல் - வந்தித்து

வாலுகுத்த வண்கையிலைக் கோஞர்தம்மாமுடிமேற்
பாலுகுத்த மாணிக்குப்பண்டு எ

பண்டிதுவேய்ன்ருகிற்கேளீர்கொல்பல்சருகு
கொண்டிலிங்கத்தும்பினூற்கூட்டிழைப்பக் - கண்டு
நலந்திக்கெலாமேத்துங்காளத்திநாதர்
சிலந்திக்குச்செய்தசிறப்பு. அ

கூவுதலும்பாற்கடலேசென்றவணைக்கூடுகவென்
றேவினுன்பொற்கயிலேயெம்பெருமான் - மேவியசி
ருன்பாற்புலிக்காலன்பாலன்பாலாசையினற்
றுன்பாற்பால்வேண்டதனுந்தான். கூ

தொழுதகமனுந்தன்றூதுவர்க்குச்சொல்லும்
வழுவில்சீர்காளத்திமன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக்கண்டாற்பணிந்தகலப்போமின்க
ளெத்தனையுஞ்சேய்த்தாகவென்று. கo

திருச்சிற்றம்பலம்.

திருமுருகாற்றுப்படை.

நேரிசை வேண்பா.

திருச்சிற்றம்பலம்.

குன்றமெரிந்தாய்குரைகடலிற்சூர்தடிந்தாய்
புன்றலையபூதப்பொருபடையா - யென்று
மிளையாயழகியாயேசூர்ந்தானேறே
யுளையாயெண்ணுள்ளத்துறை க

குன்றமெறிந்ததுவுங்குன்றப்போர்செய்ததுவு
மன்றங்கமரிடர்தீர்த்ததுவு - மின்றெனக்கை
விடாநின்றதுவுங்கற்பொதும்பிற்காத்ததுவு
மெய்விடாவீரன்கைவேல். உ

வீரவேலுரைவேல்விண்ணேர்சிறைமீட்ட
தீரவேல்செவ்வேடிருக்கைவேல் - வாரி
குளித்தவேல்கொற்றவேல்சூர்மார்புங்குன்றுந்
துளைத்தவேலுண்டேதுணை. ங

இன்னமொருகாலெனதிடும்பைக்குன்றுக்குக்
கொன்னவில்வேற்சூர்தடிந்தகொற்றவா - முன்னம்

பனிவேய்நெடுங்குன்றம்பட்டிருவத்தோட்ட
தனிவேலைவாங்கத்தகும். ச

உன்னையொழியிவரருவமையுரம்புகிலேன்
பின்னையொருவரையான்பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பாவாளரொகொடியவினைதீர்த்தருளும்
வேலப்பாசெந்திவாழ்வே. ஞ

அஞ்சுமுகந்தோன்றிலாறுமுகந்தோன்றும்
வெஞ்சமரந்தோன்றில்வேறொன்று - நெஞ்சி
லொருகானினைக்கிலிருகாலுந்தோன்று
முருகாவென்றோதுவார்முன். ட

முருகனெனச்சிறுதலிவனமாயோன்
மருகனெனீசன்மகனே - யொருகைமுகன்
றம்பியென்னுடையதண்டைக்காலிற்பொழுது
கம்பமகற்றாழுவேனல். ண

திருச்சிற்றம்பலம்.

கபிலதேவநாயனர்

அருளிச்செய்த

மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

திருவார்குஞ்செய்கருநாகைகூட்டுஞ்செஞ்சொற்
பெருவாரக்கும்பீடும்பெருக்கு - முருவாரக்கு
மாதலால்வாரணமாமுகத்தானைக்
காதலாற்கூப்புவந்துள்கை. க

வாழைக்கனிபலவின்கனிமாங்கனிதாஞ்சிறந்த
கூழைச்சுருள்குழையப்பமெள்ளுண்டையெல்லாந்தூஉத்து
பேழைப்பெருவயிற்றேறுபுத்தென்னுளம்பிரியான்
வேழத்திருமுகத்துச்செக்கர்மேனிவிநாயகனே. உ

விநாயகனேவெவ்வினையைவேரறுக்கவல்லான்
விநாயகனேவேட்கைதணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்குமண்ணிற்குநாதனுடன்றன்பையினற்
கூண்ணிற்பணிபின்கனிந்து.

முன்னிளங்காலத்திலேபற்றினேன்வெற்றிமீனுயர்த்த
மன்னிளங்காமன்றன்மைத்துனனே மணிநீலகண்டத்
தென்னிளங்காய்களிறேயிமையோர்சிங்கமேயுமையா
டன்னிளங்காதலனேசரணுவுன்சரணங்களே. ச

வேட்கையினைமுடித்துமெய்யடியார்க்கின்பஞ்செய்
தாட்கொண்டருளுமரன்சேயை - வாட்கதிர்கொள்
காந்தாரமார்பிற்கமழ்தார்க்கணபதியை
வேந்தாவுடைத்தமர்வின். ஞ

நல்லூர்பழிப்பிலெழிற்செம்பவளத்தைகாணநின்ற
பொல்லாமுகத்தெங்கள்போதகமேபுரமூன்றெரித்த
வில்லானவித்தகனாயகனேயென்றுமெய்ம்மகிழ
வல்லார்மனத்தன்றிமாட்டாளிருக்கமலர்த்திருவே. சு

திருச்சிற்றம்பலம்.

பட்டணத் தூப்பிள்ளையார்

அருளிச்செய்த

கோயிஞன் மணிமாலை

திருச்சிற்றம்பலம்.

வெண்பா.

பூமேலயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவு
மேத்துகந்தான் றில்லே யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. க

கலித்துறை:

குடைகொண்டிவ் வையமெலாங் குளிர்வித்தெரிபொ
ற்றிகிரிப், படைகொண்டிகறெறும் பார்த்திவராவதிற் பைம்
பொற் கொன்றைத், தொடைகொண்டவார்சடை யம்பலத்
தான்றெண்டர்க் கேவல்செய்து, கடைகொண்டபிச்சை
கொண் டெண்டிங்குவாழ்தல் களிப்புடைத்தே. உ

கழிநெடில்விருத்தம்.

நெறிதருகுழலியறலென்பர்கணிழலெழுமதியநுதலெ
ன்பர்கணிலவினும்வெளிது நகையென்பர்கணிறம்வருகலச

மூலியென்பர்க, ளறிகுவதரிதிவிடையென்பர்க ளடியிணை
கமலமலரென்பர்க-ளவயவமிணையமடமங்கைய ரழகியரமை
யுமவரென்செய, மறிமழுவுடையகரனினீன்கிலர் மறலியை
மூனியுமானென்கிலர் - மதிபொதிசடிலதரனென்கிலர் மலி
மகண்மருவுபுயனென்கிலர், செறிபொழினிலவுதிலை யென்
கிலர் திருநடருனிலுமிறையென்கிலர் - சிவகதியருளுமரசென்
கிலர் சிலர்நரகுறுவரறிவின்றியே. ௯

கலித்துறை.

வாழ்வாகவுந்தங்கள்வைப்பாகவுமறையோர்வணங்க
வாள்வாய்திருத்தில்லையம்பலத்தாயுன்னியன்றியொன்றைத்
தாழ்வாதெறிவார்கடனஞ்சையுண்டிலையாகிலன்றே
மாள்வார்சிவனையன்றேதெய்வமாகவணங்குவதே. ச

கலித்துறை.

கொண்டல்வண்ணத்தவனுன்முகனிந்திரன்கோமகுடத்
தண்டர்பிண்டித்தொழும்பலக்கூத்தனுக்கன்புசெய்யா
மிண்டர்பிண்டித்திரிவாரெனக்கென்னினிகானவன்றன் [னே.
றொண்டர்தொண்டர்க்குத்தொழும்பூய்த்திரியத்தொடங்கின

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர்

மும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

காணீர் கதியொன்றுங் கல்லீரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேரிரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதன்நீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெனிதோ மருதப்பிரான்கழன் மேவுதற்கே. க

கட்டளைக்கலித்துறை.

வஞையார்பசிபின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிஞையார்தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வக்
கஞையாரரகுனக் கென்கடவார்பொன்னலர்ந்தகொன்றைத்
தஞையாரிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. உ

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகுதற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மினுநற்றொண்டுவக்கிலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனேன்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே.

தரித்தேன்மனத்துன்றிகழ்தருநாமந்தடம்பொழில்வாய்
வரித்தேன்முரல்கச்சியேகம்பனேயென்றன்வல்வினையை
யரித்தேனுனைப்பணியாதவரேழுமைகண்டவரைச்
சிரித்தேனுனக்கடியாரடிபூணத்தெளிந்தனனே.

வணக்கற்சிலைநின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோ
ரிணக்கன்றிமற்றொருணக்கறிவோமல்லம்வல்லரவின்
குணக்குன்றவில்லிருளிர்கச்சியேகம்பங்கூடினல்லாற்
கணக்கன்றுமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே.

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானிடருற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையென்றும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணரசனைத்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே.

அன்றும்பகையுடர்க்கும் பரிமாவுதவருனிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்றி
நன்றும்பொலியினுங்கம்பர்நன்னீறுநுதற்கிலரே
லென்றுமரசுமுரசும்பொலியாவினுலத்தே.

படையாலயிர்கொன்றதின்றுபகைவேர்போலச்செல்லு
நடையாலதிவின்றிநட்பிடைப்பொய்த்துக்குலங்களினுங்
கடையாய்ப்பிறக்கினுங்கச்சியேகம்பத்தெங்கோயா
ருடையானுக்குழற்சுன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே.

ஆலையங்கார்கருகாவைகச்சூர்திருக்காரிகரை
வேலையங்கேறுதிருவான்மியூர்திருவூறன்மிக்க
சோலையங்கார்திருப்போந்தைமுக்கோணந்தொடர்கடிக்கை
மாலையன்வாழ்திருவாலங்காடேகம்பம்வாழ்த்துமினே.

பாதம்பரவியொர்பித்தும்பிதற்றிலும்பல்பணியு
மேதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதபுன்சொற்பனுவல்களுமே
வேதம்பொலியும்பொருளாமெனச்சொல்வர்மெய்த்தொண்டரே.

திருச்சித்தம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்தம்.

திருச்சித்தம்பலம்.

இறையுக்கிதனிகிலர்கண்டுமெழிற்றில்லையம்பலத்தி
னறையும்புனற்செல்வியோடனருமாலன்றுசரிமே
லிறையும்புகழ்த்தருவாரூரனிகைதார்ப்பரிமே
னறையுங்கமழ்தாங்கல்லில்லவனுப்புக்கருவழியே. க

கன்கைவலம்பிடம்பூவலகுண்டலர்தோடிடப்பாற்
றன்குங்கரம்வலம்வெம்மழுவீசிடம்பாந்தள்வலஞ்
சங்கிடம்வலம்பேதாளிடபாடைவலமச்சிட
மங்குஞ்சரியும்பலவன்வலங்காணிடமனங்கே. உ

பொன்னம்பலத்தமரர்ணியவெனம்பாற்புயல்மறுத்த
கன்னன்மைநீரப்புனிற்றுக்களிக்காமற்கன்றுபுன்கூர்
மன்னுமழுபொழிந்தூறுவேவலிகொண்டாங்கவற்றே
பின்னுப்பிழைதவிர்த்தூறுவேவலிகொள்பிஞ்ஞகனே. ங

தனந்தலைசக்கரம்வானத்தலைமைதுபேரன்றக்கன்
வனந்தலையேறடர்த்தோன்வாசவனுயிர்பல்லிடவூர்
கினந்தலைகாலன்பகல்காமன்முனைவர்தில்லைவிண்ணோ
ரினந்தலைவன்னருளான்முனிவாற்பெற்றிகந்தவரே. ச

வருவாசகத்திலின்முற்றுணர்ந்தோரிவண்டில்லைமன்னைத்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்
பொருள்ளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
தெருளாதவள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே. ஞ

புல்லறிவின்மற்றைத்தேவரும்பூம்புலியூருளின்ற
வல்லெறிமாமதிக்கண்ணியனீப்போலருளுவரே
கல்லெறிந்தானுந்தன்வாய்நீர்கதிர்முடிமேலுருத்த
நல்லறிவாளனுமீளாவழிசென்றுநண்ணினரே. கூ

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

அருட்டுறையத்தற்கடிமைப்பட்டேனினியல்லனென்னும்
பொருட்டுறையாவதென்னேயென்னவல்லவன்பூங்குவளை
யிட்டுறைநீர்வயனுவற்பதிக்கும்பிரானடைந்தோர்
மருட்டுறைநீக்கிநல்வான்வழிகாட்டிடவல்லவனே. க

திருநாவுக்கரசுநாயனார்.

நற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தன்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றப்பிறப்பறவீரட்டர்பெய்கழற்கு
ஞற்றவுறற்றனிடமடையாரிடவொள்ளமுதாத்
தூற்றவுணூரினுவக்கரசெனுந்தூமணியே. உ

மண்ணியிணைமாமணிக்காட்டுமருந்தினைவண்மொழியார்ற்
றிணியனகீள்கதவந்திறப்பித்தனதெண்கடலிற்
பிணியனகன்மிதப்பித்தனசைவப்பெருநெறிக்கே
யணியனநாவுக்கரையர்பிரான்றனருந்தமிழே. ங

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வையமகிழயாம்வாழவமணர்வலிதொலைய
வையன்பிரமபுரத்தாற்கம்மென்குதலைச்செவ்வாய்
பையமிழற்றும்பருவத்துப்பாடப்பருப்பதத்தின்
றையலருள்பெற்றனைனென்பர்ஞானசம்பந்தனையே. ச

பந்தார்விரலியர்வேள்செங்கட்சோழன்முருகனல்ல
சந்தார்மகலத்துநீலருக்கன்பெயர்தான்மொழிந்து
கொந்தார்சடையர்பதிகத்திலிட்டடியேன்கொடுத்த
வீந்தாதிகொண்டபிரானருட்காழியர்கொற்றவனே. ஞ

சேரமான்பெருமாணாயனார்.

மன்னர்பிரானெதிர்வண்ணனுடலுவரூதிநீறர்
தன்னர்பிரான்றமர்போலவருதலுந்தான்வணங்க
வென்னர்பிரானடிவண்ணனெனவடிச்சேரனென்னுந்
தென்னர்பிரான்கழறிற்றறிவானெனுஞ்சேரலனே. ௫

சேரர்க்குத்தென்னவலர்பெருமாற்குச்சிவனளித்த
வீரக்கடகரிமுன்புதன்பந்தியிவுளிவைத்த
வீரற்குவென்றிக்கரும்புலிவீரனெவற்றிகொண்ட
சூரற்கெனதுள்ளகன்றுசெய்தாயின்றுதாண்டுபட்டே. ௭

சுந்தரமூர்த்திநாயனார்.

கூற்றுக்கெவனேபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றுத்தொடைபலுமின்னடைக்காயுமிடுதருபக் [மை
கோற்றொத்தகுனலுங்கூன்போய்க்குருடனுங்கண்பெற்ற
சாற்றித்திரியும்பழமொழியாமித்தரணியிலே. ௮

கொடுத்தான்முதலைகொள்பிள்ளைக்குயிரன்றுபுக்கொளியூர்
தொடுத்தான்மதகரியையிரசியையேவடர்சுற்றம் [த்
படுத்தான்றிருமுருகன்பூண்டியினிற்பரமபாத்தேன்
மடுத்தானவனென்பர்வன்றொண்டனுகின்றமாதவனே. ௯

ஞானவாரூரைச்சேரையல்லதுநாமறியோ
மானவவாக்கையொடும்புக்கவரைவளரொளிப்பூண்
வானவராலுமருவற்கரியவடகயிலைக்
கோனவன்கோயிற்பெருந்தவத்தோர்தங்கள்கூட்டத்திலே.

திருச்சிற்றம்பலம்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

மேனட்டமர்தொழிருப்பாரும்மினைப்பயன்க
டானாட்டருநரகிற்றளர்வாருந்தமிழ்தங்கள்
கோனட்டருகர்குழாம்வென்றகொச்சையர்கோன்கமலப்
பூநாட்டடிபுணர்ந்தாருமல்லாற்புலையருமே. ௧

அணங்கமர்யாழ்முரித்தாண்பணைபெண்பணையாக்கியமண்
கணங்கழுவேற்றிக்கடிவிடந்தீர்த்துக்கதவடைத்துப்
பிணங்கலிரதிசோடஞ்செலுத்தினவெண்பிறையோ
டிணங்கியமாடச்சிரபுரத்தான்றனிருக்தமிழே. உ

வயலார்மருகற்பதிதன்னில்வாளராவாற்கடியுண்
டயலாவிழுந்தவவனுக்கிரங்கியறிவழிந்த
கயலார்கருங்கண்ணிதன்றயார்தீர்த்தகருணைவெள்ளப்
புயலார்குருகைபிரானன்னத்தீதான்றிடும்புண்ணியமே. ஊ

பாடியஞ்செந்தமிழாற்பறங்காபுரியில்பெற்ற
நீடியசீர்த்தி நாராணசம்பந்தனிறைபுகழா
லோடியடர்ந்தி நாரதக்காசோடழின்மிழலைக்
கூடியகூட்டத்தினுளதாய்த்திக்துவல்லமே. எ

முத்தனவெண்ணகையார்மய மாமாற்றிமுறைவாழவா
லெத்தணைகாலினிற்றுத்துயரிலுலொன்பணிந்த
பித்தனையெங்கள்பிரானைப்பெளிதாகண்டு
ரத்தனைஞானசம்பந்தனைப்பாதமலைத்தவர்க்கே. ஏ

திருச்சிற்றம்பலம்.

ஆருடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

நேரிசை வெண்பா.

அரியோடு நான்முகத்தோ னதிகார்க் கெல்லாக்
கெரியாமை நெக்குழலாய் நின்ற—வொருவீன்சீர்
தன்றலையின் மேற்றரித்த சம்பந்தன் முளரிணைக
ளென்றலையின் மேலிருக்க வென்று. க

கட்டளைக் கசுத்துறை.

என்று மடியவ ருள்ளத் திருப்பன விவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன வொண்கலியைப்
பொன்றும் கமுணியன் சைவசிகாமணிபொன்னடியே. உ

நேரிசை வெண்பா.

நிலத்திற்கு மேலாறு நீடுலகத்தச்சித்
தலத்திற்கு மேலிதா னென்பர்-சொலத்தக்க
சுத்தர்கள்சேர் காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பத்தர்களும்போய் வாழும்பதி. ௯

கட்டளைக்கலித்துறை.

பதிகம் பலபாடி நீடிய பிள்ளை பரசுதரற்
கதிகம் மனுக்க னமணர்க்குக்கால வைதரித்த
மதியந் தவழ்மாட மாளிகைக் காழியென் றுல்வணங்கா
சொதியம் பணிபோல் விழுவரந் தோசில வுரார்சிலே. ௮

நேரிசை வெண்பா.

பிறனியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறனியெனுந் தோற்றோணி கண்மார் - நிறையுகிற்
பான்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
றன்மாலை ஞானத் தமிழ். ௯

நேரிசை வெண்பா.

மலைத்தலைக்கண் மீதேறி மாதவங்கள் செய்து
முலைத்தலைங்க ணீத்தாலு மூப்பர் - கலைத்தகலவன்
சம்பந்தற் காளாய்த் தடங்காழி கைகூப்பித்
தம்பந்தந் தீராத தாம். ௯

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை.

திருச்சிற்றம்பலம்.

புலனெடாடித்திரிமனத்தவர்பொறிசெய்காமத்தீதிசட
க்கியபுனிதநேசத் தொழிதமக்கையர் புனர்வினையற்றுரை
செயக்கூடர், சுலவுசூலப்பிணிகெடுத்தொளிர்சுடிவெனநீட்
டமணகற்றிய துணிவினன்முப் புரமெரித்தவர் சுழலிலேபட்
டிடிதவத்தின, ருலகின்மாயப்பிறவியைத்தருமுணர்விலாவ
பெருமயக்கினை யொழியவாமிமைக் கவிதையிற்பல வுரிமை

கப்பொருள்பரப்பிய, வலகின்ஞானக்கடலிடைப்படுமமிர்
தயோகச்சிவவொளிப்புகவடியரேமுக் கருளிஞேச்செபுமரைய
தேவத்திருவடிக்களே. க

திருநாவுக்கரசடியவர்நாடற்கதிதிதெளிதேனெத்தி
னியுசொன்மடவாருர்ப்பசிமுதல், வருவானத்தீவையர்
நடமாடிச்சிலசில வசியாகச்சொலுமவை துகளாகக்கருதி
மெய், யுருஞானத்திரண்மனமுருகாநெக்கழுதகண்ணுழுவா
ரப்படைகையிலுடையான்வைத்தனதமிழ், குருவாகக்கொடு
சிவண்டிசூடத்திரிபவர் குறுகார்புக்கிடர்படு குடர்யோனிக்
குழியிலே. உ

இலமாடென்றிடர்பூரியாரிந்திரனேயொத்தாறுகுறை
வற்றூலு, நிலையர்திச்செல்வமெனவேகருதுவர்நீள்சன்மக்கட
லிடையிற்புக், கலையார்சென்றரனெறியாகுங்கரையண்ணப்
பெறுவர்கள்வண்ணத்திண், சிலைமாடந்திகழ்புகழாமூருறை
திருநாவுக்கரசென்போரே. ங

பதிகமெழுநூறுபகருமாகவியோகிபரசுநாவரசான
பரமகாரணவீச, னதிகைமாநகர்மேவியருளினலம்மூடரவ
ர்செய்வாதைகடீருமனகன்வார்கழல்சூடி, னிதியராகுவர்சிர்
மையுடையராகுவர்வாய்மைநெறியராகுவர்பாவம்வெறியரா
குவர்சால, மதியராகுவரீசனடியராகுவர்வானமுடையராகு
வர்பாரின்மனிதரானவர்தாமே. ச

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாந்திருமுறை.

சேக்கிழார் நாயனார்

அருளிச்செய்த

திருத்தொண்டர் புராணம்.

திருச்சிற்றம்பலம்.

பாயிரம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். ௧

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாந டஞ்செய் வரதர்பொற் றாடொழு. ௨

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்தி னிருத்துவாம். ௩

பிதிவ்ளர் சடைமுடி மன்று ளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல நுகர்தரு புனிதர் பேரரை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே. ௪

திருமலைச்சிறப்பு.

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவ
ரெண்ணிலார் மற்றும், காதலான் மிடைந்த முதற்பெருந்
தடையாங் கதிர்மணிக் கோபுரத்துள்ளான், பூதலவே தாளப்
பெருங்கண நாதர் போற்றிடப் பொதுவினின் றாடு, நாதனு
ராதி தேவனூர் கோயி னூயக னந்தியெம்பெருமான். ௫

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மேனிய ரநேகர், பெற்றமேல் கொண்ட தம்பிரா னடியார் பிஞ்சகன் றன்னருள் பெறுவார்; மற்றவர்க் கெல்லாந் தலைவ

யாம் பணியு மலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங், கற்றை வார் சடையா னருளினுற் பெற்றுன் காப்பதக் கயிலேமால் வரைதான்

மநுநீதிகண்ட புராணம்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்
தண்ணலவன் கண்ணைதிரே யளிவீ நி மழவிடைமேல்
விண்ணவர்க டொழுதின்றுன் வீதிவிடங் கப்பெருமான். ௭

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலு
மிடம்நுங்கி னிலையாரு மெம்மருங்கும் பூதகணம்
புடைதெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.

அந்திலையே யுயிர்பிரிந்த வாவின்று மவ்வரசன்
மன்னிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழுவு
மின்னபரி சானனென் றுரிந்திலனேல் தனுமார்க்கு
முன்னவனே முன்னின்றுன் முடியாத பொருளுளதோ. ௯

தடுத்தாட்கொண்ட புராணம்.

கொத்தார்மலர்க் குழலாளொரு கூறுயடி யவர்பான்
மெய்த்தாயினு மினியானெயவ் வியனுலகர் பெருமான்
பித்தாபிறை குடியெனப் பெரிதாந்திருப் பதிக
மித்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார். ௧0

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்னுளமா லையன் றேட, வையர்தாம் வெளியே யாடுகின் றுரை யஞ்சலி மலர்த்திமுன் போற்றுங், கைகளோ தீண்டித் கண்களோவ ருதக் கருணையோ கலந்தவன் பத்தர், செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் றிருக்கனிற் பிப்படிமருங்கு.

ஐந்தலே றறிவிங் கண்களோ கொள்ள வளப்பருங் கரணங்க ணான்குஞ், சிலதையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துலகமே யாக, விந்துவாழ்சடையா னுடுமாலைத் வெள்ளியி னுலிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்பவெள்ளத்துட் டூளைத்து மாலினா பகிழ்ச்சியின் மலர்த்தார்.

'தெண்ணிலாமலர்த்த வேணியா யுன்றன் றிருவடங்கும் பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே யெனக்குவாழி

தா மின்பமாமென்று, கண்ணிலா னந்த வருவிசீர்சொரியக்
கைம்மல ருச்சிமேற் குளித்துப், பண்ணினு னீடியறிவரும்
பதிகம் பாடினர் பரவினர் பணிந்தார். கஙூ

வேத வாரண மேல்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொ றுத்தாண்டன
வேத மானவை தீர்க்க விசைந்தன
பூத நாதனின் புண்டரீ கப்பதம். கச

திருவிலைவாழ்ந்தநாயனார் புராணம்.

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் திருவிலைப் பொதுநடம் போற்றிபோற்றி.

சுற்றிய சுடர்ந்த சோதி கருணையே யுருவ மாகி
யற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிறபர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ளின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

இயற்பகைநாயனார் புராணம்.

சொல்லுவதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்த நளி யென்னை வழித்தொண்டு கொண்டாய்போற்றி
யெல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
திருவிலையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன. கஅ

இளையான்குடிமாறநாயனார் புராணம்.

கொண்டு வந்து மனைப்பற் குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னுதை னத்திடை வைத்த நுச்சினை செய்தபி
னுண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தன வொப்பிலா
வண்டர் நாயகர் தெரிண்ட நிச்சையினமுதுசெய்யவளித்துளார்.

பெயிப்பொருணயனார் புராணம்.

தேடிய மாடு நீடு செல்வமுஞ் சிவ்லை மன்று
ளாடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்.

அமர்நீதிநாயனார் புராணம்.

மலர்மிசை யயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூரா வணப் பழமை காட்டி

யுலகுய்ய வாண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைநிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும். உக

கண்ணப்பநாயனார் புராணம்.

மாகமார் திருக்கா ளத்தி மலையொழ கொழுந்தா யுள்ள
வேகநா யகரைக் கண்டா மொழுந்தபே ரருவை யன்பின்
வேகமோ னதுமேற் செல்ல மிக்கதோர் விசைவி னோடு
மோகமா யோடிச் சென்றார் தாழவிழுந் மோந்து நின்றார்.

பேறினி யிதன்மே லுண்டோ பிரான்றிருக் கண்ணில் வந்த
வூறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
யேறுயர்த்தவர்தங்கையாற்பிடித்துக்கொண்டென்வலத்தின்
மாறிலாய் நிற்க வென்று மன்னுபே ரருள்புரிந்தார். உசு

அரிவாட்டாயநாயனார் புராணம்.

அடியனே னறிவி லாமைகண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமலில் வந்திங் கழுதுசெய் பரமே போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதிபோற்றி
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி.

ஆனாயநாயனார் புராணம்.

ஆனயர் குழலோசை கேட்டருளி யாருட்கா ருணை
தானைய திருவுள்ள முடையதவ வல்லியுடன்
காளைதி காரணராய் கண்ணுதலார் விடைபுகைத்து
வானுறு வந்தணந்தார் பதிகரமுஞ் சடைதாழ. உச

திசைமுழுதுந் கீணைநாதர் தேவர்கட்கு முன்னெ ருங்கி
யிசைமிடைந்து வருமொழுது வேற்றிறலிகள் விரவாமே
யசையவெழுங் குழலைத் தஞ்சொழுத்தாற் றமைப் பரவு
மிசைவிரும்புங் கூத்தனை மொழுந்தருளி யெதிர்கின்றார். உஞ

தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர்தம்மைக்
காதுகொள் குழைகள் வீசுங் கதிர்ச்சில விருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க மணியிடை யிருகாற் செல்லத்
தூதுகொள் பவரா கம்மைத்தொழும்புகொண் டிரிமைக் கொல்வார்.

கிருநாவுக்கரசுநாயனார் புராணம்.

இன்னதரு மிழிபிறவி யிதுதகடையென் றேதுயில்வா
ரந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாங் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முழுவலொடு மருள்செய்வார்.

திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
தள்ளு வார்புனல் வேணியா ருருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையி னுகமத் திறனெலாந் தெரிய
வுள்ள வாறுகேட் டருளினு ளுலகையா ளுடையாள். உஅ

எண்ணி லீரகம மியம்பிய விறைவர்தாம் விரும்பு
முண்மை யாவது பூசனை யெனவுளத் தருள
வண்ண லார்தமை யர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. உக

கங்கை யுண்ணிறை சாதலே நோக்கி நாய கன்றிரு வுள்
ளத்து மகிழ்ந்தே, யங்கணெய்தியமுறைவலுத்தோன்றவடுத்த
தென்கொனின்பாலென வினவ, விங்குநாதரே யொழிந்தவா
கமத்தி னியல்பி னுலனை யர்ச்சனை புரியப், பொங்குகின்ற
தென் னுசையென் றிறைஞ்சிப் போக மார்த்தபூண்முலையினு
ளெபோற்ற. கூ

நெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி நிரந்த ரந்திரு
வாக்கினி னிகழ்வ, தஞ்செ ழுத்துமே யாகவாளுடைய வம்
மை செம்மலர்க்கைகுளித் தருளித், தஞ்சமாகிய வருந்தவம்
புரியத் தரிப்ப தோவ டனிப்பெருங் கனவர், வஞ்ச நீக்கிய
மானின்மூ லத்தில் வந்து தோன்றினர் மலைமகள் காண. கூக

கொய்த பன்மல ரும்பையாகதியிற் குலவு மஞ்சனவி
தியெய்ப் பூசீ, செய்த வருள்கொழுந் தீபதூபங்க ணிறைந்த
திக்கையி னீடிய வன்பிற், மெய்த நுமபடி வேண்டின வெல்
லாம் வேண்டும் போதினி லுதவுமெய்ப்பூசை, யெய்தவாகம
விதியெலாஞ்செய்தாரூபிர்கள்யாவையுமீன்றவெய்பிராட்டி.

சுரந்த நும்பயன் றுதவென வுணர்ந்து சுப்ப மேனிய வும்
பர்கா யகர்பா, னிரந்த காதல்செ யுள்ளத்த ளாகி நீடி ருன்
மைக ளியாவையும் பெருக, வரந்த நும்பொரு ளாமலி
வல்லிமாறி லாவகைமலர்ந்ததே ரன்பாற், சிரம்பணிந்தெழு
பூசைநா டோறுந் திருவு ளங்கொளப் பெருகிய தன்றே.

சண்டேசுரநாயனார் புராணம்.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிபனுக்கி யலைத்
தரசு, முண்ட கலமு முடுப்பனவுஞ்சுமவனவுமுனக்கீர்கச்,
சண்டீ சனுமாம் பதந்தந்தேது மென்றங் கவர்பொற் றூ

முடிக்குத், தண்ட பதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். கூச

நேச நிறைந்த வுள்ளத்தா னீல நிறைந்த மணிகண்டக், தீசனடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழ வெடுத்துத், தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவ்வாளன், வாச மலர்மென் கழல்வணங்க வந்தபிறப்பை வணங்குவாம். கூடு

திருநாவுக்கரசுநாயனார் புராணம்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகி
லொருநாவுக் குரைசெய்ய வொண்ணுமை யுணராதேன்.

நீற்றுணிறை வதிரு மேனியுட னிறையன்புறு சிந்தையினேசமிக, மாற்றுரை கடந்தமாற்றிய வேதியரை மருளுறப்பிணி மாயை யறுத்திடுவான், கூற்றுயின வாறு விலக்கவிலே னென நீடிய சோதி திருப்பதிகம், போற்றுலகேழின் வருந்துயரும் போமாறெதிர் நின்று புகன்றனரால். கூஎ

மையற்றுறை யேறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன், பெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே, யெய்துற்ற தியான மருவுணர்வு மீறின்றி யெழுந்திரு வாசகமும், கையிற்றிக ழும்முழ வாமுடனே கைக்கொண்டு களித்து கலந்தனரே. கூஅ

இருவினைப் பாசமு மலக்க வரித்தலின்
வருபவக் கடலிவ்வீழ் மாக்க ளேறிட
வருளுமெய் யுஞ்செழுத் தரசை யிக்கட
லொருகன்மே லேற்றிட லுலைக்க வேண்டுமோ கூக

கையுந் தலைமிசை புனையுஞ் சலியன கண்ணும் பொழிமழை யொழியாதே, பெய்யுந் தகையன கரணங் களுமுட லுருகும் பரிவின பேறெய்தி, மெய்யுந் தமைமிசை விழுமுன் பெழுதரு மின்றுழ் சடையொடு நின்றுடி, மையன் றிருநட மெதிர்கும் பிடிமவ ராவம் பெருகுத லளவின்றால். சஅ

அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா மன்பு செறீ கடலுமா மெனவுமோங்கும், பொருட்சபய முதற் றுசவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும்

புவன முய்ய, விருட்கடவுண் டவாருரு மூலக மெல்லா மீண்
ரூடன் றிருவாருரு மென வுங்கூடித், தெருட்கலைஞா னக்
கன்று மரசுஞ் சென்று செருத்தடைவானவர்கோயில் சேர்ந்
தா ரன்றே. சக

கன்மைபெரு கருணைறியே வுக்கணைத்த கல்லாரின்
மன்னுதிருத் தொண்டனர் வணங்குமடிற்றொழும்பொழுதி
லுன்னுடைய கிளைப்பதனை முடிக்கின்றே மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினனே சிவபெருமான். சஉ

அண்ணா லேயினை யாண்டுகொண் டாருளிய வழுதே
விண்ணி லேமறைக் காடாளீ லேகுகா யகனே
கண்ணி னுற்றிருக் கயிலைப ரு மான் கோல
நண்ணி நான்றெழு நயந்த நல பயன் னப் பணிந்தார். சஙு

வெள்ளி வெற்பின்மேன் மரதகக் ட்டியுடன் விளங்குஞ்
செள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
கொள்ளு மாமலை யாருடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கணடனர் வாக்கின்மன் னவனுர். சச

மண்முகலா முலகேத்த மன்னுதிரு நாவண்டகுத்தைப்
புண்ணியா வளனடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவரை செய்தினர். சஙி

காரைக்காலம்மையார் புராணம்.

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றூர்
பிறவாமை வேண்டி மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டு மின்னுமை வேண்டு நான்மகிழ்ந்தா பாடி
யறவாநீ யாடுமை போலுன் னடியின்கீ ழிருக்க வென்றூர்.

நமிநந்தி யடிகளையனூர் புராணம்.

நாட்டார் றிய முன்னளி னன்னு ளுலந்த வைம்படையின்
பூட்டார் மாற்பிற் சிறியமறைப் புதல்வன்றன்னைப்புகொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கட் டனிமா முதலிவாய்கின்று
மீட்டார் கழல்க ணினைவாரை மீளா வழியின் மீட்பவே.

திருஞானசம்பந்தநாயனூர் புராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தமுத

சிதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். சுஅ

அவம்பெருக்கும் புல்லறிவி னாமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைதெறிகள் பாழ்படநல் லாழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாளிசரா சாங்கலொளாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். சுக

சிவனடியே சிந்திக்குந் திருப்பொருகு சிவஞானம்
பலமதனீ யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலிஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரன்றியிலை. நுo

செம்மைபெறு வெடுத்தபுய வெல்லாடையு செளியனெனு
மெய்ம்மைமொழித் திரு[illegible]திகம் பிரமபுர மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன் சாற்றித் தாதையார்க்
கெம்மையிது செய்தபிரா னிவனன்றே யெனவிசைத்தார்.

கையதனு லொற்றறுத்துப் பாடுதலுங் கண்டருளிக்
கருணை கூர்ந்த, செய்யதடை வானவர்த மஞ்சொழுத்து மெ
ழுதியநற் செம்பொற் றுளை, யையாவர் திருவருளா லெடுத்த
பா டலுக்கிசைந்த வளவா லொற்ற, வையமெலா முய்யவரு
மறைச்சிறுவர் கைத்தலத்து வந்ததன்றே. நுஉ

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்தபார்
டீது தாழ்ந்தெவ்வெ னீற்றொளி போற்றிதின்
ரூதி யாரரு ளாதலி னஞ்சொழுத்
தோதி யேறினை ருய்ய வுலகெலாம். நுக

சிந்தையிடை யறவன்புந் திருமேனி தனிலைசவுங்
கந்தமிசை யாங்கருத்தின் கையுழுவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய. நுசு

கண்டகவு ணியக்கன்றுங் காருத்திற்பாவு மெய்க்காதற்
றொண்டர்திரு வேடகேரே தோன்றியதென் றுதொழுதே
யண்டரும்போற் றவணைந்தங் கரசுமெதிர் வந்திறைஞ்ச
மண்டியவார் வம்பெருக மதுரமொழி யருள்செய்தார். நுஎ

சென்றதா லத்தின் பழுதிலாத் திறமு மினியதிர் கா
லத்தின் சிறப்பு, மின்றொழுந் தருளப் பெற்றபே றிதனு லெ
ல்லைக்குந் திருவரு ளுடையோ, ரன்றியி னெளியி ளழுந்திய

காடு நற்றமிழ் வேந்தனு மூய்ந்த, வென்றிகொ டிருநீற் றெ
னியினில் விளங்கு மேன்மையும் படைத்தன மென்பார்.

ஞானத்தின் நீருவருவை நான்மறையின் றனித்திணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்சீர்தெரிக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

ஆலமே யமுத மாக வண்டுவா னவர்க்க ளித்தக்
காலனே மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை யடியேற் கின்
ஞாலநின் புகழே யாக வேண்டுகான் மறைக ளேத்துஞ்
சிலமே யாலவாயிற் சிவபெரு மானெ யென்றார். நிஅ

மண்ணி னீற்பிறங் தார்பெறும்பயன்மதி சூடு
மண்ண லாரடி யார்தமை யழுதுசெய் வித்தல்
கண்ணி னிலவர் கல்விழாப் பொலிவுகண் டார்த
லுண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். நிக

ஞானமெய்க் கெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்சொலாமென்
ஞானசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை யங்கண்
வானமு நிலனுங் கேட்க வருள்செய்தி மணத்தில் வந்தோ
ரீனமாம் பிறவி நீர யாவரும் புகுக வென்ன. கூ

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகா ணுதை முந்தி
யுருவெனுங் தயைக் கூட்டி யுணர்வின்றி மயங்கு வார்க
டிருமணத் திடன்சே வித்து முன்செலுஞ் சிறப்பி னுலே
மருவிய பிறவி நீங்க மன்னுசோ தியினுட் புக்கார் கூக

சோமாசிமாறநாயனார் புராணம்.

பணையுந் தடமும் புடைசூழ மொர்றி யூரிற் பாகத்தோர்
தணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானுரை
யிணையுங்கொங்கைச்சங்கிலியாரெழின்மென்பணைத்தோளெய்தவிக்க
வணையு மொருவர் சரணமே யரண மாக வடைந்தோமே.

சாக்கியநாயனார் புராணம்.

கல்லாலே யெறிந்ததவு மன்பான படிகானில்
வில்வேடர் செருப்படியுக் திருமுடியின் மேனிற்ற

னல்லார்மற் றவர்செய்கை யன்பாலே நயந்ததனை
யல்லாதார் கல்லென்பூ ரரனுர்க்கஃ தலராமால் ௬௬

சேரமான்பெருமாணயனுர் புராணம்.

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்த மணித்தூபந
தேசித்தீபருகுஞ் செழுந்தீப முதலா யினவுந் திருவமுது
மீசற் கேற்ற பரிசினு லநுச்சித் தருள வெங்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர்பொற்பார் சிலம்பி னெலியளித்தார்.

கூற்றுவநாயனுர் புராணம்.

தேனுங் குழலும் பிழைத்தருநு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்குஞ் சடையார்தாது தருநிருநாட்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவுமலர்ப்பபாதம
யானும் பரவித் தீர்க்கின்றே னேழபிறப்பின் முடங்குகூன்.

ஐயடிகள்காடவர்கோனயனுர் புராணம்.

ளைத்திலொரு தளைச்சமிலோ முலகுய்ய விருண்டதிருக்
களத்துமுதை குன்றர்தரு ஞனகமாற் றினிலிட்டு
வளத்தின்மலிந் தேழுலகும் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத் தார்வினபின் குழிவாய்நின் றெனையெடுத்தார்.

வாயிலார்நாயனுர் புராணம்

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
யுறவாதி தனியுனரு மொளிவிளக்குச் சுடரேற்றி
யிறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

முனைநாடுவார் நாயனுர் புராணம்.

செறிவுண்டென்று திருத்தொண்டிற் சிந்தை செல்லும்
பயனுவக்குங், குறியுண் டென்று கிலுங்குறையொன்றில்லோ
நிறையுண் கருணைபினல், வெறியுண் சோலைத் திருமுருகன்
பூண்டி வேடர் வழிப்பறிக்கப், பறியுண் டவரெம்பழவினை
நோய் பறிப்பா ரென்னும் பற்றுலே. ௬அ

கோட்புலிநாயனுர் புராணம்.

மேவரிய பெருந்தலம்யான் மூன்புவிகொத் தனவென்னை
யேவுதிமோர் பொருளல்லா வெண்மனத்து மன்றியே

காவலர்கா வலர்பொருகு நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினு மலர்ந்தனவரல்.

அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்.

செற்றார்தம் புரமெரித்த சிலையார் செல்வத் திருமுரு கன் பூண்டிளிற் செல்லும் போதிற், சுற்றாநஞ் சிலேவடர் கவர்ந்து கொண்ட தொகுதிபின் பரப்பெல்லாஞ் சுமந்து கொண்டு, முற்றுத முலைபுமையாள் பாகன் பூத முதற்கணமே யுடன்செல்ல முடியாப் பேறு, பெற்றார்தங் கழல்பரவ வடியேன் முன்னைப் பிறவியினிற செய்ததவம் பெரியவாறே.

மங்கையர்க்கரசியார் புராணம்.

மங்கையர்க்குத் தனியரசி யெங்க டெய்வம் வளவர்தி ருக் குலக்கொழுந்து வாழ்க்கை மானி, செங்கமலத் திருமட ந்தை கன்னி நாடா டென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப்பா வை, யெங்கள்பிரான் சண்பையர்கோ னருளி ஞலேயிருநத் மிழ்நா டுறறவிடர் நீக்கித் தங்கள், பொங்கொளிவெண்டிரு நீறு பரபபி ஞரைபபோற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே. எக

வெள்ளானைச்சருக்கம்.

அடிய னோன்பிழை பொறுத்தெனை யாண்டுகொண்டத் தொட்க் கினேற்கி, மூடிவி லாதெறி தருபெருங் கருணை யென் றாத்ததோ வெனமுன்னர்ப், படியு நெஞ்சொடுபன் முறை பணிந்தெழும் பாமபரை யானைத, வடிவ நின்றது போன்றின்ப வெள்ளத்து மலர்ந்தவர் வன்றொண்டர்.

எண்ணு மின்பம் பெருகு மியல்பிறை
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மண்ணு ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாப. எங

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ சமய பக்தஜன சபை.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
அதிசெயு நாயன்மார்த் தூய சொன்மலர்ப்
பொதிகல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

திருச்சிற்றம்பலம்.

1. சபைஸ்தோற்றம்.—இச்சபையானது ஆபிரவர்கள் சிலர்,

"மானுடப் பிறவிதானும் வருத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந்துமாடும் அரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனியர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊடர் ஒன்றையு முணரா ரன்றோ."

என்பதை ஒரு சிறிது மோராது பாற்கடலுட் பிறந்த மீன்கள் அப்பாலேயுண்ணுது வேறுசிலவற்றை உண்ணுவது போலப் பிறவிப்பெருங்கடலினின்றும் எடுத்து முத்தித்தட கரையேற்றும் பதிநூலாகிய தமிழ்வேதபடன முதலியசெய்யாது வேறு பல பசு நூல்கற்று, வறிதே வாணாள் வீணாக்கி வாழ்த்த வாயும நினைக்க மடநெஞ்சும், தாழுந்தசென்னியும் தங்கலேவணங்,சூழ்த்தமா மலர்கொண்டு தூவித் தொழியாதே, வீழ்த்த வாளினையே னெடுங்காலமே.' என்னும் திருவாக்குக்கு இலக்காகின்றோமே! இனைப்போதாயினும் நாம யாவரும் ஒன்றுகூடி வழிபாடுசெய்து உய்தலாகுமே என்று எண்ணி, தமிழ்வேதப்பயிற்சியும் விஷயப்பயிற்சியும் செய்யும்படி 1904வது நவம்பர் மீ 17உ க்குச் சரியான தமிழ் குரோதிவரு கார்த்திகைமீ 3உ குருவாயூரப்பகுரு ஸ்வாமிக் தடங்கடலாகிய ஸ்ரீ சிவபெருமானுடைய திருவருட் பிரேரேபணையை முன்னிட்டு சைவ சமய பக்தஜன சபை என்னும் பெயரின் தாபிக்கப்பட்டது.

2 பெயர்.—தமக்குமேல வேறொரு ஆப்தரில்லாத அதி புராதனரான ஸ்ரீசிவபெருமானுடைய திருவருளாணைகொ